# ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்

## (சாதனா முறைகள்)



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம் |
| ஆசிரியர் | : | ப்ரக்ஞன் [Prajnan] |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| நூல் அளவு | : | A4 |
| முதற்பதிப்பு | : | 2020 |
| பக்கங்கள் | : | 79 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்

(சாதனா முறைகள்)

ஆசிரியர்

ப்ரக்ஞன்

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அகிம்சை (துன்புறுத்தாமை) | 14 |
| 2. | சேவை (பரோபகாரம்) | 22 |
| 3. | அர்ப்பணிப்பு (சரணாகதி) | 30 |
| 4. | தூய்மை (மெய்யுணர்தல்) | 36 |
| 5. | மந்திரம் (மனதின் திரம்) | 41 |
| 6. | தந்திரம் (உபாயம்) | 46 |
| 7. | யந்திரம் (உடல்) | 52 |
| 8. | விசாரம் (பகுத்தறிவு) | 61 |
| 9. | சுயமுணர்தல் (ப்ரக்ஞை) | 70 |
| 10. | நிர்வாணம் (அவதூதர்) | 74 |




ஸ்ரீ தத்தாத்ரேயர்



## குரு வணக்கம்

நிர்குண வடிவான பரப்பிரம்மத்தின் அவதாரமும், அனைத்து படைப்புக்கும், இருப்புக்கும், ஒடுக்கத்துக்கும் ஆதாரமானவரும், முத்தொழிலைப் புரிபவரும், ஒன்றேயான ஆகாய தத்துவமானவரும், மகாவாக்கியத்தின் மிக உயரிய அறுதி உண்மையை அனைவருக்கும் உணர்த்தியவரும், **"தத்வமஸி"** (நீயே அது!) என தன்னையே எல்லாவற்றிலும் காண்பவரும், கருணை வடிவானவரும், நித்தியமானவரும், உத்தமரும் ஆகிய அவரே, நம் எல்லோரிடமும் எழுகின்ற எண்ணங்களுக்கும், அந்தக்கரணங்கள், புறக்கரணங்கள் மற்றும் முக்குணங்களின் மாற்றங்கள் என இவைகளுக்கு அப்பால் இருந்துக்கொண்டு, அனைத்தையும் அறியும் அறிவு நிலையில் எல்லாவற்றிற்கும் சாக்ஷி மாத்திரமாய் நின்று, இருப்பு கொண்டுள்ள சர்வேஸ்வரனாகிய பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** எனக்கு மனிதப்பிறவியின் மகத்துவத்தை உணர்த்தி, அவரை என்னிலும், என்னை அவரிலும் ஒன்றாக உணருமாறு, இருமைகளற்ற ஏகாந்த உணர்வு வெளியில், எப்போதும் இருக்குமாறு என்னைப் பணித்த பரம சத்குரு பகவானை பணிகின்றேனே.

– ப்ரக்ஞன்

# முகவுரை

பிரம்மத்தின் பேரின்ப அவதாரமும், பரம பவித்ரமானவரும், ஆனந்தம் அளிப்பவரும், அகண்டமான, முழுமையான தூய அறிவின் உருவகமுமான **படைத்தல், காத்தல், அழித்தல்** எனும் முத்தொழிலைப் புரியும் எல்லாம் வல்ல ஈஸ்வரனான பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** சாக்ஷாத் அந்த பரப்பிரஹ்ம பரமனாகவே இருப்பதினால், அவரது இருப்பு **(சத்)** ஒன்றே இங்கு அனைத்தையும் அறியும் அறிவுப் பரிமாணத்தில் படைக்கப்பட்ட ஒவ்வொரு ஜீவர்களிலும் தூய அறிவாக **(சித்)** பரிணமித்து, பல்வேறு உடல்களில் பிரகாசிக்கின்ற நிலையில், ஆறாம் ஆறிவுப் பரிணாமத்தில், நன்மை, தீமைகளைப் பகுத்தறியும் மனிதனுக்கு மட்டுமே பரம ஐஸ்வர்யத்தை **(ஆனந்தம்)** அளிக்கும், சச்சிதானந்தப் பொருளாக சத்குருவாக வருகின்றார்.

அறியாமையினால், மனிதர்கள் தங்கள் மனங்களில் ஏற்றி வைத்துக் கொண்ட எண்ணங்களின் வாயிலாக இருமைகளில் சிக்கிக்கொண்டு, படைக்கப்பட்டவைகளில் பலவாறான பேதங்களைக் கற்பித்துக்கொண்டு, சற்குண வடிவாகிய ஏக ஈஸ்வரனை எல்லாவற்றிலும் அறியாமல், அவரது பல்வேறு வடிவங்களில் பல வேறுபாடுகளைக் காணும், மனித மனதின் அறியாமைப் போக்கை சுட்டிக் காட்டி, அதே மனதைக் கொண்டு, அவனிடமுள்ள அறியாமைகளை அகற்றுகின்ற **ஆத்மவிசார மார்க்கத்தில்**, விழித்துக் கொள்ள வைக்கின்ற விவேகத்தைக் கொடுக்கும் பொருட்டு, மனித அவதாரம் எடுத்த மகத்தான வடிவமே சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** அவதாரம் ஆகும்.

பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர் அவதாரம் என்பதில், அத்ரி மகரிஷியின் புத்திரன் என்பதாக கூறப்படுவது, **அத்ரி** (அ+திரி = **அத்ரி**) என்றால், மூன்றற்றது என்று பொருள். அதாவது, **திரி** என்றால், மூன்று, **அத்ரி** என்றால், மூன்றல்ல என்று பொருள்.

ஆகவே, இங்கு மூன்றல்ல என்பதன் பொருள் **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற மூன்று சக்திகள் (பிரம்மா – விஷ்ணு – ருத்திரன்) மூலமாக தனித்தனியாக நடைப்பெறுவதல்ல என்றும், அது ஏக இருப்பாகிய பரமனின் ஒரே ஆற்றலாகிய ஈஸ்வர சக்தி என்றும், அதிலே, பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** என்பதில், **தத்தா** என்றால், **கொடுப்பவர்** என்றும், **ஆத்ரேயர்** என்றால், **அத்ரி** மகரிஷி பரம்பரையில் வருபவர் என்றும் பொருள்.

சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** அவர்களை **'அவதூதர்'** என்ற மற்றொரு பிரபலமான பெயரிலும் அறியப்படுகிறார். அவதூத் என்பது **நிர்வாணம்** என்று பொருள். ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுகின்ற அனேக சாதகர்கள் பரம(தன்)னை அறிய ஆர்வம் கொண்டு, அதற்காக பல வழிகளில் பரமனை வெளியே தேடுபவர்களின் பார்வையில் சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** கிடைக்கப்பெற்றால், அவனுக்கு அவசியம் **ஆத்யாத்ம**

**யோகம்** (ஆத்ம ஞானம்) கிடைத்து, அவரது அருட்கடாக்ஷத்தினால், அவதூதர் பரம்பரையில் இணைவது எளிது. அந்த வகையிலே, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** என்பவர் நம் மனதின் அறியாமை இருளை அகற்றி, அந்த அறிவு ஒளியாகவே **'நீ'**தான் இருக்கின்றாய்! என்று நமக்குக் காட்டிக் கொடுக்கவே வருகின்றார். அந்தவகையிலே, **குரு, ஆத்மா, இறைவன்** இவற்றில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது. ஆகவே, எங்கும் நிறைந்திருக்கும் எல்லையற்ற பரமாத்ம ஸ்வரூபமான உருவமற்ற பரமனை ஒரே உருவத்தில் வணங்கினாலும், அந்த ஒரே உருவத்தில் உள்ள ஈஸ்வர சக்தியில் **ஆத்மா, குரு, இறைவன்** ஆகிய மூன்றும் ஒன்றுதான் என்ற உண்மை உணரப்படும்.

ஆக, இந்த மூன்றுக்கும் உண்மையில் உருவம் கிடையாது. அது எல்லையற்ற ஆகாயம் போன்றது. ஆத்மாவின் உருவம் ஆகாயம் போன்ற நிர்குணமானது. குருவுக்கும் அதுவே பொருந்தும். ஆகவே, குருவை அவரின் உடல் அளவில் மட்டுமே பார்க்கக்கூடாது என்பதினால், **அவதூதர்** என்ற உருவமற்ற நிர்குணநிலை சுட்டிக் காட்டப்படுகின்றது. மற்றபடி அவதூதர் என்றால் ஆடைகள் இல்லாமல் நிர்வாணமாக இருப்பவர்கள் என்பதாக தவறாக எண்ணக்கூடாது. ஆக, நமக்குக் கிடைத்த அரிதான மனிதப் பிறவியில் கிடைத்தற்கரிய பிரத்யேக மனதை புத்தி சக்தியைக் கொண்டு, விழித்துக் கொண்ட விவேகத்தினால், தன்னுடைய பகுத்தறிவுப் பரிமாணத்தில் நன்மை, தீமைகளைப் பகுத்தறிந்து, அதில் நன்மைகளை நோக்கி நகர்ந்து, அதனால் உண்டாகும் நற்செயல்களின் மூலம் மனத்தூய்மை அடைந்து, அந்த **தூய அறிவை** தன்னுள் அனுபவமாக உணர முயற்சிக்க வேண்டும்.

அத்தகைய ஈஸ்வரனாகிய சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** காட்டும் உயரியப் பாதையில், அவரது பரம்பரையில் வந்த பலரும் உபதேசிக்கும் இந்த அத்யாத்ம யோகத்தை எளிய தமிழ் மொழியில் அனைருக்கும் கொண்டு சேர்க்கும் அரிதான பணியை இவனையும் ஒரு கருவியாகக் கொண்டு, அந்த சர்வேஸ்வரனே செய்விக்கின்றான் என்பதினால், இவனுடன் சேர்ந்து, இவனுடைய இந்தப் பயணப்பாதையில், மிக உயரிய இலக்காகிய தூய இருப்பை உணர விரும்பும் உத்தம சாதகர்கள் இந்த நூலில் கூறப்பட்டுள்ள **தசாங்கம்** எனும், பத்து அங்களைக்கொண்ட சாதனா (பயிற்சி) முறைகளைப் பயின்று பயனடைய வேண்டும். நம் பயணத்தின் இறுதி இலக்காகிய **"தன் சுயத்தை தான் உணர்தல்"** எனும் தன்னிருப்பு நிலையில், எப்போதும் இருக்கின்ற மிக உயரிய ப்ரக்ஞையில் (பேருணர்வில்) அப்போதுதான் நாம் எப்போதும் திளைக்க முடியும்.

நன்றி

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்

ॐ अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः॥

Om ajñāna-timirāndhasya jñānāñjana-śalākayā
chakṣur unmīlitaṁ yena tasmai śrī-gurave namaḥ

ஓம் அஞ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்சன சலாகயா |
சக்ஷுருன் மீலிதம் யேன தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

அஞ்ஞான இருளால் பார்வை இல்லாமல் பயணிக்கின்றவர்களுக்கு, ஞானம் எனும் அறிவு ஒளிப்பிரகாசத்தினால், அவனது கண்களைத் திறந்து, சரியான பாதையைக் காட்டிக் கொடுக்கும் சத்குருவுக்கு பணிவான வணக்கங்கள்.

நம்முடைய சனாத தர்மத்தின் வழி வந்த இந்து மதத்தில் **தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்** என நான்கு **புருஷார்த்தங்கள்** உள்ளன. தர்மம் என்றால் நீதி, நியாயம் அல்லது நேர்மை என்று கூறலாம். அவ்வாறே அர்த்தம் என்பது பொருள் அல்லது செல்வம் எனலாம். காமம் என்பது உலக இன்பங்களை அனுபவிக்கும் ஆசைகள் எனலாம். மோட்சம் என்பது முக்தி அல்லது விடுதலை என்று கூறலாம். இதனை **அறம், பொருள், இன்பம், வீடு** என்று தமிழில் பொருள் கொள்ளலாம்.

பொதுவில் படைக்கப்பட்ட சீவராசிகளில் மனிதன் சிந்திக்கும் ஒரு விலங்கு என்பதாகவே கூறலாம். காரணம், அவன் கல்வி கற்பதின் வாயிலாக மட்டுமே பகுத்தறிவு பலன் கொடுத்து மனிதனாக மதிக்கப்படுகின்றான். அவ்வாறு அவன் கற்கின்ற கல்வி என்பது, உலகியல் சார்ந்த புற வாழ்க்கைக்கான பொருளாதாரக் கல்வி மட்டுமின்றி, அவனது இலட்சியத்தின் இறுதி இலக்காகிய **நிலையான ஆனந்தம்** அடைய விரும்பும் அக வாழ்க்கைக்கான அத்யாத்ம கல்வியையும் சேர்த்து கற்றுக் கொள்ளும்போது மட்டுமே, அந்த மனிதனே **புனிதன்** ஆகின்றான். அதாவது, '**மனிதனும் தெய்வமாகின்றான்**' என்பதாகவே பார்க்கப்படுகின்றது.

அந்தவகையிலே, பகுத்தறிவுப் பரிமாணத்தில் உயர்ந்த மனிதன் சமூகத்தில் நிலவும் சமூக கருத்துக்களின் அடிப்படையில் சரியான மற்றும் தவறான நடத்தையை வேறுபடுத்தி அறியலாம். இந்த சமூகம் மனிதனின் நடத்தையின் தரத்தை வகுத்துக் கொடுக்கிறது மற்றும் சரியானப்படி இருக்கும் மனித நடத்தைகளை மட்டுமே மதிக்கின்றது. அதாவது, நல்ல செயல்களை மட்டுமே அனுமதிக்கிறது.

ஆக, மனிதனது நடத்தையில் தவறான மற்றும் முறையற்றதாகக் கருதப்படும் நடவடிக்கைகளை தர்மத்தின் அடிப்படையில் சட்ட, திட்டங்களைக் கொண்டு இந்த சமுதாயம் கட்டுப்படுத்துகிறது. ஆகவே, மனிதனுக்கான வாழ்வியல் நெறிமுறைகளாகிய புருஷார்த்தத்தின் படி, மனிதன் மகத்தான மனிதப் பிறவியின் மகத்துவம் உணர்ந்து, இந்த உலகில் செயலாற்ற வேண்டும். அதைவிடுத்து தேவையற்ற செயல்கள் செய்வதை கட்டாயம் தவிற்க வேண்டும். அதன் அடிப்படையில் இங்கு **புருஷார்த்தம்** என்பது மனிதனுக்குத் தேவையான ஒழுங்குமுறைக் கொண்ட சரியான செயல்களை மட்டுமே செய்வதைக் குறிக்கிறது.

ஒரு தனிநபரின் வாழ்க்கையின் குறிக்கோள் என்பது, நமது **சனாதன தர்மம்** வகுத்துக் கொடுத்த சரியான வாழ்வியல் நெறிமுறைகளான புருஷார்த்தத்தின்படி மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. இது மனிதனின் சரியான வாழ்க்கைப் போக்கைத் தீர்மானிக்கிறது. மேலும், அவனது நல்ல நடத்தை முறைகளுக்கான நற்பண்புகளை அவனுக்கு நடைமுறையில் கொண்டுவர அனுமதிக்கின்றது. அவன் தவறான வாழ்க்கையை வாழக்கூடாது என்பதற்காக சில விதிமுறைகளையும், சட்ட – திட்டங்களையும் வகுத்திருக்கின்றது.

புருஷார்த்தம் என்றால் **"புருஷார்த்ததே புருஷார்த்தம்",** அதாவது மனித வாழ்க்கையின் குறிக்கோள்கள் மற்றும் இறுதி இலக்கை அடையக்கூடிய மிகவும் அத்தியாவசியமான தனிநபர் எடுக்கும் முக்கிய முயற்சிகள். அந்தவகையில், இந்து தர்மத்தில் **அறம், பொருள், இன்பம் வீடு** என்பதில், மனிதனது இறுதி இலக்கு **"வீடுபேறு"** அல்லது **'மோட்சம்'** அடைவதாகும். எனவே, இந்த நோக்கத்தை நோக்கி மனிதன் முன்னேறுவதற்கான முயற்சிகளில் அவனது வாழ்க்கை இருக்க வேண்டும்.

இந்த நான்கு புருஷார்த்தங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவைகள் என்பதினால், இவைகள் தனித்தனியாக செயல்பட முடியாது. இதிலே, தர்மம் என்பது தனி மனித ஒழுக்கத்தில் மிக முக்கியப் பங்கு வகுக்கின்றது. அத்துடன் அது **வர்ணாஷ்ரம தர்மம்** மற்றும் **சாமான்ய தர்மம்** என இரண்டு வகைப்படுகின்றது. வர்ணாஷ்ரம தர்மம் குறிப்பாக ஒவ்வொரு வர்ணத்திற்கும், ஆசிரமத்திற்கும் தொடர்புடையது. அதேசமயம், இந்த சாமான்ய தர்மம் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது மற்றும் உலகளாவியது. இந்த தர்மம் அஹிம்சையை உள்ளடக்கியது. இது அனைத்து உயிரினங்களுக்கும் அகிம்சையை கடைப்பிடிக்க கற்றுக்கொடுக்கின்றது. அவ்வாறே சத்தியம் என்பது, உண்மை அல்லது தூய்மை என்பதினால், ஒவ்வொரு தனி மனிதனும் சத்தியவானாக வாழவேண்டும் என்று எதிர்ப்பார்க்கின்றது. அந்த வகையிலே **விருப்பு – வெறுப்பு** எனும் இருமைகளற்ற சகிப்புத்தன்மை மூலமாக, அர்த்தமும், காமமும் அடையாளம் காணப்படுகின்றது. அதன்மூலம் மனிதன் **மோக்சம்** என்ற **வீடுபேறு** நிலையை இறுதியில் அடைகின்றான்.

**தர்மம் (அறம்):**

இது முதல் புருஷார்த்தம், நீதியான நடத்தை மற்றும் ஒருவரின் தார்மீக மற்றும் நேர்மையான பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுவதை வலியுறுத்துகிறது. இது தனிநபர் ஒருவர் உலகளாவிய கொள்கைகள் மற்றும் **சமூக விதிமுறைகளுடன் இணைந்து** எப்படி வாழ வேண்டும் என்பதை ஊக்குவிக்கிறது.

**அர்த்தம் (பொருள்):**

செல்வம் மற்றும் செழிப்பான வாழ்க்கைக்கான நாட்டம் என்பது மனிதனுக்குத் தேவையான பொருள் சார்ந்த வளங்களைப் பெறுவதின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. அத்துடன், தனக்கும், தன்குடும்பத்திற்கும் ஒரு நிலையான அடித்தளத்தை பொருளாதார ரீதியாக நிறுவுகிறது. மேலும், இது பாதுகாப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட **அறவழியில் பொருள் ஈட்டும்** அணுகுமுறையின் அவசியத்தை அறிவுறுத்துகின்றது.

**காமம் (இன்பம்):**

ஆசைகள் மற்றும் இன்பத்தின் நாட்டம் காமம் என்பதினால், இது உணர்ச்சி மற்றும் சிற்றின்ப நிறைவின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்கிறது. இது காதல், உறவுகள், கலைகள் மற்றும் பல்வேறு உணர்ச்சி அனுபவங்களை உள்ளடக்கியது. அதேநேரத்தில் மனிதன் தன் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது மற்றும் சமுதாயம் சார்ந்த தார்மீக எல்லைகளைக் கட்டாயம் மதிப்பது, ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை முன்னிறுத்தி, **ஆசைகளை சரியாகக் கையாள்வதில்** மட்டுமே, அவனது அத்தனை நன்மைகளும் அடங்கியுள்ளது என்பதையும் வலியுறுத்துகிறது.

**மோட்சம் (வீடுபேறு):**

வாழ்க்கையின் இறுதி இலக்கான முக்தி மற்றும் ஆன்மீக விடுதலையைக் குறிக்கிறது. இது சுய–உணர்தல் மற்றும் தெய்வீகத்துடன் இரண்டற இணைவதன் மூலம் பிறப்பு மற்றும் இறப்பு சுழற்சியைக் கடப்பதை குறிக்கின்றது. ஆக, மனிதன் இந்த **நான்கு புருஷார்த்தங்களையும்** சரியாக நடைமுறையில் கொண்டு வாழ்ந்தால், அவனது வாழ்க்கை வசந்தமாக இருக்கும் என்பதில் எந்த ஐயமும் தேவையில்லை.

அந்தவகையிலே, மனிதனை புனிதனாக்கும் வாழ்வியல் நெறிமுறைகளைக் கொண்ட புருஷார்த்தம் என்பதில், இன்னும் சில ஆழமான அடிப்படை அம்சங்களைக்

கொண்ட பத்து விதமான சாதனைகளை பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் இருப்பவர்கள் நடைமுறை வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றனர் என்பதினால், நம்மைப் போன்ற மோக்ஷத்தின் மீது இச்சைக் கொண்ட முமுக்ஷுக்கள் (ஆன்மீக சாதகர்கள்) அத்தகைய ஆழமான சாதனைகளை அறிந்து, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் நாமும் ஒன்றாக இணைந்து, இரண்டற்ற ஏக இறைவனை நம்முள் உணர்ந்து, சம்சாரம் எனும் **பிறப்பு – இறப்பு** சாகரத்தை எளிதாகக் கடக்க முடியும்.

அந்த வகையிலே, இங்கு கூறப்படும் **ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்** என்பது பத்துவிதமான சாதனைகளை உள்ளடக்கியது. **தச + அங்கம் =** தசாங்கம் என்பதில், **'தச'** என்பது, பத்து என்றும், **'அங்கம்'** என்பது உறுப்புகள் என்றும் பொருள் கொள்ள வேண்டும். ஆக, இந்த பத்து விதமான சாதனைகளை சரியாகப் பயின்று, மிக உயரிய வாழ்வியல் நெறிமுறைகளாகக் கொண்டு, இருமைகளற்ற ஏக இறைவனை ஒன்றாகக்கண்டு, நாம் எல்லோரும் ஒரே பரம்பரையில், **பரம்** = சிவம், **பரை** = சக்தி என்பதினால், சிவமும், சக்தியும் ஒன்றாக இணைந்துள்ள இல்லறம் எனும் நல்லறம் கொண்டவர்களும் இந்த சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வரமுடியும். அந்த வகையிலே, நாம் எல்லோரும் ஒரே குடும்பமாக வாழுகின்ற **வசுதைவ குடும்பகம்** நம்முடைய **பரம்பரை** என்பதினால், இங்கு எல்லோரும் ஒன்றே என்ற உயரிய நிலையில் ஒற்றுமையாக எப்போதும் இருப்பார்கள்.

1. **அகிம்சை** (துன்புறுத்தாமை)
2. **சேவை** (பரோபகாரம்)
3. **அர்ப்பணிப்பு** (சரணாகதி)
4. **தூய்மை** (மெய்யுணர்தல்)
5. **மந்திரம்** (மனதின் திரம்)
6. **தந்திரம்** (உபாயம்)
7. **யந்திரம்** (உடல்)
8. **விசாரம்** (பகுத்தறிவு)
9. **சுயமுணர்தல்** (ப்ரக்ஞை)
10. **நிர்வாணம்** (அவதூதர்)

என்ற இந்த பத்து விதமானப் படிநிலைகளில், பயணிக்க வேண்டிய சாதகர்களின் சாதனைகள் இங்கு கொடுக்கப்படுகின்றன.

இந்தப் பத்து விதமான அங்கங்கள் கொண்ட **தசாங்கம்** எனும் சாதனைகள் வாயிலாக, ஒவ்வொரு சாதகர்களின் உள்ளமும், உடலும் தூய்மை அடைந்து, மிக உயரிய மனிதப் பிறவியின் மகத்துவம் உணர்ந்து, அறிவுப் பரிணாமத்தில் படிப்படியாக ஒரு அறிவு தாவரம் முதல், ஆறு அறிவு மனிதன் வரைப் பயணித்த பல்வேறு உடல்களும், அந்த உடல்களுக்கு காரணமான உயிரும் உள்ள மனிதன் மட்டுமே, அந்த உடலைக் கொண்டு, உயிரை ஏக உணர்வுடன் இணைக்கும் உபாயத்தை அறிந்து, மனிதப்பிறவியின் நோக்கம் முழுமைப் பெறும்போது மட்டுமே, அறிவுப் பரிணாமத்தின் ஏழாம் பரிமாணம் உணரப்பட்டு, மிக உயரிய இருப்பு எனும் '**சத்**' இருப்பதை, அறிவு எனும் '**சித்**' மூலமாக உணர்ந்து '**ஆனந்தம்**' அடைய முடியும். அதுவே, "**சச்சிதானந்தம்**" எனப்படும்.

அந்த நிலையில், மட்டுமே மனிதன் தன்னிருப்பைத் தான் உணர்ந்து, இங்கு படைக்கப்பட்ட அனைத்தும், **என்னுடைய இருப்பினாலேயே இருக்கிறது** என்ற உண்மை விளங்கும். அதாவது, தூய அறிவாகிய தன்னிருப்பு நிலையில், நான் இருப்பதினாலேயே எல்லாம் இருக்கின்றது என்ற மிக உயரியப் புரிதல் உண்டாகும். அப்போது மட்டுமே, தன் உண்மை சொரூபமான தன்னிருப்பில், தன் சொரூபத்தில், தன் சுயத்தில் எப்போதும் இருப்பு கொண்டு இருக்க முடியும். அவன் மட்டுமே, பிறப்பதும் இல்லை! இறப்பதும் இல்லை! அவன் என்றும் இருக்கின்ற எல்லையில்லாத இருப்பு. அவன் வருவதும் இல்லை! போவதும் இல்லை! என்றென்றும் இருக்கின்ற **சத்திய உணர்வு.**

# 1. **அகிம்சை** (துன்புறுத்தாமை)

### அகிம்சை என்றால் என்ன?

**அஹிம்சா பரமோ தர்ம**: அகிம்சை ஒன்றே அனைத்து தர்மங்களிலும் மிக உயர்ந்த தர்மம் ஆகும். **"ஹிம்சை"** என்பது **'காயம்', துன்புறுத்துதல்** அல்லது **'தீங்கு'** ஆகும். அதுவே, ***'அஹிம்சை'*** என்பது, இதற்கு நேர் எதிரானப் பொருள் கொண்டது. அதாவது, எதற்கும், யாருக்கும் உடலாலும், மனதாலும் **"காயம் ஏற்படுத்தாதது, "தீங்கு செய்யாதது", "துன்பத்தை விளைவிக்காதது"** என்பது இதன் பொருள்.

அஹிம்சையின் மூலமாக நம் ஒவ்வொருவரின் எண்ணங்களும், சொற்களும், செயல்களும் யாருக்கும், எந்த உயிரினத்திற்கும், எந்த விதத்திலும் தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும். அதாவது, நாம் சிந்திக்கும் எண்ணங்கள், பேசும் சொற்கள், அல்லது செய்யும் செயல்கள் எதுவாயினும், அதன்வாயிலாக யாருக்கும், எதற்கும் மனதாலும், உடலாலும் துன்பம் செய்யாமல் இருப்பதே **"அகிம்சை"** எனப்படும்.

இதைத்தான் நமது திருவள்ளுவப் பெருந்தகை கூறும்போது,

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு.** என்கின்றார்.

ஆக, அகிம்சை என்பது மட்டும்தான் உண்மையில் நாம் செய்ய வேண்டிய மிக **உயரிய தவம்** என்கின்றார் வள்ளுவர்.

**தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட்பட்டு.**

இதிலிருந்து, **அகிம்சை** எனும் உயரிய தவத்தை மேற்கொள்கின்றவர்கள் யாருமே எதையும் துன்புறுத்தாத தவ வாழ்க்கை வாழ்கின்றவர்கள் ஆவர். மற்றவர்கள் எல்லோரும் ஆசை வலையில் அகப்பட்டு, அறியாமையின் காரணமாக, அனாவசியமான செயல்களை செய்து அல்லல்பட்டுக் கொண்டிருகின்றனர் என்கின்றார்.

பொதுவாக, நம்மை எதிரியாக எண்ணுபவர்களிடமும்கூட, அவர்களுக்கு எதிரான எந்த கெட்ட எண்ணங்களையும் நம் மனதில் வைத்துக் கொள்ளக்கூடாது.

அவர்களுக்கான எந்த கெட்ட செயல்களையும் நாம் செய்யவும் கூடாது. அதுவே, உண்மையான **அகிம்சை** ஆகும். அதாவது, நம்மைப் பொருத்தவரை **'நம் எதிரி'** என்று நமக்கு யாரும் கிடையவே கிடையாது. நாம் யாரையும் எதிரியாக எண்ணவும் மாட்டோம். ஆனால், நம்மைப் போன்று உயர் மனப்பக்குவம் உண்டாகாத மற்றவர்கள் நம்முடைய முன்னேற்றத்தைக் கண்டு, பொறாமைக் கொண்டு, நம்மை எதிரியாகக் கண்டாலும், நாம் அவர்களை எதிரியாகக் கருதாமல், நம்முடைய விழித்துக் கொண்ட விவேகத்தினால், யாருக்கும் தீங்கு செய்யாமல் எப்போதும் விழிப்புடன் இருப்பதே மிக உயரிய **அகிம்சை** எனப்படும்.

உண்மையில், அகிம்சை எனும் தருமத்தைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு விரோதிகள் என்றுமே இருப்பதில்லை. ஆதலால், தனக்கு விரோதி ஒருவர் உண்டு என்பதையே அவர் மறுக்கிறார். உண்மையில், அகிம்சை என்பதற்கு **அன்பு** என்றுதான் பொருள். அதாவது, அதிக அளவு **தயை** அல்லது **கருணை** என்பதே இதன் ஆழமான உட்பொருள் எனலாம்.

நாம் ஒருவரிடம் உண்மையான அன்பு வைக்கும்போது, அவர்களும் நம்மை உயிருக்கு உயிராகவும், ஆழமாகவும் அன்பு செலுத்துவார்கள். அதன்வாயிலாக, இருவரிடமும் இருமைகளற்ற ஒருமித்த அன்பு உண்டாகி, எல்லாவற்றிலும், எல்லோரிலும் **தன்னையே கண்டு நேசிக்கும்** பண்பு மேலோங்குகின்றது.

முதலாவதாக, நாம் நம்முடைய ஆன்மீகப் பாதையில் முன்னேற வேண்டுமானால், குறிப்பாக சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** காட்டிய சத்தியப் பாதையை சரியாகப் புரிந்துக் கொண்டு, அதில் பயணிக்கும்போது, நம்மிடையே எதிர்மறை உணர்ச்சிகள் ஏதும் உண்டாகாது. நம் வாழ்க்கையின் அனைத்து அவசியமான அம்சங்களிலும், அகிம்சையின் உறுதியான நிலைப்பாட்டை நாம் உறுதி செய்துக் கொள்ளும் வகையில், நம் செயல்கள் இருக்கத் தொடங்கும்.

அதன் வாயிலாக, நம்முடைய அறிவுப் பரிமாணம் எனும் பகுத்தறிவுத் தன்மை படிப்படியாக ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி ஆறு அறிவு மனிதன் வரை படிப்படியாக பரிணமித்து, உயர்பரிமாண அறிவு நிலைக்கு உயர்ந்து விட்டதா? என்பதை நம்மிடம் நாம் உறுதி செய்துக்கொள்ளும் வகையில், நம்முடைய கவனம் முழுவதும் நாம் கற்ற அத்யாத்ம யோகத்தின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.

அதாவது, நம்முடைய **புற வாழ்க்கை** மற்றும் **அக வாழ்க்கை** என்ற இந்த ஒரு பெரும் பகுதிகளைக் கையாளும் கலையில், நாம் நம்முடைய உலகியல் வாழ்க்கைக்கான புறக்கல்வியைக் கற்றுக்கொண்டு, உத்தியோகத்திற்கான முயற்சியை மேற்கொள்வதுப் போன்று, நம்முடைய அக வாழ்க்கைக்கான **அத்யாத்ம யோகம்** எனும் ஆன்மவியல் கல்வி

கற்றுக் கொடுத்த வாழ்வியல் நெறிமுறைகளான **புருஷார்த்தம்** படி முறையாக வாழவும், நம்மைப் போன்றே நம்மை நாடி வருகின்றவர்களுக்கு வழிகாட்டவும் வேண்டும். அதாவது, **புற வாழ்க்கை – அக வாழ்க்கை** என்ற இரண்டையும் சமமாகக் காணுகின்ற **நடு நிலை** வாழ்க்கையை வாழவேண்டும்.

அதாவது, நம்மை உணர்ச்சி பூர்வமாகவோ அல்லது அறியாமை கொண்ட மூடப் பழக்க வழக்கங்களினாலோ பாதிக்கப்படாதவாறு, பண்பட்ட பக்குவமான மன நிலைக்கு உயர்த்திக்கொண்ட உயரிய விவேகத்தினால் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.

ஆகவே, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** நமக்குக் காட்டிய பாதையில் பயணிக்கத் தொடங்கும் நம்மைப் போன்ற ஆத்மசாதகர்கள் முதலில் பிற உயிர்களுக்கு தீங்கு செய்யத் தூண்டும் எந்த எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் ஈடுபடக்கூடாது. ஆக, அகிம்சை என்பது, ஏதோ அனுபவமற்ற ஆரம்ப சாதகர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரு **'தொடக்கப் பயிற்சி'** என்று எண்ணி விடக்கூடாது.

அதாவது, முற்றிலும் நம் உண்மை இயல்பில், நாம் நம்மையே எல்லாவற்றிலும் காணுகின்ற பக்குவமான மனநிலையில், மற்ற உயிர்களுக்கு ஹிம்சை செய்யாமல், அகிம்சையாக இருப்பது ஒன்றே, அனைத்து ஆன்மீக சாதனைகளிலும் மிக உயரிய உத்தமமான ஆன்மீக சாதனையாகும்.

ஏனென்றால், மனதின் எல்லா வன்முறைகளும் நீங்கும்போது, அந்த இடத்தில் நிபந்தனையற்ற **அன்பு** மட்டுமே **ஆனந்தம்** என்பதாக நம்மிடம் எஞ்சியிருக்கும். இதுவே, மனதைத் துறந்த மகத்தான **அவதூதர்கள்** நிலைபாடு என்பதினால், அந்நிலையில் அவர்கள் யார்மீதும் **விருப்பு – வெறுப்பு** எனும் இருமைகளைக் காட்டுவதில்லை.

இங்கு **அன்பு – பாசம்** என்ற இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. ஒருவர்மீது நாம் காட்டும் பாசம் பந்தத்தினால் உண்டாகின்றது. அதாவது, எனது, என்னுடையது என்ற பற்று காரணமாக, அவர்களை பந்த, பாசங்களுக்கு உட்படுத்துகின்றது.

அதுவே, எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாத **தூய அன்பு ஒன்றே** அவர்களை எதன்மீதும், எவர்மீதும் பற்று வைக்காமல் கருணை கொள்ளச் செய்கின்றது. இந்த வகையிலே, நாம் **பந்தம் – விடுதலை** என்ற இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை சரியாக உணர முடியும்.

பொதுவாக, மனிதர்களிடம் காணப்படும் வன்முறை, கோபம் என்பது மனதின் பக்குவமற்ற இருமைகளால் சூழப்பட்ட அறியாமை நிலை எனலாம். இந்த வன்முறை

சூழப்பட்ட நிலையில், ஒருவர் உடல் அல்லது வாய்மொழி வழியாக மற்றவர்களை துன்புறுத்தும்போது, அது அவர்களை மற்றவர்களிடம் இருந்து பிரித்துக்காட்டி, அவரது மனதின் அறியாமை நிலையை வெளிப்படுத்தி, அவரை வெறுப்பு நிலைக்கு கொண்டு செல்கின்றது. இந்த பிரிவினைப் பற்றிய மனதின் அறியாமை என்பதுடன், நுட்பமான மற்றும் மொத்த வன்முறைச் செயல்களுக்கான ஆணிவேர் எனலாம்.

பொதுவாக, இருமைகள் (துவைதம்) எனும் **விருப்பு – வெறுப்பு** பிரிவினையை உணர்வதன் வெளிப்பாடுதான் மனதில் **வன்முறை** என்பதாக மாறுகின்றது.

அதுவே, அத்யாத்ம யோகத்தின் வாயிலாக, ஒருமித்த தன்மையில் அகிம்சையை உணர்வதன் மூலம், மனதின் உண்மைத் தன்மை உணரப்பட்டு, அங்கு இருமைகளற்ற **ஒருமை** (அத்துவைதம்) வெளிப்படுவதை எளிதாக உணரலாம்.

எனவே, மனதின் இருமைகளால் சூழப்பட்ட பிரிவினைகள் பற்றிய கருத்துக்கள் நம்மிடம் அழிக்கப்படும்போது மட்டுமே, நாம் முற்றிலும் வன்முறை அற்றவர்களாக மாறி, அனைத்திலும் அந்த தூய உணர்வை உணரக்கூடிய ஒருமை நிலையில் நாம் எல்லாவற்றிலும் நம்மையே காண முடிகின்றது.

ஆகவே, **'அகிம்சை'** என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தம் என்னவெனில், **எல்லாம் ஒன்றே** என்ற ஒற்றுமையின் மூலம், மனதில் இருமைகள் எல்லாம் அகன்று, பிரிவினைகள் எல்லாம் கலைந்து, பரிபூரண பரமனின் பேருணர்வை வெளிப்படுத்தும், **சுயமுணர்தல்** நிலையில் நாம் எல்லாவற்றிற்கும் **சாக்ஷியாக மட்டுமே** இருந்துக் கொண்டு, எதிலும் சம்பந்தப்படாமல் இருப்பது ஆகும்.

திடீரென, ஒரே இரவில் உடனடியாக இத்தகைய வன்முறைப் பழக்கங்களை நம்மால் அழித்துவிட முடியாது. ஆனால், இந்தப் பழக்கங்களைப் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டுவரும் அத்யாத்மயோகப் பாடங்களைப் படிப்பதன் வாயிலாகவும், சரியான சத்குருவின் சத்சங்களைக் கேட்பதின் வாயிலாகவும், மனம் இருமைகளை இழந்து, ஒருமித்த நிலையில் பக்குவமடைந்து, பரமனின் பவித்ரமான பரிபூரண நிலைக்கு உயர்ந்து, நன்கு பண்பட்டு, படிப்படியாக முன்னேறிய நிலையை காலப்போக்கில் நாம் காணலாம்.

## ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் அஹிம்சை

சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையினரின் அகிம்சை என்பது, அவர் காட்டிய பயணப் பாதையின் இறுதி இலக்காகிய **எல்லாம் ஒன்றே!** என்ற தூய அன்பு உணர்வில், தன் சுயத்தை நாம் சரியாக உணர்வதில் மட்டுமே, நம் முழுமை நிலையை நாம் நிதர்சனமாக உணர முடியும்.

மனதின் ஆசைகளால் எழுகின்ற, ஏராளமான எண்ணங்களின் எழுச்சியின் காரணமாக, அந்த மனதிற்கு மறுபிறப்பைத் தூண்டும், எல்லாவிதமான கர்மச் சுவடுகளும் முழுமையாகக் கலைக்கப்படும் **பரிபூரண ஞான நிலை** உண்டாவது என்பது, அத்யாத்ம யோகத்தின் அடிப்படைப் பண்புகளை நாம் வளர்த்துக் கொள்வதின் வாயிலாகவும், **அன்பு** எனும் அகிம்சையைக் கடைப்பிடிப்பதின் வாயிலாகவும் மட்டுமே காண முடியும்.

சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையினரின் வழியில் வந்த சரியான சத்குருவின் வழிகாட்டுதலின்படி, அவரது உயரிய வாழ்க்கைமுறைப் பயணப்பாதையில், அவருடன் சேர்ந்து நாமும் பயணித்து, அவர் காட்டிய பயணத்தின் இறுதி இலக்கை எளிதாக எட்டிப்பிடித்து, இன்றும் நம்மிடம் வாழந்துக் கொண்டிருக்கின்ற இன்னும் சில சாதனையாளரின் பண்பு நலன்களைப் பார்த்து, **"மனிதனும் தெய்வமாகலாம்!"** என்கின்ற அவர்களின் நன்நடத்தைகளைக் கண்டு, நாமும் அவர்களைப்போல, மிக உயரிய நன் நடத்தைகளைக் கடைப்பிடிக்கும்போது மட்டுமே, நாம் இருமைகளற்ற ஏக இறைவனை எல்லாவற்றிலும் கண்டும், உணர்ந்தும் உற்சாகம் கொள்ள முடிகின்றது.

அதாவது, இந்த '**நன் நடத்தை**' என்பது, நாம் மற்றவர்களுக்கு செய்யும் தன்னலமற்ற சேவையின் மூலம் மட்டுமே வெளிப்பட முடியும். அதாவது, நாம் செய்யும் செயல்களில் எந்தவிதமான எதிப்பார்ப்பும் இல்லாமல், பிரதிபலன் கருதாமல், அதற்கான எந்த உரிமையும் கொள்ளாமல், மற்றவர்களுக்கு பயனளிக்கும் வகையில் நம்மால் மற்றவர்களுக்கு உதவ முடிந்தால், அதன்வாயிலாக நம் உடலும், உள்ளமும் புத்துணர்ச்சி பெற்று, நம்முடைய சித்தமலம் அகன்று, எப்போதும் '**சிவானந்த ரூபம்**' எனும் மிக உயரிய பரமனின் பவித்ரமான சொரூபத்தை நம்மில் அனுபவமாக எப்போதும் உணர முடியும்.

அதாவது, **செயலில் செயலற்ற தன்மை** என்பது, ஆத்மாவின் (பரமனின்) உன்னத நிலை ஆகும். ஆத்மா எந்த செயலையும் செய்வதில்லை, அது எல்லாவற்றிற்கும் சாட்சியாக மட்டுமே இருக்கின்றது என்ற நிலையில், **"இதை நான் செய்கின்றேன்"** என்ற அஹங்காரம் மற்றும் **"இது என்னுடையது"** என்ற மமகாரம் எனும் நம்முடைய செயல்கள் பிரதிபலன் கருதாத நிலையில் அமையும்போது, அத்தகைய செயல் விளைவுகளால், நமக்கு '**கர்மா**'

சேர்வதில்லை. அது நாம் செய்யும் செயல் விளைவுகளின் பயனைப் பெற முடியாத நிலையாகிய **"கர்மயோகம்"** என்பதாக மாறிவிடுகின்றது. அத்தகைய நிலையில் இருக்கும் நமக்கு மட்டுமே செயலில் செயலற்ற தன்மையில், **பாவம் – புண்ணிம்** என்ற இருமைகள் இருக்காது.

எனவே, எது, எவ்வாறாயினும், இந்தப் பயணப்பாதையில் பயணிக்கும் உத்தம ஆத்மசாதகர்கள் ஆரம்பத்தில், பலதரப்பட்ட தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்பாக, யாருக்கும் மனதாலும், உடலாலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயலையும், செய்யாமல் இருக்கவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் வன்முறையற்ற நிலைப்பாட்டை எடுப்பதும், அகிம்சையின் உண்மையான உருவகமாக மாறுவதும் மட்டுமே, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையினரிடம் நடக்க வேண்டிய நன்நடத்தைக் கொண்ட தன்னலமற்ற சேவையாகும்.

அத்தகைய அகிம்சையின் உண்மையான உயரிய நிலையை நாம் நம்முள் உணரும்போது மட்டுமே, இந்த உலகத்தையும், மற்றவர்களையும் நம்மிடம் இருந்துப் பிரித்துப்பார்க்காமல், **இருப்பதெல்லாம் இறைவனே!** என்ற மிக உயரிய ஒருமித்த உள்ளம் கொண்டவராக மாறி, எல்லாவற்றிலும், தூய அன்பு செலுத்துகின்ற நிலையில், **அன்பே சிவம்** என்ற மிக உன்னத ஆனந்த நிலையில் நாம் எப்போதும் திளைக்க முடியும்.

## அகிம்சையை எவ்வாறு கடைப்பிடிப்பது?

அனைத்து உண்மையான ஆன்மீக நடைமுறைகளும் ஒரு குறிப்பிட்ட அளவிலான நனவு நிலையாகிய **விழிப்புணர்வை** அடிப்படையாகக் கொண்டு, அனைத்திலும் அகிம்சை மனோபாவத்தை வளர்க்க வேண்டும். மேலும், நம்மிடம் எழுகின்ற தவறான வன்முறை எண்ணங்களை எந்த சூழ்நிலையில் வெளிப்படுத்துகின்றோம் என்பதை கவனிக்கும் போது, உண்மையில், 100% அகிம்சை மனிதனாக மாறுவது என்பது, நம் எண்ணங்கள், வார்த்தைகள் மற்றும் செயல்களில் நாம் எந்த அளவிற்கு சரியாக இருக்கின்றோம் என்பதைப் பொருத்தே வன்முறையைக் கையாளாமல் இருக்கவும் நம்மால் முடியும்.

அதாவது, இருமைகளுடன்கூடிய பிரிவினைகளை நம் மனம் வெளிப்படுத்துகின்ற வரையில், என்றும் அழியாத, மிக உயரிய தூய அறிவாகிய பரமனை (ஆத்மாவை) நம்மால் அறியமுடியாமல் அலைக்கழிக்கப்படுவோம் என்பதினால், நம்மிடமுள்ள அறியாமைகளால் வெளிப்படுகின்ற இருமைகளால் ஆன எண்ணங்களைக் கொண்ட மனோபாவத்தை நாம்

நீக்கிக் கொள்ளக்கூடிய முயற்சியில் **சேவை** மற்றும் **அஹிம்சை** ஆகிய பண்பு நலன்கள் நமக்கு நன்கு கைக்கொடுக்கும்.

எனவே, நம்மிடத்தில் வன்முறை, கோபம் போன்ற கெட்ட குணங்கள் எப்படி வெளிப்படுகின்றது? என்பதைப் பார்ப்பதற்கான சிறந்த வழி, **சிந்தனை, சொல்** மற்றும் **செயல்** ஆகிய இம்மூன்று நிலைகளில், நம்மை நாம் கவனிப்பதாகும். இந்த மூன்று நிலைகளில் நம்மை நாம் கண்காணிக்கும்போது, நம்மிடம் வெளிப்படும் தவறான எண்ணங்களை அவ்வப்போது ஆராயும்போது, அதற்கான புரிதலை விழித்துக் கொண்ட விவேகத்தினால் கையாள முடியும்.

அதன்வாயிலாக, நம்மிடம் வெளிப்படும் எண்ணங்களின் தாக்கம் அவ்வப்போதே அழிக்கப்படும். அது நம் நிகழ்கால நினைவில் நடக்கின்ற செயல்கள் என்பதினால், நாம் எப்போதும் **"நிகழ்வில் பயணிக்க வேண்டும்! நினைவை கவனிக்க வேண்டும்!"** என்பதாகவே அது அமையும்.

அப்போது மட்டுமே, நம் மனம் மற்றும் உடலின் மூலம் நாம் யாருக்கும் தீங்கு செய்யாமல் வாழ முடியும். அத்துடன், மற்றவர்களின் உணர்வுக்கு மதிப்பு கொடுத்து, எல்லோரையும் நம்மைப்போல பாவிக்கும் ஒருமித்த மனநிலை உண்டாகி, உண்மையான மகிழ்ச்சியும் நம்மிடம் முழுமையாக வெளிப்படும்.

ஆகவே, நாம் மற்றவர்களை கண்ணியமாக நடத்துவதிலும், அவர்களை ஆரோக்கியமாக வாழவைப்பதிலும், அக்கரைக் கொண்டவர்கள் என்பவர்களாக இருக்கமுடியும். இதன்பொருள் எந்த உயிருக்கும் துன்பத்தை விளைவிக்காமல் இருப்பதே '**அஹிம்சை**' எனப்படும்.

அதாவது, மனிதர்கள் மட்டுமின்றி, மற்ற எல்லா உயிரினங்களையும் அரவணைத்து, அவைகளிடமும் அன்பு செலுத்தி, ஆனந்தமாக அவைகளையும் ஆதரித்து வாழ்வதே '**அகிம்சை**' ஆகும். அதாவது, விலங்குகள் கொல்லப்படுவது, காயப்படுத்துவது, மிரட்டுவது, அவைகளை துஷ்பிரயோகம் செய்வது, என எந்தவொரு தவறான நடவடிக்கையிலும், நாம் ஈடுபடவோ அல்லது அவைகளை ஆதரிக்கவோ கூடாது. இதுவே, '**அஹிம்சை**' ஆகும்.

அந்தவகையிலே, **"அன்பு ஒன்றே அனைவரையும் நம்மிடம் சரணடைய வைக்கும் ஆயுதம்!"** எனலாம்.

அடுத்து, நம்முடைய மிக உயரிய இத்தகைய சிந்தனையின் வாயிலாக, நாம் வன்முறையற்றவர்களாக மாறியதுப்போன்று, நம்முடைய நல்ல, உயரிய எண்ணங்களை

எல்லாம் எடுத்துக் கொண்டு, நம்மைப்போன்றே மற்றவர்களும் மாற வேண்டும் என்ற ஆசையில், அவர்கள்மீது, அவர்களின் ஒப்புதல் இல்லாமல், நம்முடைய கருத்துக்களை திணிக்கும் வகையில் என்றுமே நாம் நடந்துக் கொள்ளக்கூடாது. காரணம், அவர்களும் நம்மைப்போன்று, நல்ல மனம் கொண்டவராக மாற வேண்டும் என்ற எண்ணத்தைக்கூட கைவிடுவது ஒன்றே, நாம் எவர் மீதும், எதையும் திணிக்காமல், அல்லது மற்றவர்களின் வாழ்க்கையில் அவர்கள் விருப்பத்திற்கு விரோதமாக தலையிடாமல் இருக்கக்கூடிய வன்முறையற்ற மிக உயரிய '**அகிம்சை**' நிலையாகும்.

அதாவது, மற்றவர்கள் நம்மைப் போலவே நல்லவைகளை சிந்திக்க வேண்டும், நல்லவைகளை உணர வேண்டும் அல்லது உணர்த்தப்பட வேண்டும் என்ற பார்வையை வைத்திருப்பதும்கூ, ஒரு வகையான வன்முறை உணர்வே ஆகும்.

ஆகவே, நம்முடைய சிந்தனை மட்டத்தில், நாம் உண்மையில் யாருக்கும், எதுவும் திணிக்கக்கூடாது. அதுவே, மற்றவர்கள் நாம் வாழும் வாழ்க்கையைக் கண்டு, அதன் ஈர்ப்பு காரணமாக, நம்மை நாடி வந்து, நம்முடைய வாழ்க்கையைக் கண்டு, அதுப்போலவே, நாங்களும் வாழவேண்டும் எனக் கேட்டால் மட்டுமே, அவர்களுக்குத் தக்க அறிவுரைகளை, ஆலோசனைகளைத் தரவேண்டும். அத்துடன், அவர்களுக்கு உதவ நம்மால் முடிந்த அனைத்தையும் செய்துக் கொடுக்க வேண்டும்.

ஆகவே, பரமனின் பரிபூரண அருள் யாருக்கு கிடைக்கின்றதோ? அவர்களே நம்மை நாடி வருவார்கள் என்பதினால், "**அவன் அருளாலே அவன் தாள் பணிந்து!**" என்பதற்கேற்ப, படைக்கப்பட்டவைகளில், பிரதிபலன்கள் கருதாத **கர்மயோகம்** வாயிலாக செய்த செயல் விளைவுகளின் பலன்கள் எல்லாம் அழிக்கப்பட்டு, **நன்மை – தீமை** என்ற இருமைகள் எல்லாமே ஒழிந்து, **இருப்பது இறைவன் மட்டுமே!** என்ற ஒருமையில் அந்த பரமனின் பரிபூரண அருள் கிடைத்து, அவர்களும் நம்முடைய சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பாரம்பரியத்தில் இணையக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

## 2. **சேவை** (பரோபகாரம்)

### சேவை என்றால் என்ன?

அகிம்சைக்கு அடுத்து, பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வரும் அனைத்து ஆன்மீக பயிற்சிகளின் முக்கிய வேர் தன்னலமற்ற சேவையாகும். எந்த விதமான பிரதிபலன்களையும் கருதாமல், செய்யும் செயலில் ஆதாயத்தைப் பார்க்காமல், ஆர்வமாக அனைத்து காரியங்களையும் கொடுக்கப்பட்ட கடமையாகச் செய்வதே **சேவை** அல்லது **பரோபகாரம்** எனப்படும்.

### தன்னலமற்ற சேவை என்றால் என்ன?

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இன்றி, எதிலும் பற்று வைக்காத, எதன்மீதும் உரிமைக் கொள்ளாமல், பிறர் நலனுக்காகச் செய்யும் செயலையே **சேவை** அல்லது **பரோபகாரம்** என்பதாகப் பார்க்கின்றோம். இதையே, **"கர்மயோகம்"** என்பதாகவும் பார்க்கின்றோம். அதாவது, **'தன்னலமற்ற சேவை என்பது ஒரு செயல் அல்ல. அது நம்மிடையே இருக்கின்ற எதார்த்தமான இயல்பு',** இது ஒரு இயல்பான அணுகுமுறை என்றே கூறலாம்.

அதாவது, தன்னலமற்ற சேவை என்பது **அன்பில் விளையும் ஆனந்த அனுபவம்.** அதை வார்த்தைகளால் விளக்க முடியாது. அதை அனுபவிப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும் நம்மிடமுள்ள மிகவும் திறமையான ஒரு கருவி நம்முடைய **உள்ளம்** மட்டுமே என்பதினால், உண்மையில் **சேவையுணர்வு** உண்டாவதின் வாயிலாக, நம் செயலிலுள்ள **அன்பு** அனைவராலும் உணரப்படும்.

தன்னலமற்ற **சேவை** அல்லது **பரோபகாரம்** என்பது, நம்மிடமுள்ள குறுகிய மனப்பான்மையை தூரம் வீசிவிட்டு, மிக உயரிய பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொண்டு, துயரமடைகின்ற எல்லா உயிருக்கும் எந்தவிதமான பிரதிபலனும் கருதாமல், உதவிசெய்கின்ற உத்தமமான செயல் ஆகும். இது மிக உயரிய இயற்கையின் ஒழுங்கு நியதியில் உண்டாகின்றது. இது நம்மைப் போன்ற ஆத்ம சாதகர்கள் அனைவரும் செய்ய வேண்டிய செயல் விளைவுகளாக இருப்பினும், இதன்மூலம், பாவம், புண்ணியம் போன்ற இருமைகள் எதுவும் நம்மை என்றுமே அணுகாது.

அதாவது, நல்லதை செய்தால் புண்ணியம் என்ற பலனையும் கருதாத, எந்த ஒரு பிரதிபலனையும் எதிர்ப்பார்க்காத, கொடுக்கப்பட்ட கடமையைச் சரியாகச் செய்கின்ற செயலுக்கே தன்னலமற்ற **சேவை** அல்லது **பரோபகாரம்** என்று பெயர். இதன்வாயிலாக, **நான் வேறு! அவன் வேறு!** என்ற இருமைகள் இல்லாமல்போய், இருப்பது இறைவன் மட்டுமே என்ற உயரிய மனோ நிலை நமக்கு உண்டாகும்.

அதாவது, நம்முடைய தனித்த மனமாகிய இருமைகளால் எழுந்த குறுகிய மனதை விடுத்து, ஒருமித்த பரந்தமனம் கொண்ட, பிரபஞ்ச மனமாகிய ஈஸ்வர சித்தத்தில் நாம் செயலாற்றும்போது, '**நான்**' என்ற தனித்துவ அடையாளங்கள் எல்லாம் மறைந்து, "**நாம்**" என்ற ஒட்டுமொத்த ஈஸ்வர நியதியில் **எல்லம் ஒன்றே!** என்ற ஒருமைநிலை உண்டாகும்.

ஒரு மனிதனால் செய்யக்கூடிய அரிதான மிகப்பெரிய விஷயங்களில் ஒன்று மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய தன்னலம் கருதாத சேவை மட்டும்தான். அதாவது, ஒருவர் செய்கின்ற தன்னலமற்ற சேவையின் உண்மையான வடிவம் என்பது, பதிலுக்கு எதையும் எதிர்ப்பார்க்காமல், நிஷ்காமிய கர்மாவாகச் செய்யும்போது மட்டும்தான், உண்மையான அன்பையும், அதில் தன் சுய சொரூபமாகிய ஆத்மாவையும் உணர்வதற்கான வாய்ப்பு உண்டாகும்.

பொதுவாக, சுயநலம் காரணமாக நம்முடைய மனம் எதையாவது விரும்பி, அதை மற்றாவர்களுக்கு செய்துவிட்டு, அதன்மூலம், அவர்களது பாராட்டைப் பெற விரும்புகின்றது. அதாவது, மற்றவர்களிடமிருந்து பாராட்டுகளையும், மரியாதைகளையும் மனம் விரும்புகிறது என்பதினால், அது பெருமைக்கும், தற்புகழ்ச்சிக்கும் இடம் அளித்துவிடும். அதன்காரணமாக, நம்முடைய அஹங்காரம் மேலும் வலுப்பெற்று, நாம் ஆழ்ந்த துயரத்திற்கு ஆட்படுவோம் என்பதையும் நினைவில் கொள்வது நல்லது.

ஆகவே, சேவை என்பது செய்யப்படும் **சிந்தனை, சொல்** மற்றும் **செயல்** ஆகிய இந்த மூன்றையும் கொண்டு, ஒருவர் தனக்குத்தானே செய்துக் கொள்ளும் தன்னலமற்ற தொண்டாக மட்டுமே இருக்க வேண்டும். அதைத்தவிர, மற்றவர்களுக்கு உதவுகின்றேன் என்ற உயரிய எண்ணம்கூட, தன் அஹங்காரத்தை வெளிப்படுத்தக்கூடிய ஒன்றாக மாறி விடுமானால், அது அந்த மனிதனை மகிழ்ச்சிப் பாதையில் இருந்து, வெகுதூரம் விலக்கிக் கொண்டு போய்விடும்.

எனவே, பிறர் நலன் காக்க தன் நலம் கருதாமல், செய்கின்ற அரிதான சேவைகள் மட்டும்தான் அவனுக்கு அமைதியையும், அக மகிழ்ச்சியையும், தன்நிறைவையும், பூரண மன நிம்மதியையும் தரும்.

## ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் சேவை

தன்னலமற்ற சேவையை நடைமுறைப்படுத்த, உடனடியாக நாம் உண்ணும் உணவில் ஒரு கைப்பிடி எடுத்து, மற்ற உயிரினங்களுக்கு கொடுக்கும் முறையை முதலில் கடைப்பிடித்தல் வேண்டும். அதாவது, பறவைகளுக்கு அல்லது விலங்குகளுக்கு நம்மால் முடிந்த உணவை தானமாக அளிக்கும் முறையை, நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் நாம் கட்டாயம் கொண்டு வரவேண்டும். இதுவே, தன்னலமற்ற செயலுக்கான நமது ஆரம்ப அணுகுமுறை ஆகும்.

எல்லா உயிரினங்களுக்கும் உணவளிப்பதை விட அன்பான, ஆழமான செயல் ஒன்றுமில்லை என்பதினால்தான் எல்லா சாதகர்களும், ஞானிகளும் தங்களால் இயன்ற இதுப்போன்ற செயலை இந்த சமுதாயத்தில் செய்தார்கள். அதாவது, பூமிக்குரிய இருப்பின் இந்த மண்டலத்திற்குள், நமது அரிதான உடலை தக்க வைத்துக் கொள்வதற்கான அரிய வாழ்க்கையை உணவை உண்பதன்மூலம் மட்டுமே நிலை நிறுத்தப்படுகிறது.

பொதுவாக, நம் வயிறு சத்தமிட்டால், சாப்பிடாமல் பசியோடு இருந்தால், எதையும் நம்மால் செய்ய இயலாது. ஆகவே, **"உண்டி கொடுத்தாரே உயிர் கொடுத்தோர்"** எனும் பண்டைய புறநானூறு பாடல் அன்னதானத்தின் ஆழமான உண்மையை மற்றும் அதன் சிறப்பினை எடுத்துரைக்கிறது.

ஆகவே, மற்ற உயிரினங்களுக்கு உணவு அளிப்பது என்பது, நமது அன்றாடக் கடமைகளில் ஒன்றாக மாற வேண்டும். அத்துடன், மற்றொரு உயிரினத்திற்கு உணவை வழங்குவது மூலம், ஒருவர் **தன்னிருப்பைத் தான் அறியும்** ஆணிவேரை வளர்ப்பதாகவும் அது ஆகின்றது.

நமது பாரத பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாகக் கருதப்படுவது **விருந்தோம்பல்** என்ற மிக உயரிய பண்பு. இதைத்தான் சனாதன தர்மத்தில் வேதம் கூறும்போது, **விருந்தினரைப் போற்றுங்கள்!** என்கின்றது. இவ்வாறு நாம் உணவு வழங்கி உறவுகளைப் போற்றும்போது, அது, அனைவரிடத்திலும் ஆழமாக உணரப்பட்ட அன்பு உணர்வின் பெருமிதம் என்பதினால், **மக்கள் தொண்டே மகேசன் தொண்டு!** என்பதாகவும் நம்மால் பார்க்கப்படுகின்றது.

அத்தகைய உயரிய பாரம்பரியத்தின் அடிப்படை என்பது, அக வாழ்க்கையின் ஆழமான புரிதலின் காரணமாக, அனைவரிலும் தன்னைக் காணுகின்ற பரம பவித்ரமான சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் இருக்கும் நமக்கான நற்பண்புகள் என்பதினால், எல்லோரிடமும் எளிமையாக இருப்பதும், எல்லா உயிர்களையும் தன்னுயிர்

போல நேசிப்பதும், எல்லாவற்றிலும் தன்னையே காண்பதும் ஆகிய இத்தகைய உயர் பண்பு நலன்கள் நம்முடைய மனதின் மகத்தான மாற்றம் என்பதினால், **எல்லோருக்கும் சேவை** என்பது, நம்முடைய **ஏதார்த்தமான இயல்பு** என்றே கூறலாம்.

அதாவது, **நிபந்தனையற்ற அன்பு** மற்றும் **தன்னலமற்ற செயல்** போன்ற இருமைகளற்ற இருப்பின் இயல்பில், நாம் எப்போதும் இருப்பது என்பது, தங்களை தனித்துவ அடையாளங்களில் சிக்காமல் காப்பாற்றிக் கொள்ளும் கலை. அதுவே, கருணையே வடிவான சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் உள்ளவர்களின் உண்மையான வாழ்க்கைமுறை என்பதையும் எல்லோரும் எளிதில் புரிந்துக் கொள்ளலாம்.

ஆக, இவர்களின் வாழ்க்கை முழுவதுமே, முற்றிலுமாக மற்ற உயிரினங்களுக்கு உண்மையாக இருப்பதும், நன்மைகள் பல செய்வதும், நமக்காக கொடுக்கப்பட்ட மனதையும், உடலையும் கொண்டு மற்றவர்களுக்கு உபயோகமாக வாழ்வதும் ஆகிய இவைகள் மட்டும்தான், இவர்களது இன்றியமையாதப்பணி என்பதாகவே இந்த பரம்பரையில் பார்க்கப்படுகின்றது.

அத்துடன் அவர்களது அத்தனை செயல் விளைவுகளையும் சாக்ஷாத் அந்த சர்வேஸ்வரனுக்கே என்று, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** அவர்களுக்கு **அர்பணிப்பு** செய்து விடுவதும் ஆகும். அப்போது மட்டும்தான், மனதில் **உண்மை, அமைதி, ஆனந்தம்** நிறையும். அதுவே, நம் அகவாழ்க்கைக்கான அடிப்படைப் புரிதல் என்பதாகவும் மாறும்.

எதார்த்தத்தின் ஒன்றான எல்லையற்ற சத்தியத்தின் சாரத்தை நாம் உண்மையாக உணரும்போது மட்டுமே, நாம் அதை நடைமுறைப்படுத்தவும், அத்தகைய நடைமுறையில் எந்தவிதமான எதிர்பார்ப்பும், உரிமையுணர்வும், சுயநலமும் இல்லாமல், எல்லாவற்றையும் எளிதாக **நேசித்தல், அன்பு செலுத்துதல், ஆசீர்வதித்தல்** அவைகளுக்கான ஆழமான உண்மை உணரப்படும். ஆக, இவ்வாறு தன்னலம் கருதாத சேவைகள் செய்தல் மூலம், நம்மை நாம் அனைத்திலும் காண்பது நிகழ்கின்றது.

அதாவது, ஒருவன் பிரதிபலன் பாராமல் செய்யும் சேவைகள் மூலம், அவன் செய்த அத்தனை சேவைகளுக்குமான பலன்களை அவன் எதிர்ப்பார்க்காவிட்டாலும், அந்த சேவைகள் அவனுக்கு ஆயிரம் மடங்கு உயரிய பலன்களாக திரும்பக்கிடைக்கும். ஆக, இயற்கையின் நியதிப்படி, இயற்கை அளிக்கும் கொடையை யாராலும் தடுக்க முடியாது.

பொதுவாக, நாம் மற்றவர்களுக்கு செய்யக்கூடிய பிரதிபலன் கருதாத செயல் விளைவுகள் எல்லாமே, நமக்கு ஆயிரம் மடங்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் வகையில் நமக்கு

ஏதேனும் ஒரு வகையில் திரும்பக் கிடைக்கின்றது. இந்த இயற்கையின் ஒழுங்கு நியதியை **ரிதம்** என்று கூறுகின்றோம்.

அதாவது, நம்முடைய உண்மையான அன்பை நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், நமது ஆன்மீகச் செல்வத்தை உலகிற்கு எவ்வளவு அதிகமாகச் செலுத்துகிறோமோ? அந்த அவ்வளவுக்கு அதிகமாக அந்தச் செல்வங்கள் பெருகிய நிலையில், அதிவேகமாக மீண்டும் நம்மிடமே வந்து அவைகள் குவியத் தொடங்குகிறது. அதன்மூலம், நம்மை நாம் நேர்மையானவராக, பணிவானவராகப் பார்க்கும் வரை, நாம் நம்மில் பாதுகாப்பாக இருப்பதை உணரமுடியும்.

அதுவே, நாம் அனைவருக்கும் உதவும் அளவிற்கு உயர்ந்துவிட்டோம் என்ற **ஆணவம்** (அஹங்காரம்) நம்மிடையே தலைத்தூக்கத் தொடங்கும்போது, இயற்கையின் அந்தப் பாதுகாப்பிலிருந்து வெளியேறி, நாம் படுகுழியில் தள்ளப்படுவோம் என்பதையும் மறந்து விடக்கூடாது.

எனவே, தன்னலமின்றி செய்யும் சேவைகள் இல்லாமல், நம்முடைய சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரை என்றுமே இல்லை. உண்மையில், '**தத்தா**' என்ற பெயருக்கு '**கொடுப்பவர்**' என்றே பொருள். ஆக, கொடுத்தல் என்பது, மற்றவர்களுக்கு உதவுதல் என்பதின் அடிப்படையில் நமது உயரிய பாரம்பரியம் உள்ளது. அந்த வகையிலே, உடலாலும், உள்ளத்தாலும் செய்கின்ற சேவைகள் நமக்கு அரிதான **அத்யாத்ம யோகம்** என்ற ஆன்மவியல் கல்வியைக் காட்டிக் கொடுக்கும்.

அத்தகைய உயர் ஞானக்கல்வியைக் கற்றுக் கொண்டவர்கள் நம்முடைய பரம்பரையில், மற்றவர்களின் ஆத்மீக வளர்ச்சிக்கான வழிகாட்டிகளாக கட்டாயம் இருப்பார்கள். மேலும், அவர்கள் அகவாழ்க்கை முறையை வாழ, கற்றுக் கொடுப்பதும், பிரதிபலன் கருதாத சேவையாகவே பார்ப்பார்கள். இதுவே, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரை மரபு.

## தன்னலமற்ற சேவை என்பது என்ன?

தன்னலமற்ற சேவையைத் தொடங்குவதற்கான சிறந்த வழி, நமது தற்போதைய வாழ்க்கையைக் கவனித்து, அதன்படி நம்மை நாம் சீர்படுத்திக் கொள்வதாகும். அதாவது, நாம் ஒன்றை உயர்வானது என்றும், மற்றொன்றை கீழானது என்றும் எண்ணுகின்ற

இருமைகள் இல்லாத சம வாழ்க்கையை வாழுகின்றோம் என்ற மிக உயரிய புரிதல் வருவதே, **ஞானம்** என்பதாக நமக்கு சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** போதிக்கின்றார்.

அதாவது, ஏற்கனவே, நம்முடைய வாழ்க்கையில் அன்றாட வேலைகளில் அனுதினமும் ஈடுபடும்போது, நமது குடும்பம் அல்லது நமது நெருங்கிய உறவுகள் என்ற எதாவது ஒரு சூழலில், நாம் மற்றவர்களுக்காக செய்யும் செயலில் ஒரு நேர்த்தியைக் கடைப்பிடிக்கத் தொடங்க வேண்டும். பொதுவாக, மற்றவர்களின் சுதந்திரம் பறிபோகாமல் மற்றும் அவர்களது மகிழ்ச்சி பாதிப்படையாதவாறு, நம்முடைய அணுகு முறைகளைக் கையாளவேண்டும்.

பொதுவாக, நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும், அதன் செயல்விளைவுகள் நம்மிடையே இருக்கின்ற எந்த ஒரு உயிரையும், உறவுகளையும் பாதிக்காதாவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், நாம் எப்போதும் நிகழ்காலத்தில் நின்று அவைகளை கவனிக்க வேண்டும். அதாவது, எப்போதும் நம் உள்ளத்தை நிகழ்வில் நிறுத்தி, நம்மிடம் நிகழ்கின்ற எல்லா எண்ணங்களுக்கும் வெறும் சாக்ஷியாக இருந்துக்கொண்டு கவனிக்கத் தொடங்கினால், நம் **செயலில் செயலற்ற தன்மையை** நம்மால் நன்கு உணர முடியும்.

அதாவது, நம் குடும்பத்தார்கள், உறவினர்கள், நண்பர்கள் என எல்லோருமே எனக்காக, எண்ணுடையவர்களாக இருக்கின்றனர் என்ற **மமகாரம்** இன்றி, இவைகளை எல்லாம் நான் செய்தேன் என்ற **அஹங்காரமும்** இன்றி, இவைகள் எல்லாவற்றிற்கும் **சாக்ஷியாக** மட்டுமே நான் இருக்கிறேன் என்று பார்க்க வேண்டும்.

ஏனெனில், இது எல்லாம் **ஈஸ்வரக் காரியம்**. அந்த காரியத்தை செய்கின்ற இந்த மனமும், உடலும் அவனது கருவிகள் என்பதினால், இவைகளுக்கெல்லாம் சாக்ஷியாக இருக்கும் நானோ, அந்த ஈஸ்வர ஆற்றல்களுக்கும் அப்பாற்பட்ட **தூய உணர்வு** என்ற நிலையில் நாம் நிற்கும்போது, நம்முடைய சமையல், சங்கீதம், சாஸ்திரம், சாதனை, வேலை, உத்தியோகம், என எல்லாமே அந்த தூய அறிவு ஒளியில் இன்னும் பிரகாசிக்கத் தொடங்கும், நல்ல நேர்த்தியான செயல்களாகவும் அவைகள் ஆகிவிடும்.

அதாவது, நாம் அன்றாடம் உண்ணும் உணவை சமைக்கும்போதும், அந்த உணவை உண்ணும்போதும், முடிந்தவரை மற்றவற்றில் கவனம் சிதறாமல், அதிக அக்கரையுடன், அவ்வாறு செய்யும் செயலில் மட்டும் இருந்துக்கொண்டு, சுவாரஸ்யமாக சமைத்து, சுவைத்து உண்ணும்போது, அதற்கான **நிகழ்வு** பாதிக்கப்படாத நிலையில் நாம் நிற்பதினால், அவைகள் எல்லாமே மூன்று காலங்களையும் கடந்த, அந்த தூய உணர்வுக்கு தானாகவே அர்ப்பணிக்கப்படுகிறது.

இந்த உயரிய அர்பணிப்பு நிலையில், அந்த உணவை சமைத்தவர், உண்பவர் என இருவருமே உண்மையான மகிழ்ச்சியை அடைகின்றனர். அவ்வாறு அடைந்த அந்த ஆனந்தம் மூலம் வெளிப்பட்ட **ஆழமான அன்பு** அவர்கள் இருவரையும் இணைக்கும் பாலம் என்பதினால், அவர்களிடையே **பந்தம் – விடுதலை** என்ற இரண்டுக்குமான புரிதலில், அது பற்றற்ற பரமனை உணர்ந்த **விடுதலை** என்பதாக மாறிவிடும்.

அவ்வாறே, நம் வீட்டில் உள்ளவர்களின் உடமைகளில் அவர்கள் உடுத்தும் உடைகளை எல்லாம் துவைத்து, தூய்மையாக்கும் பணியில், அதை அணிகின்றவகளுக்கு அக்கரையுடன் அந்த உடைகளைத் தூய்மை செய்துக் கொடுப்பதின் வாயிலாகவும், நம்முடைய அன்பு மேலும் மலருகின்றது.

அத்துடன் நின்று விடாமல், நாம் தங்கி இருக்கின்ற இருப்பிடத்தை இன்னும் சிறப்பாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் எனக்கருதி, வீட்டில் உள்ள தங்கும் அறைகளை கூட்டி, மெழுகி சுத்தமாக வைத்துக் கொள்வதின் மூலமாகவும், நாம் செய்யத் தொடங்கும் இத்தகைய எல்லா செயல்களும், **தன்னலம் கருதாத சேவையாக** மாறும்போது, நமக்கான **அன்பு உணர்வு** இன்னும் ஆழமாக மேலோங்குகின்றது.

ஆகவே, நாம் செய்யும் சேவைகள் முதலில் நம்மைச் சார்ந்தவர்களிடம், நம்முடைய உற்றார், உறவினர்களிடம் முதலில் தொடங்கி, படிப்படியாக பலரிடமும் பலன் கருதாத சேவையாக அவைகள் மாறி, அதுவே தூய அன்பாக மலரும்போது, நாம் அடையும் ஆனந்தம் ஒன்றே, நமக்கு எல்லாவற்றிலும் இறைவனைக் காட்டிக் கொடுக்கும்.

அதாவது, இன்று நம்முடைய வாழ்வில் ஏற்படும் தன்னலமற்ற சேவைக்கான வாய்ப்புகளை நாம் முதன் முதலாக நம்மைச் சார்ந்த நம்முடைய உறவுகளுக்கு செய்யத் தொடங்கி, அதனை மற்றவர்களுக்கு செய்யும் சேவையாகக் கருதி, அதன் வாயிலாக நன்கு தேர்ச்சி பெற்றவுடன், இயற்கையாகவே எல்லோரிடத்திலும் நாம் செய்கின்ற தன்னலம் கருதாத சேவைகள் மூலம், அன்பும், கருணையும் நமக்கு பலமடங்கு திரும்பக் கிடைக்கும்.

பொதுவாக, இதுப்போன்ற சேவைகளை செய்ய விரும்பும், நம்மிடம் இருக்கின்ற திறமைகள் என்பது, நமது சொந்தத் திறமைகள் என்று ஆணவம் கொள்ளக்கூடாது. அது அந்த தூய அறிவாகிய ஆத்மாவின் (பரமனின்) ஆற்றல், நம்முடைய அந்தக்கரணம் மற்றும் புறக்கரணங்கள் வாயிலாக பிரகாசித்து, இவ்வாறு நம்மை செயல்பட வைக்கின்றது என்பதை நாம் உணரும்போது, நம்மிடம் இருக்கின்ற ஆணவம் அழியும்.

ஆகவே, தன்னலமற்ற சேவையை ஒருவித கடினமான வேலை என்பதாகப் பார்க்காமல், ஏதோ கடமைக்காகச் செய்வதுப்போல செய்யாமல், அவைகளை நம்முடைய சொந்த இயல்பாகச் செய்ய வேண்டும்.

அதன்காரணமாக, நம்முடைய மனம் மிக உயரிய நிலைக்கு உயர்ந்து, பரமனை உணரும் பக்குவ நிலையை அடையும். மேலும், சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வருகின்ற நாம் தன்னலமற்ற முறையில், மற்றவர்களுக்கு செய்யும் சேவைகள் வாயிலாக, நாம் அதைப் பலமடங்கு மற்றவர்களின் வாயிலாக திரும்பப் பெறுவதும் தானாகவே நிகழும்.

ஒரே நேரத்தில் பல்வேறு நோக்கங்களுக்காக செய்யும் மிக உயரிய சேவையின் மூலம், நம்பமுடியாத அளவிற்கு நம் வாழ்க்கையில் பல பயனுள்ள மாற்றங்களைப் பார்க்க முடியும்.

மேலும், நாம் செய்கின்ற தன்னலமற்ற சேவையின் முக்கியத்துவத்தை மற்றவர்கள் நம்மைப் பார்த்துப் புரிந்துக் கொள்ளும்போது, அதன்வாயிலாக மற்றவர்களும் அந்த சேவை மனப்பான்மையில் வளர்ச்சியுறுவதை நம்மால் நன்றாகவே காண முடியும்.

அவ்வாறு, அவர்கள் செய்யும் தன்னலமற்ற செயல் விளைவுகள் மூலமாக, அவர்களது **கர்ம சுமைகள்** குறைக்கப்பட்டு, உயரிய சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** காட்டிய அத்யாத்ம யோகத்தின் பயணப்பாதைக்கான வாசலாக அது மாறும். அதாவது, **பரமனை அறியும் பரமபத வாசலை** மூடியுள்ள அறியாமைக் கதவைத் திறக்கும் அருமையான திறவுகோல் என்பது, உண்மையில் நாம் மற்றவர்களுக்கு செய்யும் **தன்னலமற்ற சேவை** என்பதில்தான் அடங்கியுள்ளது.

## 3. **அர்ப்பணிப்பு** (சரணாகதி)

**அர்பணிப்பு என்றால் என்ன?**

தன்னலமற்ற உயரிய சேவையின் உன்னத அரங்கிற்குள் நுழைவதற்கான உண்மையான நுழைவுச் சீட்டு எது? என்றால், அதுவே, **அர்ப்பணிப்பு** ஆகும். அர்பணிப்பு என்றால், நாம் நம்முடைய தனித்துவமான அடையாளங்களை இழந்து, இருக்கின்ற ஏக இறைவனான அந்த ஈஸ்வரனிடம் நம்மை நாம் முழுவதுமாக ஒப்படைத்துவிடுவது அல்லது அவனுக்கு உண்மையாக இருப்பது என்று பொருள்படும்.

பொதுவாக, நாம் எப்போதும் நம் வாழ்க்கையில், ஏதாவது பல செயல்களை செய்துக் கொண்டே இருக்கிறோம். அவ்வாறு, நாம் செய்கின்ற செயல்களின் மூலம் நாளடைவில் நம் மனதிற்கும், உடலுக்கும் ஒரு சோர்வு வரும். அதாவது, நம்மை நாம் மிகப்பெரிய ஆள் என்பதாகக் கருதிக் கொண்டு, கண்டபடி காரியங்களை செய்து வந்தாலும், சில காரியங்கள் நம் கட்டுப்பாட்டில் இல்லை. நம் கைமீறி போகின்றது என்ற புரிதல் வந்ததும், நம்மீது நமக்குள் இருக்கின்ற ஆணவம் அடங்கி, முதலில் அத்தகைய சோர்வை உண்டாக்கும்.

அந்த சோர்வை நாம் சரியாக உணர்ந்து, அதை தவிற்க வேண்டுமானால், அதற்கு நாம் செய்கின்ற செயல் விளைவுகளை எல்லாம் அந்த ஈஸ்வரனுக்கு **அர்ப்பணம்** செய்து விடவேண்டும்.

ஆனால், இன்றைய மனித வாழ்க்கையில் காண்பதற்கு அரிதான ஓர் அரிய பண்பு அர்ப்பணிப்பு என்றாலும், இவ்வுணர்வு ஒருவருக்கு எப்போது வெளிப்படும் என்றால், அது **அகிம்சை** மற்றும் **தன்னலமற்ற சேவை** உண்டாகும்போது மட்டுமே வெளிப்படும். அதாவது, அவைகள் அவர்களின் உள்ளுணர்வு சம்பந்தப்பட்ட உயரிய செயல் விளைவுகள் என்பதினால், அத்தகைய செயல்கள் அவர்களுக்கு மேலான ஈஸ்வரனுக்கு அர்பணிக்கும் ஆற்றலை வளர்த்து விடுகின்றது.

அத்தகைய அர்ப்பணிப்பு வரும்போது மட்டுமே, தனி மனிதன் தன்னுணர்வை தன்னுள் உணருவதற்கு உண்டான வாய்ப்பு திறக்கப்படுகின்றது. அந்நிலையில், அவர்களுடைய அத்தனை செயல்களுக்கான ஆற்றல் பேருணர்வின் பெருமிதமாக, இந்த உடலின் மூலம் உண்டாகின்றது என்ற உண்மை புரியவரும்.

அந்த உயரிய நிலையில், தனி மனிதன் தன் மீது மற்றவர்களால் ஏற்றிவைக்கப்பட்ட எண்ணங்களாகிய எழுச்சியைக் கவனித்து, தன்னை பிறப்பால் பிராமணன், சத்திரியன், வைசியன் என்ற நிலையில் பார்ப்பது, படித்த படிப்பின் காரணமாக தன்னை மருத்துவர், எஞ்சினீயர், வழக்கறிஞர் என ஏதாவது உத்தியோக ரீதியாகப் பார்ப்பது, அத்துடன் தான் வகிக்கும் பதவியின் காரணமாக, தன்னை அமைச்சர், அதிகாரி என இவைகளில் ஏதாவது ஒரு தனித்துவம் வாய்ந்த தனது அடையாளங்களை எல்லாம் இழந்து விடுவதும் நடக்கும்.

## அர்ப்பணிப்பு என்றால் யாருக்கு அர்பணிப்பது?

நிர்குண வடிவாகிய பரமன் இருப்பதற்கு எதுவுமே தேவையில்லை. ஏனெனில், அவன் மட்டுமே '**இருப்பு**' என்பதாக இருக்கிறான் என்பதினால், **சத்** என்ற **இருப்பு** எனும் தன்னை அறிய **சித்** என்ற **அறிவு** நிலையில் ஈஸ்வரனாகப் பரிணமிக்கும்போது மட்டுமே படைப்பு உண்டாகின்றது.

அதாவது, அவனது இருப்பை அவனால் உணர உண்டாக்கப்பட்ட பல்வேறு படைப்புகளில் தோன்றிய ஜடப்பொருட்களாகிய கல், மண் எனத்தொடங்கி, இவைகளுக்கு மேலான பல படைப்புகள் உண்டாக்கப்பட்டு, படைப்பின் பரிணாம வளர்ச்சியில் ஒரு அறிவு தாவரம் முதல் ஆறு அறிவு மனிதன் வரை எல்லாம் படைக்கப்பட்டது.

ஏக இருப்பின் அத்தகைய படைப்பு படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்து, அவைகளின் வாயிலாக, அந்த இருப்பு இருப்பதை உணர முடியுமானால், அதுவே, படைக்கப் பட்டவைகளில் எல்லாம் மேலானது என்பதினால், இருப்பின் (பரமனின்) இருப்பை உணருகின்ற மிக உயரிய பரிணாம வளர்ச்சி என்பது, படைக்கப்பட்டவைகளில் மகத்தான மனிதன் என்ற நிலையில், அவன் நிறைநிலை மனிதனாக உயரும்போது படைப்பு நிறைவாகின்றது. அந்த வகையிலே, **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலும் நிகழ்கின்றது. அந்த முத்தொழிலைப் புரிகின்ற ஆற்றலை நாம் பரமனின் **சக்தி** அல்லது **ஈஸ்வரன்** என்று அழைக்கின்றோம்.

ஆக, பரமனின் பவித்ரமான ஆற்றல் **ஒரு அறிவு** தாவரங்களில் தொடுவுணர்வு என்பதாக தொடங்கிப் படிப்படியாகப் பல்வேறு படைப்புகளின் வாயிலாக அறிவுப் பரிமாணத்தில் உயந்துக் கொண்டே வந்து, இரண்டறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு என வரிசையாகப் பரிணமித்து, இறுதியில் **ஆறாம் அறிவுப் பரிமாணத்தில்** வந்த நன்மை – தீமைகளைப் பகுத்தறியும் தன்மைக் கொண்ட மனம் என்ற நிலையில், ஆறாம் அறிவாகிய புத்தி சக்தியாக பரிணாம வளர்ச்சியடைந்தது.

அவ்வாறு, உயர் பரிணாம நிலையில் உயர்ந்த மனிதன் மட்டுமே **"நான் இருக்கிறேன்"** என்ற தன்னுணர்வை இருமைகளற்ற ஏக உணர்வில், தன்னிடம் விழித்துக்கொண்ட விவேகத்தினால் உணரும்போது, **இருப்பதெல்லாம் இறைவனே!** என்பதின் ஆழமான உண்மை அவனால் அறியப்படுகிறது.

அந்த வகையிலே, இங்கு அர்ப்பணிப்பு என்பது, எல்லையற்ற பிரபஞ்சமாக இருக்கும் ஈஸ்வரனின் அங்கமாகிய **நானும் அவனுக்கு வேறல்ல** என்பதாக தன்னை உணர்ந்துக் கொண்டு, நான் மற்றும் என்னுடைய தனித்துவ அடையாளங்களை இழந்து, அஹங்காரம், மமகாரம் அற்ற நிலையில், **எல்லாம் அவனே!** என்ற ஒருமைநிலையில், அந்த ஈஸ்வரனுக்கு ஒரு கருவியாகவே இந்த உடலும், உள்ளமும் உள்ளது என்ற மிக உயரிய புரிதலே உண்மையில் **அர்பணிப்பு** அல்லது **சரணாகதி** என்பதாகவும் பார்க்கப்படுகின்றது. ஆக, நாம் அனைத்தையும் அந்த படைத்து, காத்து, அழிக்கின்ற ஈஸ்வரனுக்கு அர்பணிக்க வேண்டும்.

அதாவது, எழுதுகின்ற எழுத்தாளராகட்டும், இசையமைக்கும் இசையமைப்பாளர் ஆகட்டும், புதுப்புது சித்தாந்தங்களை படைக்கும் அறிவியல் அறிஞர்களாகட்டும், அல்லது சமைக்கும் ஒரு சமையல்காரராக இருக்கட்டும், இவர்கள் யாராக இருந்தாலும், ஒன்றை செய்வதற்கு முன்னால், அதை செய்யும் சிந்தனை, ஆற்றல் இருக்கிறது அல்லவா? அந்த ஆற்றல் மற்றும் படைப்புத் திறன்தான் இங்கு **ஈஸ்வரன்** என்று அழைக்கப்படுகிறது. அந்த ஈஸ்வரனுக்கு, அந்த ஆற்றலுக்கே, அதன் அபரிமிதமான திறனுக்கு, நம் திறமைகளை நாம் **அர்ப்பணம்** செய்ய வேண்டும்.

அதாவது, அர்பணிப்பு என்பது **ஒப்படைப்பு** அல்லது **ஒப்புவித்தல்** எனும் அர்த்தத்தில் வரும்போது, நம்முடைய ஒருமித்த சிந்தனையில் வெளிப்பட்ட எண்ணம் செயலாக மாறி, அந்த செயலுடன் கூடிய நிகழ்காலத்தில் நம்மை ஒப்படைத்து, அதன் படைக்கும் ஆற்றல் மூலம், வெளிப்பட்ட நம் செயல் திறமைகள் எல்லாம் அந்த ஈஸ்வரனுக்கே உரித்தானது என்ற புரிதலின் மூலம், அனைத்தும் ஒன்றாகி விடுவது எனலாம்.

## ஈஸ்வரன் என்றால் யார்?

நம்முடைய வீட்டில் உள்ள பெண்கள் சமையல் செய்வார்கள். அவர்கள் சமையல் செய்து முடித்த பின்பு, நாம் அந்த உணவைப் பார்க்கிறோம். அந்த உணவு தயாராவதற்கு முன்னால் எப்படி இருந்தது? வாணலியில் வருபட்டு, வேக வைக்கப்பட்டு, தாளிக்கப்பட்டுக் கொண்டு இருந்தது.

அதற்கு முன்னால்?

கழுவப்பட்டு, நறுக்கப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டுக் கொண்டு இருந்தது.

அதற்கு முன்னால்?

இன்னைக்கு என்ன சமைக்கலாம்? எப்படி சமைக்கலாம்? என அந்தப் பெண் மனதில் பல்வேறு எண்ணங்களாக சிந்தனைகளாக இருந்தது. அந்த சிந்தனைகள், அந்த படைக்கும் ஆற்றல் எதன் வாயிலாக வெளிப்படுகின்றதோ? அதுவே, **ஈஸ்வரன்**.

சிவன்? விஷ்ணு? பிரம்மாவா? என்றால், இந்த மூவரையும் உள்ளடக்கிய முத்தொழிலைப் புரிகின்ற ஒரே ஒரு உயரிய ஆற்றலாக விளங்கும் ஈஸ்வரன் என்பவன் நம் உள்ளத்தில் இருக்கின்ற உள்ளுணர்வு என்பதினால், அவனது பேருணர்வு தன்மையில் சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** என்ற திருநாமம் கொண்ட நம்முடைய அறிவில் பிரகாசிக்கும் **அனைத்தையும் அறியும் அறிவு** என்பதாகவே அவரை நாம் பார்க்க வேண்டும்.

## ஈஸ்வரனுக்கு எதற்காக அர்பணம் செய்ய வேண்டும்?

நாம் கஷ்டப்பட்டு எல்லாவற்றையும் செய்கிறோம். பிறகு, அதை ஏன் அவருக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும்?

அதாவது, நம்மை நாம் மிக உன்னிப்பாக கவனித்தால் ஒன்று புரியும். நம்முடைய தனித்த மனதில் உண்டான ஏராளமான எண்ணங்களின் விளைவால் வெளிப்பட்ட சிந்தனா சக்திகள் எல்லாம், ஒரு மிகப்பெரிய படைப்பாற்றலின் ஒரு கூறு என்பதினால், அது பிரபஞ்ச மனமாகிய **ஈஸ்வர சங்கல்பம்** என்பதை நாம் நன்கு அறிந்துக்கொண்டு, அந்த எண்ணங்களின் போக்கை, வெறும் சாக்ஷியாக மட்டுமே பார்க்கப் பழக வேண்டும்.

அவ்வாறு, எழுகின்ற எண்ணங்களின் வாயிலாக, புலன்கள், அந்தக்கரணங்கள் மற்றும் புறக்கரணங்கள் என எல்லாம் நம் உடலின் வாயிலாகப் பிரகாசிக்கவும், அந்த தூய அறிவாகிய பரமன் இருப்பதினாலேயே நான் எல்லாவற்றையும் அறிகிறேன் என்பதாகவும் பார்க்கப் பழக வேண்டும். அதாவது, **அவனின்றி ஒரு அணுவும் அசையாது** என்ற உயரிய உண்மையை நாம் நம்முள் நன்கு உணர வேண்டும்.

அதைவிடுத்து, எழுகின்ற எண்ணங்களை எல்லாம் நம்முடைய நடைமுறைக்கு கொண்டு வந்து, அவைகளை நம்முடைய செயல் விளைவுகளாக மாற்றும்போது, அந்த செயல் விளைவுகளுக்கு உண்டான **பாவ, புண்ணியங்கள்** மீண்டும் நம்மிடமே திரும்பி வந்து, நமக்கு நன்மை, தீமைகள் என்பதான கர்மபலன்களாக இருமைகளில் இருந்துக் கொண்டு, நம்மை மேலும், மேலும் மனப்போராட்டத்திற்கு உட்படுத்தும்.

பொதுவாக, ஓடுகின்ற ஆற்றின் நீரோட்டம் போகின்ற வழியிலேயே நாமும் போகும் போது, அந்த ஆற்றைக் கடப்பது மிகவும் எளிதாக இருக்கும். ஆனால், அந்த நீரோட்டத்திற்கு எதிர்நீச்சல் போடும்போது, நாம் தளர்ந்து போகிறோம். அதனால்தான், நம்முடைய வாழ்க்கை எப்போதுமே போராட்டமாகத் தெரிகிறது. அதுவே, நாம் அந்த ஆற்று வெள்ளத்தில் ஒருதுளி என்று அறிந்துக் கொண்டால், அதுப்போகும் போக்கில் நாமும் போகும்போது, அங்கு போராட்டம் என்பது இல்லவே இல்லை.

ஆகவே, இதை நன்கு மனதில் உள்வாங்கிக் கொண்டு, ஈஸ்வர சங்கல்பங்களின் மூலம் வெளிப்படும் எல்லா எண்ணங்களையும் வெறும் சாக்ஷியாக மட்டுமே பார்க்க வேண்டும். அதையும் மீறி, சில எண்ணங்கள் செயல்களுக்கு வந்தால், அதுவும் ஈஸ்வர சங்கல்பம் என்பதாகவே எடுத்துக்கொண்டு, அவைகளை அவனுக்கே உரித்தானது என ஈஸ்வரனுக்கே அர்ப்பணம் செய்யும்போது மட்டும்தான் உண்மையில் நம் ஆசைகள், கர்மவினைகள், வினைப்பயன்கள், வினையின் விளைவுகள் என எதுவும் நம்மை பாதிக்காது.

ஆகவே, அவருக்கு அர்ப்பணிப்பது என்றால், **எல்லாம் நீ பார்த்துக் கொள்!** என்று சோம்பேறியாக இருப்பதல்ல. நமக்கு வருகின்ற இன்ப, துன்பங்களாக இருப்பவற்றை அவனது பிரசாதமாக ஏற்றுக் கொள்வது.

வாழ்க்கை நமக்கு எதைத் தருகிறதோ? அதை அப்படியே ஏற்றுக் கொள்வது. அதாவது, அதற்கு முரணாக **அது வேண்டும், இது வேண்டாம்** என்று இருமைகளால் சண்டை பிடிப்பது கூடாது. எனவே, நமக்கு வாழ்க்கையில் கிடைத்தவைகள் எல்லாம் நல்லவையே என்று அவற்றை முழுமையான திருப்தியுடன் பிரசாதமாக எடுத்துக் கொண்டால், நம் உள்ளமும், உடலும் மிக, மிக ஆரோக்கியமாக இருக்கும். புலன்கள் புதுப்பொலிவு பெறும். அக, புறக்கரணங்கள் நம் கட்டுப்பாட்டில் வரும்.

## ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் நமது அர்பணிப்பு

சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** முத்தொழிலைப் புரிகின்ற **பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன்** எனும் ஈஸ்வன் என்பதினால், அவர் ஒரே நேரத்தில் எல்லா உயிர்களின் உள்ளேயே உயரிய உள்ளுணர்வாகவும், எல்லையற்ற பிரபஞ்ச ஆற்றலாகிய பேருணர்வு நிலையில் இந்த உலகமாகவும் வணங்கப்படுகிறார். இந்த ஒட்டுமொத்த பிரபஞ்ச பேருணர்வு வெளியில், **அனைத்தையும் அறியும் அறிவு** என்பதாகவே அவரை உணரும்போது, நம்மிடையே இருக்கும் அறியும் உணர்வும், ஒன்றே என்பதினால், நம்மிடையே **அறிபவன், அறிவு, அறியப்படும்பொருட்கள்** என எல்லாமே ஒரே இருப்பு இருப்பதினாலே இருக்கின்றது என்பதையும் நாம் நன்கு உணர்வோம்.

அத்தகைய இருப்பே, **"நான் இருக்கின்றேன்"** என்ற தன்னிருப்பை எப்போதும் நமக்கு உணர்த்திக் கொண்டே இருக்கும் என்பதையும் நாம் உணரவேண்டும்.

அந்தவகையிலே, எல்லையற்ற பேருணர்வாகிய ஈஸ்வரனே நம்மிடையே மனித உருவில் அவதாரம் எடுத்து, சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** என்ற திருநாமம் கொண்டு, நம்மை பல்வேறு வழிகளில் வழி நடத்திக் கொண்டு செல்லும் வாழையடி வாழையாக வருகின்ற சத்குருமார்களின் பரம்பரையில், சரியான வழிகாட்டுதல்களின் மூலம், ஆன்மீகத்தின் உயரிய நிலையாகிய அந்நியமில்லாத பக்தியாகிய அனன்ய பக்தியினால், நம்முடைய ஒருங்கிணைந்த அன்பு உணர்வை அனைத்திலும் பராமரிக்க உதவும்.

அந்தவகையிலே, மிக உயரிய சத்குருமார்களிடம் உறவாடுகின்ற நாமும், நம் குடும்பத்தாரும், ஏன் இந்த ஒட்டுமொத்த உலகத்தாரும், ஒன்று கூடிய ஒரு மிகப்பெரிய குடும்ப விருட்சமே (மரம்) நம் பாரதத்தின் **"சனாதன தர்மம்"** என்பதினால், அந்த உயரிய தர்ம வழியில், ஆத்யாத்ம யோக வழியில், அவரது வாரிசுகளின் பரம்பரையில் நம்மையும் பங்கு கொள்ளச் செய்வது என்பது, நாம் எத்தனையோ பிறவிகளில் செய்த பல்வேறு சிறப்பான செயல்விளைவுகளின் **சிறந்த பரிசு** என்பதாகவே பார்க்கப்பட வேண்டும்.

இப்படிப்பட்ட சனாதன தர்மத்தில் வழியில், மெய்ஞ்ஞானத்தை போதித்த அனைத்து சமயங்களும், மதங்களும் நம்முடைய பாரத தேசத்தில் தோன்றின என்பதினால், நாம் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, அவர்களையும் அரவணைத்து, நாம் எல்லோரும் ஒரே குடும்பம் என்ற **'வசுதைவ குடும்பகம்'** எனும் நம்முடைய பாரம்பரியத்தில் இணைவதற்கு ஒரு வாய்ப்பாகவும் இந்த **அர்ப்பணிப்பு** அல்லது **சரணாகதி** அமைகின்றது.

# 4. **தூய்மை** (மெய்யுணர்தல்)

## **தூய்மை என்றால் என்ன?**

தூய்மை என்பதன் எளிமையான ஒத்தகருத்துச் **சொல் சுத்தம், சுத்திகரிப்பு** எனலாம். **துப்பரவு** என்னும் மற்றோர் சொல்லும் உண்டு. இத்தூய்மையானது **புறத்தூய்மை, அகத்தூய்மை** என இருவகைப்படும்.

இதுபற்றி வள்ளளுவர் தமது திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் வாய்மை எனப்படும் முப்பதாவது அதிகாரத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை**
**வாய்மையால் காணப்படும்". –** குறள்.

ஒரு மனிதன் தனது உடலை நீரைக் கொண்டு கழுவிக் குளித்து சுத்திகரித்துக் கொள்ள முடியும். ஆயினும் அவனது உள்ளத்தின் சுத்தமானது அவனிடம் காணப்படும் உண்மைத் தன்மையால் மட்டுமே உணரப்படும் என்கிறார்.

*"ஒரு மனிதனின் தூய எண்ணங்களை அவரது செயல்களும் பிரதிபலிக்கின்றன."*

தூய்மை என்பது, **'உண்மை'** அல்லது **'சத்தியம்'** என்ற பரமனின் பவித்ரமான நிலையை நமக்கு உணர்த்துகின்றது. அந்தவகையிலே, நம்மிடம் காணப்படுகின்ற **உண்மை** அல்லது **சத்தியம்** என்பது நம்முடைய இயல்பு என்பதாகவே இருக்க வேண்டும்.

ஒரு மனிதனின் அகத்தூய்மைக்கான அரியப் பாதை அவன் தன் உண்மைத் தன்மையை உணர்வதே ஆகும். அந்த வகையிலே, நம்மிடம் காணப்படவேண்டிய முதற் பண்பு நலன்களில் உண்மை பேசுதல் மட்டுமே அவனை அவனுக்குக் காட்டிக்கொடுக்கும். ஆக, நாம் கொண்டுள்ள உண்மை பேசுவதினால் உண்டாகும் மனத்தூய்மையில் மட்டும்தான் அந்த **பரம சத்தியம்** அடங்கியுள்ளது. அதன் அடிப்படையில், அனைத்திற்குக் ஆதாரமான பரமனை தன்னுள் உணர்வதே உண்மையில் **மெய்யுணர்தல்** என்பதாகப் பார்க்கப்படுகின்றது.

பரமன் நம்முடைய மன உணர்வால் மட்டுமே உணரப்படுபவன் என்பதினால், நம்மனம் தூய்மையாகும்போது மட்டுமே பரமனை அதில் உணரமுடியும்.

அந்த வகையிலே நம்மிடம் வெளிப்படுகின்ற வாய்மை என்பது, ஏதோ வெளியே இருந்து உற்பத்தி செய்ய வேண்டிய ஒரு பொருள் அல்ல. ஏனெனில், அது எப்போதும் நம்மிடம் இருப்பது.

அதுவே **இருப்பு**. அதுவே **ப்ரஹ்மம்**. அதுவே **சத்தியம்.** அதுவே **மெய்யுணர்வு.**

அந்த மெய்யின் மீது உடல் என்ற மற்றொரு பொய் உண்மைப்போன்று இருந்துக் கொண்டு, உண்மையான மெய்யை மறைக்கின்றது. அதாவது, அந்த தூய மெய்யாகிய சத்தியத்தின்மீது, அறியாமைகள் என்ற அழுக்குகள் ஏற்றி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறியாமை அழுக்களும் அப்படியே நேரடியாக அந்த சத்தியத்தின்மீது ஏறிக்கொள்ள முடியாது. அது எப்படி? மெய்மீது ஏறி இருக்கின்றது என்றால், ஒரு கண்ணாடி ஸ்படிகக்கல் அருகே வைக்கப்பட்ட செம்பருத்தி மலரின் சிவந்த நிறத்தை, அந்த ஸ்படிகக்கல் ஏற்றுக் கொண்டு, தற்காலிகமாக அந்த ஸ்படிகக் கல்லும் சிவந்த நிறமாகக் காட்சியளிப்பதுப்போல, இங்கு அறியாமைகள் எனும் அழுக்குகள் அந்த தூய மெய்மீது படிந்துக் கொண்டு, அதை மறைக்கின்றது.

அந்த ஸ்படிகக்கல் மீது ஏறிக்கொண்ட சிவந்த நிறத்தை நீரினால் கழுவினாலோ? அல்லது துணியினால் துடைத்தாலோ? அது நீங்காது. அந்த ஸ்படிக்கல் மீது இருக்கின்ற சிவந்த நிறம் போக வேண்டுமானால், அதனருகே வைக்கப்பட்டுள்ள அந்த செம்பருத்தி மலரை அங்கிருந்து அகற்றுவது மட்டுமே அதற்கான ஒரேவழி. அதுப்போல, அறியாமை எனும் அழுக்குகள் ஏறிக்கொண்ட மனதிற்கு, அந்த அறியாமைகளை சுட்டிக் காட்டுகின்ற **அத்யாத்ம யோகம்** என்ற கல்வியைக் கற்றுக் கொடுப்பதினால் மட்டுமே, அதை எந்த புற முயற்சியும் இன்றி, அந்த அறியாமை அழுக்குகளை எல்லாம் அகற்ற முடியும். அதுவே மனம் அடைகின்ற **தூய்மை** எனப்படும்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி". – குறள்.

கற்க வேண்டியவற்றைக் கற்று, அந்த மெய்ப்பொருளை உணர்ந்தவர், மீண்டும் இப்பிறப்பிற்கு வராத வழியை அடைவார்கள் என்பதாக குறிப்பிடுகின்றார்

பொதுவாக, ஆன்மிகப்பாதையில் பயணிக்கின்ற பெரும்பாலான சாதகர்கள் அனேக பயிற்சிகளை பல நூல்களின் வாயிலாக படித்துவிட்டு, அதன் பயன்கருதி பலவாறாக பயிற்சிகள் செய்துக் கொண்டிருப்பார்கள். அவர்களைப் பொருத்தவரை, அந்த பயிற்சிகள் வாயிலாக, அவர்களது மனம் தூய்மையாகி, அவர்களது கர்மபலனை அழிக்க முடியும் என்பதாகவும், அதன்மூலம் அந்த பரமனை அடைய முடியும் என்பதாகவும் கருதிக்கொண்டு கண்டபடி ஏதாவது ஒரு பயிற்சியை மேற்கொள்வார்கள்.

மனதில் ஏற்கனவே ஏற்றி வைக்கப்பட்ட ஏராளமான தவறான எண்ணங்கள் எனும் அழுக்குகளை அகற்ற, இன்னும் சில புத்தகங்களைப் படித்துவிட்டு, மேலும் பல புதிய, புதிய பயிற்சி முறைகளை செய்தவாறு இருப்பதினால், அவர்கள் மனம் இன்னும் அவைகளில் ஆழமாக சிக்குண்டு சிதறித்தான் போகுமே தவிர, சிறப்பான விவேகத்தினால் விழித்துக் கொண்ட மனமாக என்றுமே மாறாது. ஆகவே, மனத்தூய்மை என்பது புறப்பயிற்சிகளால் அடையக்கூடியது அல்ல. அது அரிதான அத்யாத்ம யோகத்தின் வாயிலாக நம்முடைய அறியாமைகளை அகற்றுவது மூலம் மட்டுமே அடையப்படுவது.

## ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் மெய்யுணர்தல்

பொதுவாக அறிவு என்பது மனித வாழ்க்கைக்கு மிகவும் முக்கியம். பொருள் சார்ந்த நடைமுறை வாழ்வுக்கு மட்டுமின்றி ஆன்மிக வாழ்வுக்கும் இந்த அறிவு மிகவும் அவசியம். அந்தவகையிலே, மனிதன் தன்னுடைய புறவளர்ச்சிக்கான வாழ்க்கை வாழ்வதாக இருந்தாலும், அக வளர்ச்சிகான வாழ்க்கை வாழ்வதாக இருந்தாலும், இந்த இரண்டையும் இணைக்கும் பாலமாக உள்ள ஒரு உயரிய மார்க்கமே **அத்யாத்ம யோகம்** என்பதினால், இதைக் கற்றுக் கொள்வதினால் மட்டுமே மனிதன் தன்னைத் தானே தன் மனதினால் விசாரித்து, விழித்துக் கொண்ட விவேகத்தினால் மனதிற்கு விடுதலை தர முடியும்.

இந்த அத்யாத்ம யோகத்தை அடையப் பல வழிகள் இருப்பினும், அதில் ஒன்று **ஞான யோகம்** என்ற சாஸ்திரங்களை கேட்டல், அதைப்பற்றிய தெளிவை அடைதல், அவ்வாறு அடைந்த ஞானத்தில் நிலைப்பெற்று நிற்றல் எனலாம். அந்தவகையிலே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், **"மந்திரங்களில் நான் காயத்ரி"** என்று கீதையில் கூறுகிறார்.

அதாவது, *"யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ? அந்த சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக"* என்பது காயத்ரி மந்திரத்தின் ஆழமான உட்பொருள். இதிலிருந்து, அந்த தூய **அறிவை அறியும் அறிவே** உண்மையில் விழித்துக் கொண்ட அறிவு.

இதிலிருந்து ஆன்மிக வளர்ச்சிக்கு அடிப்படையான அறிவு என்பது, நாம் புறத்திலே ஏற்றிக் கொள்ளுகின்ற புற அறிவு உண்டாக்கும் பல நூல்களைக் கற்றல் என்பதோடு, நாம் நின்று விடாமல், அகத்திலே அந்த தூய அறிவை உணருகின்ற மிக உயரிய **அத்யாத்ம யோகம்** என்ற ஆன்மவியல் கல்வியைக் கற்பதின் மூலம்தான் நம்முடைய அறியாமைகள் என்ற மன அழுக்குகள் அகன்று, அந்த தூய அறிவாக நாம் பிரகாசிக்க முடியும். பொதுவாக, மனம் என்பது ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கிறது.

அத்தகைய நினைவுகளை எல்லாம் நீக்கிப் பார்க்கும்போது, தனியாக மனமென்று ஒன்று இல்லை. ஆகையால், எண்ணங்கள் எனும் நினைவுகளே மனதின் சொரூபம். எண்ணங்களாகிய நினைவுகளைத் தவிர்த்து, இந்த **உலகம்** என்ற ஒன்று ஒருபோதும் இல்லை. அதாவது, நம்முடைய ஆழ்ந்த உறக்கத்தில் எண்ணங்கள் ஏதும் இல்லை. ஆதலால், அங்கு நினைவுகளில்லை, இந்த உலகமும் அங்கு இல்லை. இது நம் ஒவ்வொருவருக்கும் அனுபவ உண்மை.

அந்த வகையிலே, விழிப்பு நிலையிலே, மனமற்ற நிலையில் நம் சுயம் நமக்கு அனுபவமாகும். அதுவே, ஏன் ஆழந்த உறக்கத்தில், மனமற்ற நிலையில் அது நமக்கு அனுபவம் ஆகவில்லை என்றால், அங்கே தன்னை அறியும் தன்னிருப்பு நிலையாகிய மெய்யுணர்வு நிலையாகிய **விழிப்பு நிலை** உணரப்பட முடியாதவாறு, உள்ளம் வெளிப்பட முடியாமல் இருக்கின்றது. அதற்குக்காரணம், உள்ளம் என்பது நம்முடைய **மனம், பிராணன்** என இரண்டும் இணைந்த **உயிராற்றல்** என்பதினால், அதை உணரக்கூடிய **விழிப்புணர்வு நிலை** அப்போது நம்மிடம் இல்லாமல் இருப்பதே ஆகும். சத்குரு பகவான் ஸ்ரீ **தத்தாத்ரேயர்** பரம்பரையில் வந்த பலரும் இந்த விழித்துக் கொண்ட விழிப்பு நிலையில் விவேகத்தினால் மனதை விசாரித்து அறியும்போது, அறுதி உண்மை அல்லது **மெய்யுணர்வு** அவர்கள் உள்ளத்தால் உணரப்படுகின்றது.

பொதுவாக, இன்றைய மக்களின் மனப்போக்கில் சத்தியம் தவறி விட்டதால், எங்கு காணினும், போலித்தனம், ஏமாற்றுதல், பொய் வழக்குகள், இத்துடன் மேலும் வலுவாகப் பற்றியுள்ள ஜாதி, மத வேற்றுமைகள் என ஏராளமான இருமைகளுடன் கூடிய நிலை காணமுடிகின்றது. இதைத் தடுத்திட வேண்டும் என்றால், '**அனைவரும் ஒன்றே!**' என்ற அரிய உண்மை அறியப்பட வேண்டும்.

சத்குரு பகவான் ஸ்ரீ **தத்தாத்ரேயர்** பரம்பரையில் வந்த நம்மைப் பொருத்தவரை இருப்பது ஒன்று மட்டுமே, அது கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பங்களைப் போன்று பலவாகக் காணப்படுகின்றது. அதனால், "**பிரம்மம் சத்தியம், ஜகத் மித்யா**" என்பது எளிதாக விளங்குகின்றது. எந்த வாக்கியத்திற்கு பலன் கிடைக்கின்றதோ, எதைப் புருஷார்த்தமாக வைக்க முடியுமோ? அதைத்தான் "**மகாவாக்கியம்**" என்று கூறமுடியும்.

அதுப்போன்றே, வேதத்தில் பிரஹ்மத்தின் ரகசியமான பெயர் '**சத்யஸ்ய சத்யம்**', அதாவது, **சத்தியத்தின் சத்யம்** எனப்படுகின்றது. இது மிகவும் புனிதமான பெயர். அந்த வகையிலே, உபநிஷத்தில் வருகின்ற மகா வாக்கியத்தையே "**சத்யமேவ ஜெயதே**" என்பதை "**வாய்மையே வெல்லும்**" என்ற சத்தியத்தின் பொருளை உணர்ந்து, அன்றைய பெரியோர்கள் நம் இந்தியாவின் தேசியக் குறிக்கோளாக இந்த வார்த்தையைக் கொண்டு, இதன்படி நாம் அனைவரும் வாழ வேண்டும் என்று எதிர்ப்பார்த்தனர்.

## மனத்தூய்மைக்கான பயிற்சி செய்வது எப்படி?

சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வந்து, மகத்தான மனதை விழித்துக்கொண்ட விவேகத்தினால் விசாரித்துப் பார்க்கும்போது, என்னுள் எப்போதும் "**நான்**" என்று ஸ்புரணம் ஆகிக்கொண்டிருப்பது எதுவோ? அதுவே, **மனம்** ஆகும்.

அதாவது, **நான்** என்னும் நினைவு எந்த இடத்தில் தோன்றுகிறது என்று விழித்துக் கொண்ட விவேகத்தினால் **விசாரம்** செய்துப் பார்த்தால், அது நம்முடைய இருதயத்தில் (உள்ளத்தில்) என்பது தெரியவரும். **இது பௌதீக இதயம் அல்ல!** அது நம்முடைய கண்களுக்குப் புலப்படாத **அறிவு ஆகாசம்** இருக்கின்ற நம்முடைய உச்சந்தலை ஆகும். அதுவே, மனதின் பிறப்பிடம் என்பதினால், அதன் நினைவுகள் எல்லாவற்றுக்கும் **நான்** என்னும் நினைவே **முதல் நினைவு** என்பதினால், இந்த '**நான்**' எழுந்த பிறகே, மற்ற எல்லா நினைவுகளும் எழுகின்றன.

**நான் யார்?** என்ற விசாரணை ஒன்றினால் மட்டுமே, மனதின் எண்ணங்களை எல்லாம் விசாரித்து, விழித்துக் கொண்ட விவேகத்தினால், அந்த எண்ணங்களுக்கு எது சாக்ஷியாக இருக்க முடியுமோ? அதுவே, "**உண்மையில் நான்**" என்று தன்னை அந்த தூய உணர்வாக அறிவது ஒன்றே **மெய்யுணர்வு** எனப்படும்.

ஆக, **நான் யார்?** என்னும் விசாரணையின் முடிவில், நான் எல்லாவற்றிற்கும் **சாக்ஷி**. அந்த தூய அறிவாகிய **ஆத்மா.** அந்த **உணர்வு** என்று தன்னை உணர்வதே உண்மையில் **சுய உணர்வு** அல்லது **மெய்யுணர்தல்** ஆகும். இந்த நிலையில் இவர்கள் செய்யும் செயல்கள் எதுவாக இருப்பினும், அந்த செயலை தன்னுடைய செயல் என்று கருதாமல், "**இதை நான் செய்கின்றேன்**" என்று சுயநலமாகக் கருதாமல், அது மற்றவர்களுக்கு பயன்படக்கூடிய பொதுநலன் சார்ந்த செயலாக மாறினால், அதுவே, **மனத்தூய்மைக்கான மகத்தான வழி.**

அடுத்து, சர்வ வல்லமை பொருந்திய சர்வேஸ்வரனாகிய பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** நம் அனைவருக்கும் சத்குருவாக வருவதால், அவரது சந்நிதியில் சரண்டைகின்ற சரியான எண்ணம் ஒன்றே நம்மை எப்போதும் "**ஈஸ்வரா குருதேவா!**" என அவரது சிந்தனையில் நிற்க வைக்கும். அந்த நிலையில் நாம் அவரது உபதேசங்களை சரியான சத்குருவின் வழிகாட்டுதலில் கற்பது மூலம், நம் மனம் விழித்துக் கொண்ட விவேகத்தினால், அந்த தூய அறிவாகிய பரமனை தன்னுள் மெய்யாகவே உணரும். இதுவே **மெய்யுணர்தல்** எனப்படும்.

## **5. மந்திரம்** (மனதின் திரம்)

### மந்திரம் என்றால் என்ன?

பொதுவாக மந்திரம் என்பதை **மனம்+திரம்** என்று ஒன்றாக்கி, அதனை நம்முடைய **மனதின் திரம் = மந்திரம்** என்று அறியலாம். அதாவது, நம் மனதை உறுதிப்படுத்த அதற்கு கொடுக்கப்படுகின்ற பயிற்சி முறையில் மந்திரம் பயன் படுத்தப்படுகின்றது. மந்திரம் என்ற சொல் சமஸ்க்ருத மொழியில் இருந்து வந்தது.

**"மந்"** என்றால் **மனம். "திர"** என்றால் **விடுதலை** என்று பொருள்.

ஆகவே மந்திரம் என்பது நம் மனதை பல உலகியல் சார்ந்த எண்ணங்களில் இருந்து விடுதலை பெற உருவாக்கப்பட்ட உன்னத ஒலிகளின் ஒரு கூட்டமாகும்.

மந்திரத்தை **மனனம்+திரயதே** என்றும் கூறலாம்.

**"மனனம்"** என்றால் **'நினைப்பது'**, ஜபிப்பது, உச்சரிப்பது எனப் பொருள் கொள்ளலாம். **"திரயதே"** என்றால் **'காப்பாற்றுதல்'** எனப் பொருள். ஆக, மந்திரம் என்பது ஜபிக்கின்ற ஒருவரை அல்லது உச்சரிப்பவரை காப்பாற்றுவது என்று பொருள்.

மற்றொரு வகையில் **"மந்"** என்றால் **'மனம்', "திர"** என்றால் **'பிராணன்'**.

அதாவது மனதையும், பிராணனையும் ஒன்றாக உணரச்செய்வது **"மந்திரம்"** எனப்படும். இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சத்தின் தோற்றம் ஒலியிலிருந்தே உற்பத்தியாகியது. அந்த வகையிலே, மந்திரங்கள் பிரபஞ்சத்தில் உள்ள தெய்வீக சக்தியின் **அதிர்வலைக் குறியீடுகள்** எனப்படும். பரமனின் பராசக்தியாக விளங்கும் பஞ்சபூதங்களும் ஈஸ்வர சக்தியாகவே இருப்பதினால், அந்த ஒவ்வொரு பூதமும் ஒரு தெய்வீக சக்தி கொண்டதாக இருப்பதினால், அதற்கான ஒவ்வொரு அதிர்வலைகள் உண்டு.

அதாவது, மனதை திடமாக உறுதிப்படுத்த அதற்கு கொடுக்கப்படுகின்ற அதிர்வலை பயிற்சி முறையில், நாம் நம் சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் **"ஓம்"** எனும் மந்திரம் பயன்படுத்துகின்றோம். ஆகவே, இந்த மந்திரம் நம் மனதை பல உலகார்ந்த எண்ணங்களில் இருந்து விடுதலை பெற உதவும் வகையில், உருவாக்கப்பட்ட பரமனின் பவித்ரமான ஆற்றலாகிய அதிர்வலைகளின் ஒரு கூட்டமாகும். அதுவே, **"ஓம்"**.

**"மனனாத் த்ராயதே இதி மந்த்ர:"** என்பது மந்திரத்துக்கு ஏற்பட்ட இலக்ஷணம்.

அதாவது, **"மனனம் செய்தால் எது காப்பாற்றுகிறதோ அதுவே மந்திரம்". ஆக, த்ராணம்** அல்லது **த்ராயதே** என்றால் காப்பாற்றுவது என்று பொருள்.

**"பரித்ராணாய ஸாதூனாம்"** (நல்லவர்களை காப்பாற்றுவதற்காக) என்பது, பகவத்கீதையின் ஒரு வாக்கியம் என்பதினால், ஒன்றை மனனம் செய்வதால், **த்ராணம்** (காப்பு) தருவதே **மந்திரம்** என்பதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

மனனம் என்றால், மனதுக்குள் அதைப்பற்றி சிந்தித்துக் கொள்வது மட்டும்தான். வாய்விட்டுச் சொல்லக்கூட வேண்டாம். மனதுக்குள் மந்திர சப்தங்களை சிந்தித்துத் கொள்வதாலேயே நமது உள்ளத்தில் ஒரு மாற்றம் உண்டாகும். அதாவது, மனனமாக, மானஸிகமாக இருப்பது, வாசிகமாக, வார்த்தையாக வாக்கில் வெளிவருவதோடு, காயிகமாக காயம் எனப்படும் உடலால், ஒரு செயலாக மாறி, அதன்மூலம், **மனோ, வாக்கு, காயம்** என்ற மூன்றும் ஈஸ்வரனுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக ஆகிறது.

உண்மையில் இயற்கையான இருமைகள் இல்லாத, நம் இயல்பாகிய மனமற்ற நிலையில், அந்த ஏக அறிவுடன் இணைத்து விடுகின்ற ஈஸ்வர காரியமாகவும், சித்த சுத்திக்குத் தேவையானச் செயலாகவும், மனதைக் கையாளும் கலையாகவும் **மந்திரம்** இருக்கின்றது.

**அகிம்சை, தன்னலமற்ற சேவை** மற்றும் **அர்பணிப்பு** செயல்களுக்கான மனதின் தூய்மையைப் பராமரிப்பதற்கு **மந்திரம்** இன்னும் பக்க பலமாக இருக்கின்றது.

## தத்தாத்ரேயர் பரம்பரையில் மந்திரம்

நம் பண்டைய ரிஷிகள் **மந்திரம், தந்திரம், யந்திரம், ஔசதம்** போன்ற பல வழி முறைகளைச் சாதனைகளாகப் பயின்று, அதில் வெற்றி பெற்று திகழ்ந்தார்கள். அதற்கான விழிப்புணர்வு கொண்டுவருவதற்கான படி நிலைகளைத்தான் பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்** என்று அழைக்கப்படுகிறது.

இந்த உலகில் எல்லோருக்கும் துன்பம் தொடர்கிறது. ஏனென்றால், நாம் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டு, அவைகளை கருத்துருவாக்குவதினால், இத்தகைய சிந்தனை மற்றும் கருத்துக்கள் மூலம், நாம் செய்யும் செயல்கள் எல்லாமே, நம்மை நன்மை, தீமை எனும்

இருமைகளுக்குள் இழுத்துச் செல்கின்றது. ஆகவே, சிந்தனைகள் தொடரும்வரை, பிரிவினையின் தாக்கமும் நம்மைத் தொடர்கிறது. அதனால், நமக்கு துன்பமும் தொடர்கிறது.

ஆகவே, அந்த துன்பத்திலிருந்து மனதை விடுவிக்க வேண்டுமானால், அதற்கான பக்கபலமாக நமது சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பாரம்பரியத்தில் வந்த அவரது வழிகாட்டுதலின்படி, நமக்கு ஒரு சத்குரு கிடைக்கபெற்றால், அவர் வாயிலாக நாம் பெற்றுக் கொள்கின்ற அவரது மந்திரம் '**ஓம்**' என்பதினால், இதன் சக்தி வாய்ந்த மனனம் வாயிலாக, நம் மனம் மகத்தான அறிவை நம்முள் உணரக்கூடிய வழியைக் காட்டிக் கொடுக்கிறது.

பிரணவம் என்ற "**ஓம்**" தான் அந்த ஈஸ்வரனின் வாசகம். இந்து சமயத்தில் வேதத்தில் இருந்து, உபநிஷதங்கள், கீதை, பாஷ்யங்கள் என்று எங்கு பார்த்தாலும் இந்த "**ஓம்**" சிறப்பித்து கூறப்படுகிறது. பொதுவாக படைக்கப்பட்டவைகள் ஒவ்வொன்றுக்கும் மனிதர்களாகிய நாம் ஒரு பெயர் வைத்திருக்கின்றோம்.

அம்மா, அப்பா, டீவி, காபி, புத்தகம், நாய், கொசு, மேஜை, நாற்காலி என்று ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் இருக்கிறது. அப்படி ஒரு பெயர் இருந்தால், அதற்கான ஒரு அர்த்தம் (பொருள்) நிச்சயமாக இருக்கும். அந்தவகையிலே, ஒரு சொல் வெளியில் வர வேண்டும் என்றால், முதலில் அது மனதில் அல்லது புத்தியில் தோன்ற வேண்டும். அம்மாவைப் பார்த்தவுடன் அது அம்மா என்று தோன்றுகிறது. பின், அம்மா என்ற சொல் மனதில் உதிக்கிறது. பின் அந்த சொல் **ஒலி வடிவம்** பெறுகிறது.

பொதுவாக, நடைமுறையில் நம்மிடம் ஆயிரக்கணக்கான எண்ணங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அந்த ஆயிரமாயிரம் எண்ணங்களில், ஒரு எண்ணம் சொல்லாக வெளிப்பட்டு ஒரு பொருளை குறிக்கிறது. ஆக, இந்த உலகில் உள்ள அனைத்து படைப்புகளுக்கும் பின்னால், ஒரு படைப்பாற்றல் இருக்கிறது. அதை நாம் **ஈஸ்வர சக்தி** அல்லது **ஈஸ்வரன்** என்று அழைக்கின்றோம்.

ஆக, அந்த சக்திக்கு ஒரு பெயர் வேண்டும். அந்த பெயர், அந்த சக்தியின், அந்த படைப்பாற்றலை குறிக்கும் சொல்லாக இருக்க வேண்டும். இயற்கையான சொல்லாக இருக்க வேண்டும்.

எனவே, "**ஓம்**" என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இந்த "**ஓம்**" என்ற சொல்லின் சப்தம் மூன்று சப்தங்களை உள்ளடக்கியது. **அ, உ, ம்** என்ற மூன்று எழுத்தின் தொகுப்பு **ஓம்**. இந்த மூன்று எழுத்தையும் வேகமாக கூறினால் **ஓம்** என்று வரும்.

அந்த வகையிலே, '**அ**' என்று சொல்லும்போது, சொல் பிறக்கிறது. '**உ**' என்று சொல்லும் போது அது நீண்ட நேரம் நிலைக்கிறது. '**ம்**' என்று சொல்லும் போது, அந்த சப்தம் முடிகிறது.

இந்த படைப்பாற்றல் என்பது நமக்குள் இயல்பாகவே இருக்கிறது. நாம் அதோடுதான் பிறக்கிறோம். அந்த படைப்பாற்றலை **அ, உ, ம்** என்ற மூன்று எழுத்துக்களால் ஆன **ஓம்** என்ற சொல் நினைவு படுத்துகிறது. பொதுவாக, அந்த படைப்பாற்றல் என்ன செய்யும்? முதலில் படைக்கும், பின் படைத்தவற்றை காக்கும், வேண்டாத அல்லது காலாவதியான படைப்புகளை அழிக்கும்.

சரி! அழிப்பது எப்படி படைப்பாகும்?

அதுவும் படைப்புதான். அழிக்காமல் எதையும் படைக்க முடியாது. ஒன்றை அழிக்காமல் இன்னொன்றை படைக்க முடியாது. நாம் எதை படைக்க வேண்டும் என்றாலும், அதற்கு **ஒரு சக்தி** வேண்டும். அந்த சக்தி நாம் உண்ணும் உணவில் இருக்கிறது. அந்த உணவை உண்டு, ஜீரணம் செய்து, அதிலிருந்து பெற்ற சக்தியால்தான் நாம் இந்த உடல் என்ற படைப்பை செய்கிறோம்.

இப்படி, **தோற்றம், நிலைப்பு, முடிவு** என்ற மூன்றையும் ஒன்றாக சேர்த்து, ஒரு வார்த்தையில் சொல்வது என்றால், அதுவே **"ஓம்"** என்ற ஒரு வார்த்தை மட்டும்தான். ஆக, இந்த **"ஓம்"** என்ற பிரணவம் இயல்பான சப்தம்.

**"ஓம்"** என்ற பிரணவம் **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழிலையும் கூறும் ஒரு சொல். **"ஓம்"** என்ற சொல், நமக்குள் இருக்கும் அந்த மாபெரும் படைப்பாற்றலை குறிக்கிறது. நாம் அந்த சக்தியை நம்முள் உணர வேண்டும். மனிதன் உன்னதமானவன். உயர்ந்தவன். படைப்பின் உச்சக்கட்டம் மனிதன்.

ஆக, இந்த **"ஓம்"** என்ற மந்திரத்தின் மூலம் மனதை ஒருமுகப்படுத்திய பிறகு, அந்த மந்திரத்தின் விளைவுகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, நம் மனதில் அப்படியே இருக்கும். உதாரணமாக, நாம் ஒரு நாற்பத்தைந்து நிமிடங்கள் மந்திரங்களை மனதினால் உச்சரித்தால், அல்லது காதுகளால் கேட்டால், அது அன்றைய நாள் முழுவதும் நமக்கு மன அமைதியையும், ஆனந்தத்தையும் அளிக்கும்.

அதன்மூலம், நம்முள்ளே ஏற்கனவே அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அளவற்ற எண்ணங்களால் எழுந்த சிந்தனையின் சிதறல்களிலிருந்து மனம் முழுமையாக விடுபட உதவும்.

இந்த சிந்தனைச் சிதறல்களிலிருந்து மனம் விடுபடும்போது, நமது விழிப்புணர்வு நம்மிடமிருந்து வெளிப்படத் தொடங்கும். அதாவது, நாம் நம்மை எந்த வகையிலும் அடையாளம் படுத்தவில்லை எனும் நிலையில், நம் தனித்துவத்தை இழப்பதை நன்கு அறிவோம். அந்த தனித்துவத்தை இழக்கும் நிலையில் உண்டாகும் நம் சிந்தனைகளுக்கு அதிர்ஷ்டானமாக நமது விழிப்புணர்வு வெளிப்படுவதையும் நாம் நன்கு உணர்வோம்.

இந்த நிலைக்கு வருவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. '**ஓம்**' மந்திரத்தை ஆரம்பத்தில் உச்சரிப்பதினாலும் அல்லது அதை அனுதினமும் கேட்பதினாலும், அது நிச்சயமாக நம்மை தூய விழிப்புணர்வை நோக்கியும், மனதின் முழுமையான விடுதலை நிலையில் அந்த விழிப்புணர்வில் இருப்பதையும் நமக்கு உறுதி செய்யும்.

# 6. **தந்திரம்** (உபாயம்)

## தந்திரம் என்றால் என்ன?

தந்திரம் என்பது மனித வாழ்க்கையை தழுவிய தத்துவம், விடுதலைக்கான பாதை எனக்கூறலாம். இது பலவிதமான நடைமுறைகளைக் கொண்டுள்ளது. வேதம் மற்றும் தந்திரம் ஆகிய இவைகள் இரண்டும் ஆரம்பகால ரிக்–வேத காலத்திலிருந்து உள்ளது. தந்திரத்தை ஒரு **"உள்ளுணர்வு அறிவியல்"** என்று கூறலாம். உடல் மற்றும் மனதின் விடுதலைக்கான மனிதனின் நடைமுறை யோகப் பாதையை **தந்திரம்** என்று கூறலாம்.

தந்திரம் மேற்கத்திய நாட்டினரினால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அதன்காரணமாக, அவர்கள் அது பாலியல் சம்பந்தப்பட்டவைகளாகக் கருதுகின்றார்கள். அதன்காரணமாக, அவர்களது புரிதல் என்பது **சிவமும் – சக்தியும்** இணைகின்ற ஜீவ – ப்ரஹ்ம ஐக்கியத்தை ஆணும், பெண்ணும் சேர்ந்து செய்கின்ற பாலியல் செயலாக மாற்றி புரிந்துக்கொண்டார்கள். அதன்காரணமாக, பல்வேறு காம சூத்திரங்களை உண்டாக்கிக் கொண்டு, அந்த வகையிலே அவர்களுக்கான விடுதலையை எதிர்ப்பார்க்கின்றார்கள். இது அவர்களது அறியாமை என்றே பார்க்கப்படுகின்றது.

தந்திரம் என்பது உண்மையில் ஆயுர்வேத மருத்துவம், சாங்க்யம்/யோக தத்துவம், வேதாந்தம், ஜோதிஷம், யந்திரங்கள் மற்றும் மந்திரங்களைப் பயன்படுத்தி, ஆன்மீக நடைமுறைகள் மூலம் ஞானத்தை உள்ளடக்கிய ஒரு **பரந்த அறிவியல்** எனலாம்.

நம்முடைய பண்டைய வேதத்தின் அடிப்படையில், பல ரிஷிகளால் பகுத்து, பிரிக்கப்பட்ட வேதம் மூன்று பகுதிகளாகப் பார்க்கப்படுகின்றது. அவைகளை, **கர்ம காண்டம், உபாசன காண்டம்** மற்றும் **ஞான காண்டம்** என்று அழைக்கின்றோம்.

இதிலே, நம்முடைய சனாதன தர்ம மரபில் வேதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் என்றும் வேதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றும் இரு பிரிவினர்கள் நாளடைவில் உண்டானார்கள். சாங்கியம், யோகம், வைசேடிகம், நியாயம், பூர்வ மீமாம்சம், உத்தர மீமாம்சம் என ஆறு தரிசனங்கள் அன்றைய கால கட்டங்களில் தோன்றின. இதைத்தவிர, பௌத்தம், சமணம் போன்ற இன்னும் சில மதங்களும் நம்முடைய பாரத தேசத்தில் உண்டாயின.

இதிலே, **பூர்வ மீமாம்சம், உத்தர மீமாம்சம்** என்ற இந்த இரண்டு மட்டுமே ஆன்மீக சிந்தனைகளை உள்ளடக்கியவைகள். அடுத்து, **சாங்கியம், யோகா, வைசேடிகம், நியாயம் (இந்து தத்துவம்)** ஆகியவைகள் உலகியல் நோக்கம் உள்ளவைகள். இவர்கள் வேதத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களை கடவுள் மறுப்பாளர்கள் எனலாம். அதேசமயம் இவர்கள் இருவருக்கும் இடையேயான ஒரு ஒற்றுமை என்னவெனில், அது **இன்பம்** அல்லது **மகிழ்ச்சி** என்பதில் இவர்கள் இருவருக்கும் ஒற்றுமை இருந்தது.

அதாவது, ஒருசாரர் ஆன்மீகம் சார்ந்த வாழ்க்கையில் இன்பத்தை நாடினர். மற்றொரு சாரர் உலகியல் சார்ந்த வாழ்க்கையில் இன்பத்தை நாடினர். இதில் இன்றைய இன்பத்திற்கான பெரும்பான்மை என்பது, உலகியல் சார்ந்த வாழ்க்கையில் மட்டுமே உள்ளது என்பதே பலரது எண்ணம்.

அந்த வகையிலே, மனிதர்கள் பெருபாலும், பொருளாதாரம், பட்டம், பதவி, புகழ் என எதிலாவது இன்பம் இருப்பதாகவே எண்ணி ஓடிக்கொண்டுள்ளனர். இவர்களது ஓட்டம் என்றுமே ஓயாது. இவர்களுக்கு எதிலுமே நிறைவாகாது. இவர்களது புருஷார்த்தம் அர்த்தம் மற்றும் காமம் மட்டுமே. ஆனால், ஆன்மீக ரீதியாக வேதத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எதிர்ப்பார்க்கும் இன்பம் புருஷார்த்தம் என்பதின் அடிப்படையில், தர்மம், அர்த்தம், காமம் மற்றும் மோக்ஷம் என்ற நிலையில் இறுதியாக மோக்ஷ (விடுபேறு) நிலையில் பரமனை உணர்வதால், அவர்களுக்கு ஆனந்தம் அனுபவமாகி, அது நிறைவாகின்றதையும் நாம் நடைமுறையில் பார்க்கின்றோம்.

அந்தவகையில், வேதத்தை ஏற்றுக் கொள்ளாத ஒரு பிரிவினர் தாந்திரீக மரபில் வந்தவுடன் அவைகள் இரண்டாக பிரிந்தன. அவைகளைத்தான் இடது, வலது என இரண்டாகப் பிரிக்கப்பட்டு **வாமாசாரம், தட்சிணாச்சாரம்** என்ற இரண்டு தாந்திரீக முறைகள் சொல்லப்படுகின்றன.

இதிலே, **வாமாச்சாரம்** என்ற இடதுமுறை தாந்திரீக முறையில் **அர்த்தம்** மற்றும் **காமம்** என்ற இரண்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன.

அதுவே, **தட்சிணாச்சாரம்** என்ற வலதுமுறை வேதத்துடன் இணைந்து இருப்பதினால், அது புருஷார்த்தம் என்ற வகையில், அதன் இறுதி இலக்காகிய **மோக்ஷம்** என்பதில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றன. அந்த வகையிலே, ஆசைகள் இருக்கின்ற மனதைக் கடந்து செல்லுதலே **மோக்ஷம்** அல்லது **விடுதலை** எனப்படுகின்றது.

பொதுவாக, நம்மனம் வெளிப்படுவது குறியீடுகள் வழியாகவே. ஆகவே தாந்த்ரீகம் குறியீடுகளை ஏராளமாக உருவாக்கிக் கொள்கிறது. நம்முடைய புராணங்கள் சிற்பங்கள்

போன்ற ஏராளமான குறியீடுகள் தாந்த்ரீகத்தால் உருவகிக்கப்பட்டவையே. அதுப்போலவே, நம் உடல், மனம் பற்றியும் தாந்த்ரீகம் ஏராளமான குறியீடுகளை உருவாக்கியிருக்கிறது. அக்குறியீடுகளை மனதின் அறியாமையினால் பருண்மையான உண்மைகளாக பலரும் எடுத்துக் கொள்கின்றார்கள்.

இதிலே, வேதத்தை ஏற்காதவர்கள் மனவெளிப்பாடுகளை அறிய, அந்த மனதின் அவ்வெளிப்பாடுகளையே இன்னும் ஆழமாக அந்த மனதினாலேயே நிகழ்த்தி அதன் எல்லையை அறிய முயற்சிக்கின்றார்கள். அதாவது காமத்தை வெல்ல காமத்தையே கடைப்பிடித்து, இன்னும் அதிகமாக காமத்தில் ஈடுபட்டு, அதன்மீது உள்ள ஆர்வத்தைக் குறைப்பது எனலாம். அதாவது, இன்னொரு வகைக்யில் கூறுவதானால், பயத்தை விடவேண்டும் என்றால், அதிகமாக பயத்தை உண்டாக்கும் சுடுகாடு, மயானம் போன்ற இடங்களுக்குச் சென்று, பிணத்தின்மீது அமர்ந்து தியானம் செய்து, அவர்கள் பயத்தை வெல்ல முயற்சிப்பது ஆகும். இது ஒரு உக்கிரமான வழி. இதுவே இடதுமுறை. அல்லது **வாமாச்சாரம்** எனப்படுகின்றது.

அடுத்து, மன வெளிப்பாடுகளை வெல்ல வேண்டுமானால், அவ்வெளிப்பாடுகளை உன்னதமாக்கிக் கொள்ளலாம் என்பது இன்னொரு வழி. அதாவது, காமத்தை வெல்ல அதை குறியீடாக ஆக்கி, அக்குறியீட்டை கலைகளாக ஆக்கி அக்கலையின் உன்னதங்கள் வழியாக காமத்தை அறிந்து கடந்துசெல்லலாம்.

அச்சம், வன்முறை, அருவருப்பு, கோபம் என அனைத்தையுமே அவ்வாறு கடந்துசெல்ல வேண்டியது என்பதினால், உன்னதமாக்கல் என்பது இம்முறையின் முக்கியமான வழிமுறை. அந்த வகையிலே, சடங்குகள், பூஜைமுறைகள், கலைகள் என அதற்கு பல வழிகளைக் கொண்டு செய்யப்படும் வழிபாட்டு முறைகளை வலதுமுறை – **தட்சிணாச்சாரம்** என்கின்றோம்.

நம்முடைய தமிழ் சித்தர் மரபு என்று சொல்லும் மரபில் இருவகை தாந்த்ரீகர்களும் உள்ளனர். இரு மரபுகளுமே யோகத்தை தங்கள் தேவைக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்கின்றன. இவ்விரு மரபுகளும் பலவகையான உருவகங்களையும், குறியீடுகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

அக்குறியீடுகள் எளிமையான சித்தர் பாடல்கள் வழியாக சாதாரண மக்களிடம் வரும்போது அவைகள் அப்படியே நேரடியாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு யோகம் குறித்து ஏராளமான நம்பிக்கைகள் நம்மிடையே புழங்குகின்றன. உடலில் உள்ள மூலாதாரம் முதலிய ஒன்பது சக்தி முனைகள் பற்றிய பேச்சுக்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன.

அவைகள் முறையே காமம், பசி, மூச்சு, பேச்சு, இதயம், சிந்தனை, உள்ளுணர்வு, உயிருணர்வு, பேருணர்வு என்ற நிலைகளைச் சுட்டுபவைகள். ஆனால், உடம்பிலேயே அவைகள் உள்ளன, மேலும் தொட்டுக்கூட பார்க்க முடியும் என்ற அளவில் அவைகளை அவர்கள் புரிந்துக் கொண்டுள்ளனர். இன்னும் சிலர் தியானத்தில் நெற்றிப்பொட்டில் ஒளி தெரிவது போன்ற பல நம்பிக்கைகள் எல்லாம் இவ்வாறு தாந்த்ரீக உருவகங்களை நேரடியாக எடுத்துக்கொள்வதன் விளைவுகளே எனலாம். இதைத்தவிர, இன்னும் அடுத்தபடிக்குச் சென்று **அணிமா, மகிமா** போன்ற அட்டமாசித்திகளும் யோகத்தால் வசமாகும் என்றும், அதன் வாயிலாக முக்காலமும் தெரியும் என்றும் சொல்லக் கூடியவர்கள் இன்றும் உள்ளனர். சிலர் கல்லைக் கடித்து தின்னுதல் போன்ற ஹடயோக வித்தைகளையும் யோகத்துடன் தொடர்புறுத்துகிறார்கள். அவைகளை எல்லாமே **தாந்த்ரீக மரபின் குறியீடுகள்** எனலாம்.

இந்த தந்திர சாஸ்திரங்களின்படி, **பஞ்ச தத்வம்** (பஞ்சதத்வம்) ஒருவர் ஈஸ்வரனாகிய பஞ்சபூதங்களுடன் கூடிய ஈஸ்வர சக்தியை, பராசக்தியை வழிபடும் வழிபாடாகும். அதிலே ஈஸ்வர சக்தியை **ஈஸ்வரி** அல்லது **பராசக்தி** என பெண் பாலில் வழிபடும் மார்க்கமே **சாக்தம்** என்பதாகும்.

## தத்தாத்ரேயர் பாரம்பரியத்தில் தந்திரம்

**ஓம்** என்ற ஒலியே உடலுக்குள் உயிராய் இருக்கின்றது இதுதான் இங்கு தந்திரம். பொதுவாக, பிராணன் எனும் மூச்சுக் காற்றானது நமது உடலை மட்டுமே ஜீவிக்கும் படியான சக்தியாக இருக்கின்றது இதைத்தான் நாம் **உயிர்** என்கின்றோம்

உடலில் உயிர் மட்டும் இருந்தால் போதாது, அதில் உணர்வும் இருந்தால் மட்டுமே அது உயிர் என்று ஆக முடியும். அதாவது உயிராகிய சக்தியும், உணர்வாகிய சிவம் ஒன்றாக இருந்தால் மட்டுமே இந்த உடல் இயங்கும். அதாவது, சிவமும், சக்தியும் சேர்ந்தது இந்த உலகம்.

அதையே **"அண்டத்தில் உள்ளது! பிண்டத்தில் உள்ளது!"** என்கின்றனர் நம் சித்தர் பெருமக்கள். ஆகவே, உணர்வு இல்லாவிட்டால் உயிர் இருந்தும் இந்த உடலானது வெறும் ஜடமாக தான் இருக்க வேண்டியதாய் இருக்கும்.

ஆக, இந்த உடல் ஜடம் என்ற நிலையை விட்டு உயிர் என்ற நிலையைப் பெறும்போது மட்டுமே மற்றவர்களால் மதிக்கப்படுகின்றன. எப்படி? உயிர் இருப்பதால்,

மற்றவர்கள் நம்மைப் பார்த்து, வாருங்கள்! உட்காருங்கள்! என்று மதிக்கின்றார்கள். இல்லையென்றால், அந்த பிணத்தை எப்போது எடுப்பீர்கள் நாறுகின்றது என்பார்கள்.

எனவே, மனிதப் பிறவியின் மகத்துவமே, உயிரையும், உணர்வையும் ஒன்றாக்கும் நிலையில், அவன் தன்னை யார் என்று அறிகின்றான். ஆக, அந்த உணர்வை அதாவது இன்னதாக பிறந்து இருக்கின்றாய்! (நீ மனிதன், நீ மிருகம்) என்ற அறிவை எல்லா உயிர்களுக்கும் எது தருகின்றது? என்றால், இந்த பிரபஞ்சம் எனும் வெட்ட வெளியில் எங்கும் வியாபித்து கொண்டிருக்கின்ற காற்று சக்தியில், உணர்வாக கலந்து இருக்கின்ற **"ஓம்"** என்ற பிரணவ சப்தமே ஆகும். அதுவே, அனைத்து உயிர்களுக்கும், உணர்வெனும் சக்தியைத் தந்து, அதுவே கண்களுக்குப் புலப்படாத சூக்ஷுமமாய் உயிராக உடலுக்குள்ளே இருக்கின்றது

**"ஓம்"** என்ற பிரணவமே நம் உடலுக்குள்ளே உள்ளுணர்வாகவும், சூட்சம உயிராகவும் இருக்கின்றது என்பதை தெரிந்துக் கொண்டாலும் அதை அனுபவத்தில் உணர்ந்துக் கொள்ள வேண்டுமல்லவா? அதற்கு ஒரு வழி இருக்கின்றது. அது எப்படியென்றால், நாம் சுவாசிக்கும் உயிர் காற்றாகிய மூச்சுக்காற்று நம் உடலின் உள்ளேயும், வெளியேயும் போய் வந்துக் கொண்டிருக்கின்றது.

ஆனால், அவ்வாறு இந்த உடலுக்குள்ளே போய் வந்துக் கொண்டிருக்கின்ற நம் மூச்சுக்காற்று சும்மா மட்டும் போய் வரவில்லை. அது உள்ளே போகும்போது, **"ஸோ"** என்ற சப்தமாய் உள்ளே பிரவேசிக்கிறது. அதே முச்சுக்காற்று வெளியே வரும் பொழுது **"ஹம்"** எனும் சப்தமாய் வெளியில் பிரவேசிக்கிறது.

இந்த சப்தம் எதிலிருந்து உண்டாகின்றது எனில், மூச்சுக்காற்றிலே உணர்வாய் கலந்திருக்கும் **ஓம்** எனும் சொரூபமே இந்த சப்தத்தை உண்டாகின்ற சக்தியாய் இருக்கின்றது. இதை தெரிந்து கொள்வது எப்படி எனில், நமது மூச்சிலே **ஸோ** என்கின்ற சப்தமாய் சுவாசம் உள்ளே செல்கின்றது. அதுவே வெளியே வருகின்ற பொழுது **ஹம்** எனும் சத்தமாய் வெளியேறுகிறது. இதை முதலில் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்

இப்போது, இந்த உச்சரிப்பில்தான் மூச்சுக்காற்று நம் உடலின் உள்ளே சென்று வருகின்றதா? என்பதை சரிப்பார்க்கலாம்.

ஸோ – .என்ற சப்தத்தை நீளமாக உச்சரித்துப் பாருங்கள்.

**ஸோ** ....என்ற சப்தம், **ஓ.....** என்ற ஒலியாய் மாறிவிடும்.

அதைப்போலவே, ஹம் – என்ற சப்தத்தை நீளமாக உச்சரித்துப் பாருங்கள்.

**ஹம்**.......என்ற சப்தம், **ம்**..... என்ற ஒலியாய் மாறிவிடும்.

ஆக, ஸோ – என்ற சப்தத்தில், ஓ.... என்ற ஒலியே நிலையானதாக இருக்கின்றது

அதைப்போல, ஹம் – என்ற சப்தத்தில், ம்..... என்ற ஒலியே நிலையானதாக இருக்கின்றது.

இவ்வாறு, நம் உள்ளேயும், வெளியேயும் போய் வந்துக்கொண்டிருக்கின்ற இந்த இரண்டையும் ஒன்றாக்கினால், அதாவது, இந்த இரண்டு சப்தங்களின் ஒலியை ஒன்றாக இணைத்தால், அதுவே **"ஓம்"** என்ற பிரணவமாக மாறிவிடுகிறது.

அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே. – திருமந்திரம்.

இறைவனை, **"ஔ"** என்றும், **"சௌ"** என்றும் கூறும் மந்திரமே **'அம்'** என்றும், **'சம்'** என்றும் அமைந்த **"அம்சம்"** (ஹம்ஸ) என்ற மறை பொருளை ஒருவரும் அறியவில்லை. அவர்கள் அதை அறிந்தார்களாயின் அந்த மந்திரந்தானே அனாதியான **சிவம்** என்பதாக நிற்கும்.

எனவே, **ஓம்** என்ற ஒலியே **ஸோ – ஹம்** என்ற சப்தங்களாக மாறி, எங்கும், எதிலும் எல்லா உடலுக்குள்ளும் உயிரான ஒரு பொருளாக இருக்கின்றது.

அதாவது, இந்த உடல் இயங்குவதற்கான இயக்கம் என்பது, **ஓம்** என்ற சூட்சமமான ஒலியாக இருந்துக்கொண்டு எங்கும், எதிலும் உயிராய் உள்ளது என்பது, சந்தேகத்திற்கு இடமின்றி நமக்கு புலனாகின்றது. ஆக, *உயிராய் இறைவன் உன் உடலுக்குள்ளேயே இருக்கின்றான்* என்பதாக, நம்முடைய சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையிலே இந்த உடலைக் கொண்டு, உயிரைப் பிடிக்கும் உபாயமே **தந்திரம்** எனப்படுகின்றது.

# 7. யந்திரம் (உடல்)

## உடல் என்றால் என்ன?

இந்த உலகில் ஒவ்வொன்றும் அதிசயமும் ஆச்சரியமும் நிறைந்தது. அந்த ஆச்சரியங்களில், அதிசயங்களில், மேன்மையான ஒன்றை, மிகப் பரிச்சயமான ஒன்றைப் பார்க்க வேண்டுமா? ஆசையாக இருந்தால் கண்ணாடி முன்னால் சென்று நில்லுங்கள்.

இதில் என்ன அதிசயம்? எல்லோருக்கும் இருப்பதுப்போல இரண்டு கண்கள், ஒரு வாய், எனச் சாதாரணமாகத் தோன்றினால் கொஞ்சம் யோசியுங்கள். உங்கள் உடலை எடுத்துக்கொண்டால், உடல் இயங்குவதற்காக நீங்கள் வேலை எதுவும் செய்யவில்லை. உங்கள் இதயத் துடிப்பாகட்டும், சாப்பிட்ட உணவுகள் ஜீரணமாகட்டும், சுவாசம் ஆகட்டும், அல்லது உள்ளுறுப்புகள் செய்யக்கூடிய எந்த ஒரு வேலையாகட்டும், ஒவ்வொன்றும் அதனதன் வேலையை அழகாகச் செய்துகொண்டிருக்கிறது. ஆனால், அதன் அத்தனை வேலைகளும் உண்மையில் உங்களுக்காக மட்டுமே.

உள்ளே மூலப்பொருட்களை அனுப்பினால் விற்பனைப் பொருளாக, நாம் பயன்பாட்டுக்கு உபயோகப்படுத்தக் கூடிய பொருளாக மாற்றும் இயந்திரங்கள் பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். உள்ளே உணவையும் தண்ணீரையும் அனுப்பினால் அதை ரத்தமாகவும், சதையாகவும், எலும்பாகவும் மாற்றும் ஓர் இயந்திரத்தை நீங்கள் எங்காவது பார்த்திருக்கிறீர்களா?

அதுதான் உங்கள் உடல் எனும் எந்திரம்.

இவ்வுலகில் பிறப்பு, இறப்பு என்பது இயற்கையின் சூத்திரம். இதற்கு இடைப்பட்ட காலமே உடலோடு பயணிக்கும் இந்த வாழ்வு. இந்த உயிர்வாழ்வின் பயணத்துக்கு ஆதாரமாக ஒரு தேர் போன்று விளங்குவது இந்த அற்புத உடல். இவ்வுடல் தாய், தந்தை ஊடாக வந்தாலும் அதன் நுண்ணிய உருவாக்கம் இயற்கையினுடையதே. தேகம், மேனி, மெய், யாக்கை, சரீரம், காயம் என பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இந்த உடலானது மகத்தான முறையில் நுணுக்கமாக இயற்கையினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பலகோடி உயிரணுக்களின் கூட்டு முயற்சியே ஒரு உடல். இவ்வுடலில் ஏழு தலைமுறையின் உயிரணுக்கள் அவற்றின் இயல்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

காலகாலமாக நம்முடைய முன்னோர்கள் எத்தகைய சூழலில் வாழ்ந்தார்களோ? அத்தகைய சூழலுக்கு ஒத்துப்போகக்கூடியதாகவும், அவர்கள் உண்ட உணவுகளை இலகுவாக உட்கிரகித்து செரிமானம் செய்யும் தன்மையையும் கொண்டதினால், உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உடனடியாக வாந்தியாவோ, பேதியாகவோ வெளியேற்றக்கூடிய எதிர்க்கும் தன்மைகளையும் உடல் பெற்றிருக்கிறது.

இத்தகைய உயிரணுக்கள் ஒரு துளி தசையில் பல இலட்சம் காணப்பட்டாலும் அவைகள் ஒவ்வொன்றும் சுவாசிக்கின்றன, உணவு உட்கொள்கின்றன, கழிவுகளை அகற்றுகின்றன. அதாவது மொத்த உடலையும் உயிர்ப்புடன் பார்த்துக் கொள்ளுதல் நடக்கின்றன. இந்த உடலினுள் மிகப்பெரும் தொழிற்சாலையே நடைபெறுகிறது எனலாம்.

அந்த வகையிலே, உடல் செயற்பட சக்தியேற்றம் தேவைப்படுகிறது. தன் ஒவ்வொரு செயற்பாட்டிலும் தனது ஆற்றலை செலவிடுகிறது. உதாரணமாக ஒரு வாசனையினை நுகர்தலுக்கோ, ஒலிகளை உட்கிரகிக்கவோ, நீண்ட நெடு சிந்தனைகளுக்கு பிறகோ? இந்த உடலின் சக்திகளில் செலவீனம் ஏற்படுகிறது. அதாவது, தீவிர நறுமணம் நுகரும்போது, அதிக ஒலி, இரைச்சல் உள்ள இடங்களில் தொடர்ந்து சில மணி நேரங்கள் நாம் இருக்கும் பொழுது, அதிக நேரம் சிந்திக்கும்போது, நம்முடைய உடல் சோர்வடைவதை உணரலாம்.

ஆக, அந்த வகையிலே, நுட்பமான மனதின் பருமையான வடிவம் இந்த உடல், அதாவது, கண்களுக்குப் புலப்படாத மனமே தன் ஆசைகளை அனுபவமாக அடைய இந்த பரு உடலை உண்டாக்கிக் கொள்கின்றது. நீங்கள் கடந்து வந்த பாதையை நினைத்துப் பாருங்கள். எவ்வளவு கடினமான பிரச்சினைகளையெல்லாம் கையாண்டு இருக்கிறீர்கள். எத்தனை போராட்டங்களை எதிர்கொண்டு, சவால்களைச் சந்தித்து இன்று இந்த வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்! இக்கட்டான சூழ்நிலைகளை நிதானமாகக் கையாண்டு, தெளிவான முடிவுகளை எடுத்துக்கொண்டு, இந்த வாழ்க்கையை அழகாக ஆக்கி இருக்கிறீர்கள்.

இந்தக் கணம், இதை வாசித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் ஒன்றே ஒன்றுதான் காரணம். உங்கள் மனம்தான். அது தான் உங்களை உயிருடனும் உயிர்ப்புடனும் இந்த நொடி வரை வைத்திருக்கின்றது. அதன் ஆசைகள் மூலமாக மட்டுமே நீங்கள் இந்த உடலுடன் இதுவரை இன்னும் இருக்கின்றீர்கள். இந்த உடல் இயலாமையில் இருக்கும்போது, அடைந்த தோல்வியினால், நீங்கள் சோர்வை அடையும்போது, இந்த மனம்தான் இன்னொரு முறை முயற்சி செய்யலாமே! என்று உங்களை உற்சாகப் படுத்தியது. மன உளைச்சலின் உச்சத்தில் வாழ்க்கையின் மறுபக்கத்தைக் காட்டியது. இவ்வளவும் செய்த மனதை இந்த உடலுக்கான ஆதாரம் என்று சொல்லாமல் வேறு என்ன சொல்வது?

பொதுவாக, படைக்கப்பட்டவைகளின் பயன்பாடு என்று பார்க்கும்போது, அவைகள் இரண்டு வகைகளில் பிரயோஜனமாக இருக்கின்றது என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்த வகையிலே, இந்த மனித உடலுக்கான **பிரயோசனம்** இரண்டு வகைப்படும்.

அவைகள்,

1. **பரமப் பிரயோசனம்**

2. **அவாந்தரப் பிரயோசனம்** என்பதாகும்.

அதாவது, இந்த இரண்டு பிரயோசனங்களை எப்படி நாம் எளிதாகப் புரிந்துக் கொள்ளலாம் என்றால், சில வாழை மரங்களை பயிரிட்டுள்ள விவசாயிக்கு வாழைப்பழம் **பரமப் பிரயோசனம்**. அதுவே, அந்த வாழை மரத்தின் தண்டு, இலை போன்றவைகள் **அவாந்தரப் பிரயோசனம்** எனலாம்.

அதுப்போல, நமக்கு கொடுக்கப்பட்ட மனித உடலின் பிரயோசனம் அக வாழ்க்கை முறையில் பரமனை நம்முள் உணர்வது மட்டும்தான் **பரமப் பிரயோசனம்**. அதுவே, இதே உடலைக் கொண்டு, புற வாழ்க்கை வழியில் சொகுசான வாழ்க்கை வாழ்வது என்பது, **அவாந்தரப் பிரயோசனம்** என்பதாகப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

ஆக, இந்த உடலைக் கொண்டு உணர்வாய் இருக்கும் பரமனை நம்முள் உணர்வது ஒன்றே மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும்.

உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண். – ஔவைக்குறள்.

உணர்வாவது எல்லாம் உடம்பின் பயனே
உணர்க உணர்வுடை யார். – ஔவைக்குறள்.

மாசற்ற கொள்கை மனதில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு. – ஔவைக்குறள்.

ஆக, மாசற்ற மனம் மனிதனுக்கு உண்டானால், ஈசனைக் காட்டும் இந்த உடம்பு.

மனிதனாகப் பிறந்த நீங்கள் ஒரு பேரதிசயம். ஏனென்றால், இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து இதுவரை, உங்களைப் போல் ஒருவர் இங்கு இருந்ததில்லை. இதற்குப் பின்னும் உங்களைப் போல ஒருவர் இருக்கப் போவதில்லை.

ஆதலால், பிறருடன் உங்களை ஒப்பிடுவதை இந்த விநாடியிலேயே நிறுத்திக்கொள்ளுங்கள். பிறருடன் போட்டிப் போடுவதற்குத் தேவையே இல்லை என்பதை உணர்ந்துகொள்ளும்போது, உங்கள் தனித்துவம் தானாகவே வெளிவரத் தொடங்கிவிடும்.

நீங்கள் தனித்துவம் மிக்கவரானால், உங்கள் வாழ்க்கையின் சவால்களும் தனித்துவம் மிக்கவையாகத்தானே இருந்தாக வேண்டும்? ஆனாலும், நீங்கள் எடுக்கவேண்டிய முதற்படி இந்த வாழ்க்கையைக் கொண்டாடுவதற்காகத்தான் இருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இருக்க வேண்டியதில்லை. அது உங்கள் மனதை, உங்கள் உடலை நன்றாகப் பராமரிப்பதுதான்.

ஆகவே, இந்த உடல் ஓர் அதிசயம். இந்த மனம் ஓர் அதிசயம். இந்த இரண்டும் என் வாழ்வில் எனக்குக் கிடைத்த மிகப் பெரும் கொடைகள் என எப்போது உணர ஆரம்பிக்கிறீர்களோ? அப்போதே உங்கள் வாழ்வை ஒரு கொடையாகப் பார்க்க ஆரம்பித்துவிடுவீர்கள். அப்போதே உங்கள் சவால்களுக்குத் தீர்வுகள் எளிதாகக் கிடைத்துவிடும். உங்கள் மனதை பராமரிக்கப் பாருங்கள். இந்த '**நான்**' எனும் பேரதிசயத்தை உணர்ந்து, அனுபவிக்கத் தொடங்கிவிட்டாலே போதும், அதுவே உங்களை உங்களுக்கு காட்டிக் கொடுக்கும்.

நிலையற்றப் பொய்யான உடம்பில் மெய்யான மெய்ப்பொருள் இருப்பதனால், பொய்யான இவ்வுடம்பிற்கு **மெய்** என்று பெயர் வந்தது என்பார்கள். உடலில் இருந்து உயிர் பிரிந்தவுடன் இந்த உடல் ஒன்றுக்கும் பயனற்ற ஜடமாக மாறிவிடும். ஆகவே, உயிர் உடலில் இருக்கும்போதே, இந்த உடலைப் பேணிக்காத்து, பரமரிக்க வேண்டும் என்று சிலர் விரும்புகின்றனர்.

ஒரு சிலரோ இந்த உடலில் உள்ள ஐம்புலன்களினால் மயக்கமடைந்து, அதன் வாயிலாகப் பல்வேறு துன்பங்களுக்கு நாம் ஆளாவதனால், ஐம்புலன்களைத் தாங்கியுள்ள இவ்வுடலைத் தங்களுக்குப் பகையாக எண்ணுகின்றனர். இன்னும் சிலர், இறை நெறியில் தங்களை ஆழ்ந்து ஈடுபடுத்திக் கொள்கின்றவர்கள், குறிப்பாகத் துறவிகளும், யோக நெறியில் நிற்பவர்களும் இவ்வுடலை வறுத்தினால்தான் இறையருளைப் பெறமுடியும் என்று எதையாவது ஒரு உடல் சார்ந்த பயிற்சியை செய்துக் கொண்டுள்ளனர்.

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறு பொருள் கண்டேன்
உடம்பு உளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து **ஓம்**புகின்றேனே. – திருமந்திரம்.

**காயசித்தி உபாயம்** என்றால், உடம்பை நிலை நிறுத்திக்கொண்டு அப்படியே சாகாமல் இருப்பது என்பதாகப் பலரும் புரிந்துக் கொள்கின்றனர். அப்படியல்ல, இந்த உடல் அழிவதற்கு முன்பாகவே, அந்த அழியக்கூடிய உடலைக் கொண்டு, என்றும் அழியாத உணர்வை பெறுவதற்கான வழி என்று பொருள் கொள்ள வேண்டும்.

பொதுவாக, ஒருவருக்கு உடம்பு அழியுமானால், இவ்வுடம்பைத் துணையாகக் கொண்டு இயங்கிய உயிர் அந்த உடலை விட்டுப் பிரியும். அதாவது, உயிர் பிரிந்தால் உடல் உபயோகம் கிடையாது. அந்த உடல் வெறும் ஜடம் மட்டுமே. ஆகவே, இறையருள் பெறும் முயற்சியை உடல் நன்றாக இருக்கும் போதே செய்ய வேண்டும். இல்லையெனில், இறை உணர்வும் அடையப் பெறாமல் போய்விடும் என்கின்றார் பகவான் திருமூலர்.

ஆகவே, இந்த உடம்பை நிலை நிறுத்தும் பொருட்டு, அதற்கான வழியை அறிந்து, அவ்வழியில் உடம்பினை நிலை நிறுத்தினால், உயிர் அந்த உடலில் இன்னும் சில காலம் நிலைக் கொள்ளும் என்பதே இதன் பொருள்.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்,
திடம்பட மெய்ஞானம் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே. – திருமந்திரம்.

மனிதவுடல் என்பது பேரண்டத்தின் குறுவடிவமாகக் கொள்ளப்படுகின்றது. உடலை ஒப்புக் கொள்கின்றவன் உலகையே ஒப்புக் கொண்டவனாகின்றான் என்பதே சித்தர்களின் நிலைபாடு. உருவிலங்குமேனி எனும் புலன்களால் உணரத்தக்க மனித உடலின் தன்மை காலத்தால் அழிவதும், திருவிலங்குமேனி எனும் அகவுணர்வால் உணரத்தக்க உடல் அழியாமற் பாதுகாக்கப்பட வல்லதுமாகும் என்பது சிவவாக்கியர் கொள்கை.

இக்கொள்கையானது,

"உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றநீர்
திருவிலங்கு மேனியாகச் சென்றுகூட லாகுமே" (சிவவாக்கியர்.61)

என்ற பாடலில் வெளிப்படுவது குறிப்பிடத்தக்கது.

உடலைப் பேணி இறைவனை அடைய வேண்டும் என்பது சிவவாக்கியரின் மிக உயரிய சிந்தனையாகும்.

சரி! உடலை பரிமாரிப்பது, பேணிக்காப்பது என்று, முறையான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி, ஓய்வு என்று பொதுவாக, இந்த உடல் நலத்தைப் பேண விரும்புவோர்கள் பலரும் இன்னும் சில காலங்கள் உடல் ஆரோக்கியமாக இருக்கவும், நோயின்றி இருக்கவும் உதவும். ஆனாலும், இதன்மூலம், பிறவிப் பயனை அடையாமலேயே வெறுமனே உடலைவிட்டு, விட்டு இறந்து போவோம். உண்மையாகவே, நீண்ட நாள் இவ்வுடலை நிலை நிறுத்தி, என்றும் அழியாத ஆத்மாவை அனுபவமாக நாம் உணரும் மிக உயரிய வாழ்க்கைக்கான பாதையை சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** வழியில் காணலாம்.

## தத்தாத்ரேயர் பாரம்பரியத்தில் உடல் எனும் யந்திரம்

இந்த உலகத்தில் மனோ தத்துவம் முதன்முதலில் உணரப்பட்டது நம்முடைய பாரத தேசத்தில் பண்டைய ரிஷிகளின் பெருமிதத்தால்தான். அந்த அடிப்படையிலேயே ஆதி காலம் முதலாக இன்றைய மனிதனின் வாழ்க்கை வரை எல்லாமே, இந்த மனதின் அடிப்படையில் மட்டுமே பரிணாம வளர்ச்சி அடைந்தது.

மனித உடல் ஒரு இயந்திரமா?

ஆம்.

அது உள்ளிருந்தே இயக்கப்படுகிற ஒரு இயந்திரம் தான். எல்லா உயரினங்களும் அப்படித்தான். எல்லாவற்றிற்கும் உள்ளிலிருந்தே இயக்கப்படும் இயக்கம் இருக்கிறது.

இந்த இயக்கம் எப்படி நடக்கிறது?

மனிதனை பொறுத்தவரையில் மனம்தான் உடலை இயக்குகிறது. உடலின் நடவடிக்கைகளை தீர்மானிக்கிறது. எல்லோருடைய மனமும் ஒரே மாதிரி இயங்குவதில்லை. ஒவ்வொருவருடைய மனமும் ஒவ்வொரு விதமாக வித்தியாசமான முறையில் இயங்குகிறது. இதற்கு என்ன காரணம்?

உடலை இயக்கும் மனதை இயக்குவது யார் அல்லது எது?

நமது இயக்கத்தை கவனித்தால் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம்.

எண்ணங்களே மனதை இயக்குகின்றன என்பதே அது.

எண்ணங்கள் எப்படிப்பட்டவைகள்?

எண்ணங்கள் இரட்டை தன்மை உடையவைகள். ஒரே விஷயத்தைப்பற்றி இரண்டு விதமான சிந்தனைகள்தான் எப்பொழுதும் மனதில் ஓடிக் கொண்டிருக்கும். ஒன்று உடல் அல்லது பொருள் சம்பந்தப்பட்டது. இன்னொன்று சரி, தவறு பார்க்கும் சிந்தனை.

இது பொருட் தன்மைக்கு அப்பாற்பட்டது. உடல் சம்பந்தப்பட்ட சிந்தனை எப்பொழுதும் பொருள் தழுவியதாகவே இருக்கும். இன்னொரு சிந்தனை பொருள் அல்லாது உடல் சம்பந்தப்படாதது. அதற்கு அப்பாற்பட்டது. அல்லது அதற்கு அதீதமானது என்று சொல்லலாம்.

இரண்டு விதமான எண்ணங்களை தோற்றுவிக்கும் மனமும் இரட்டைத் தன்மையதுதான். ஒன்று உடல் அல்லது பொருள் அல்லது உடல் இன்பம் சம்பந்தப்பட்டு இயங்கும் மனம். இது உள் மனம். வேறொன்று இவற்றிற்கு அப்பாற்பட்ட சிந்தனைத் தன்மை உடையது. இது அதனுள் இருக்கும் பதிவுகளின் அடிப்படையில் இயங்குகிறது. இது வெளி அல்லது ஆழ் மனம். ஒரு மனம் உடலுக்குள் இருந்து இயங்குகிறது. மற்றொன்று உடலுக்கு வெளியில் இருந்து இயங்குகிறது.

உடலும், உள்மனமும் ஒருமுகமாக இணைந்து இயங்குவது யோகத்தின் முதல்படி. ஆழ் (வெளி) மனமும், உள் மனமும் ஒருமுகமாக இணைந்து இயங்குவது யோகத்தின் அடுத்த நிலை. இன்றைய காலத்தில் யோகம் என்பது ஆங்கிலப்படுத்தப்பட்டு யோகா என்பது உடற்பயிற்சி என்று பரவலாக அறியப்படுகிறது.

உண்மையில் யோகம் என்பது இணக்கம் அல்லது இணைதல் என்று பொருள்படும். அதாவது, அனைத்தும் ஒருங்கிணைந்த நிலை. உள் மனம் ஆனது, வெளி மனதிற்கு கட்டுப்பட்டு இயங்க வேண்டும். காரணம் உள்மனம் உடலுடன் அழியக்கூடியது. வெளி அல்லது ஆழ்மனம் பிரபஞ்ச சம்பந்தமுடையது. அதற்கும் அதன் பதிவுகளுக்கும் அழிவில்லை. அது எல்லாப் பிறவிகளிலும் தொடரும். அதனைத்தான் நாம் ஈஸ்வரன் என்கிறோம்.

இந்த உலகத்தில் எல்லாமே இரட்டை நிலை பெற்றிருக்கின்றன. இரவு–பகல், ஆண் –பெண், இருட்டு–வெளிச்சம். இதுப்போல, மனதிற்கும் இரட்டைத் தன்மை உள்ளது என்பதினால்தான் நம் சிந்தனையின் வெளிப்பாடு எப்போதும் மாறிக் கொண்டே இருக்கின்றது. அதனைத்தான் தூய அறிவாகிய பரமனின் இயக்கமாகிய ஈஸ்வரன் என்கின்றோம்.

இந்த அறிவுத் தெளிவுதான் பாரத தேசத்தின் பண்டைய ரிஷிகளின் மனோதத்துவத்தின் அடிப்படை. இதற்கு வித்திட்டதே நமது பண்டைய ரிஷிகள் என்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

இது தான் ஆன்மீகத்தின் ஆரம்பம். ஆன்மாவைப்பற்றிய அறிவே ஆன்மீகம் என்பது. இனி நாம் உள் மனதை மனம் என்றும் ஆழ் மனதை **ஈஸ்வர மனம்** அல்லது இந்த பிரபஞ்சம் என்றும் குறிப்பிடுவோம்.

நம் மனம் என்பது உடல் சம்பந்தப்பட்டது. அது தன் வழியே போனால், இந்த உடல் சுகத்துக்கான வழிகளை மட்டுமே தேடும். அந்த வகையிலே, வாய்க்கு ருசி, உடலுக்கு இன்பம், அதற்கு தேவையான பொருள், அதைத் தேடும் வழிகள் ஆகிய எல்லா வழிகளிலும் இந்த மனம் பயணிக்கும். இந்த மனம் மேற்கொள்ளும் பயணத்தின் பலன் இந்த உடலுக்கு கிடைக்கவேண்டும். இந்த அளவிலேயே நம் மனதின் போக்கு அமையும்.

இந்த மனம் தானாக இயங்கினாலும், இந்த மனம் ஆழ் மனமான ஈஸ்வர மனம் எனும் பிரபஞ்ச மனதிற்கு கட்டுப்பட்டதுதான். நம் மனதின் செயல்பாடுகள் அனைத்தும் பிரபஞ்ச மனமாகிய ஈஸ்வர சித்தத்தில் பதிவாகிக்கொண்டிருக்கும். அதனால்தான் அவனுக்கு தெரியாமல் இங்கு ஒன்றும் நடக்காஹ்து என்கின்றோம். அதே சமயம் அந்த ஈஸ்வர சித்தம் இந்த தனி உடலுக்கு அப்பாற்பட்ட சிந்தனைகளை உடையது. ஆகவே, அதனுள் பதிவாகும் பதிவுகளை ஈஸ்வர சித்தம் தன் ஆய்வுக்கு உட்படுத்தும்.

நம் மனம் நம்முடைய உடல் சம்பந்தப்பட்டது போன்று, ஈஸ்வர மனம் இந்த பிரபஞ்சம் சம்பந்தப்பட்டது. ஆகவே, அதன் செயல்பாடுகள் அனைத்தும் பிரபஞ்ச நிலையிலேயே இருக்கும்.

பிரபஞ்ச மனம் எல்லையற்ற ஈஸ்வர சக்தி. நம்முடைய மனம் குறையுள்ள நம்முடை எண்ணங்களுக்கு ஏற்ற சக்தி. ஆதாவது, ஒட்டுமொத்த ஈஸ்வர சக்தியின் ஒரு சிறு பகுதி நம்முடைய சக்தி எனலாம்.

இதிலே, இந்த பிரபஞ்சமனம் எனும் ஈஸ்வரன் பரமனின் ஆற்றல் என்பதினால், அந்த பரமன் தன்னைத் தான் அறிய ஈஸ்வனைக் கொண்டு அறிய முற்படுகின்றான். அந்த வகையிலே, பரமனின் பூரணத்துவம் அவனால் உணரப்பட வேண்டுமானால், அதற்கான ஒரு கருவியாக இந்த மனித உடலைக் கொண்டு, ஈஸ்வரன் பிரபஞ்ச மனமாகிய பேருணர்வு நிலையில் இருக்கின்ற சிறு பகுதியை நம்மிடம் உள்ளுணர்வாகக் கொண்டு தொடர்பு வைக்கின்றான்.

ஆக, அந்த வகையிலே, நம் மனதிற்கு பலவிதமான நிலைகள் இருக்கின்றன. மனதின் அதிர்வுகளின் அளவிற்கேற்ப அதன் நிலைகள் மாறுபட்டுக்கொண்டே இருக்கும். அதிர்வுகள் மிக குறைந்து இருக்கும்போது உடல் தூக்கத்துக்கு உட்படும். மனம் ஒரு குறிப்பிட்ட அலைவரிசை அதிர்வுகளின் இருக்கும்போது மட்டுமே, ஈஸ்வர சித்தம் நமக்கு புரிய ஆரம்பிக்கும். அதாவது, அந்த நிலையில், ஈஸ்வர சித்தத்தின் உணர்வுகள் நம் மனதில் உள்ளுணர்வாக பதியும். இந்த நிலையில் ஏற்கப்படும் உணர்வுகள் அடிப்படையில் நம்முடைய மனம் செயல்படும் போதுதான் அது நேர்மறையான வழியில் செயல்படும். இந்த ஈஸ்வர மனதின் செயல்பாடு மட்டும்தான் நம் உடலின் சுகத்தையோ, பந்த பாசங்களையோ வளர்க்காது. நமக்கான பொருளாதார வளர்ச்சியின் வழியே போகாது.

அதுவே, நம் மனதின் அதிர்வுகள் குறைந்த அலைவரிசைகளில் அமைந்து, அதன் வாயிலாக வெளிப்படும் நமது மனம் எப்பொழுதும் பொருளாதார வளர்ச்சிக்கான சிந்தனைகளில் ஈடுபடும். இந்த நிலையிலே, நம் மனம் அந்த உயர் அறிவுப் பரிமாணத்தை அனுபவமாக்கும் ஈஸ்வர மனதிற்கு கட்டப்பட முடியாமல், தன் போக்கில் போகும். இதுவே, நாம் நம்மை அறிவதற்கு தடையாக உள்ளது.

ஆகவே, நாம் பிரபஞ்ச மனமாகிய ஈஸ்வரனிடம் நம்மை முழுமையா ஒப்படைக்கும் போது மட்டுமே, நம் மனம் தன் தனித்து அடையாளங்களை இழக்கும். ஈஸ்வர மனதிற்கு கட்டுப்படும்.

நம் மனம் முற்றிலும் பிரபஞ்ச மனமாகிய ஈஸ்வரனின் கட்டுக்குள் வரும்போது, ஈஸ்வர மனம் செயல்பட ஆரம்பிக்கும் நிலையைத்தான் நாம் விழித்துக் கொண்ட விழிப்புணர்வு அல்லது **விழித்துக் கொண்ட விவேகம்** என்கின்றோம்.

நம் மனம் தன்னுடைய தனித்துவமான அடையாளங்களை இழந்து, ஈஸ்வர சித்தம் வழி நடத்துகின்ற நிலையில் நிற்கும்போது, நம்முடைய எதிர்மறை சக்திகள் வெளியேறி, முற்றிலும் ஈஸ்வர சக்தியான நேர்மறை சக்தி நிறையும். இப்படி முற்றிலும் **நேர்மறை சக்தி** நிறையப் பெற்று, பூமியின் ஈர்ப்பு சக்திக்கு அப்பாற்பட்ட பிரபஞ்ச சக்தியை உணரும் நிலையில், அதை பேருணர்வு நிலை என்கிறோம். சுயமுணர்தல் என்கிறோம். அப்படி தன்னை உணர்ந்த தத்துவ ஞானிகளை இந்த உடலோடு இருக்கும்போதே **ஜீவன் முக்தர்கள்** என்கின்றோம். **தெய்வீகமானவர்கள்** என்கின்றோம்.

இந்த நிலையில் அவர்கள் ஈஸ்வர மனதைக் கொண்டு, அந்த தூய அறிவாகிய ஆத்மா எனும் இருப்பு இருப்பதை தன்னுள் உணர்வதே **மோக்ஷம்** அல்லது **முக்தி** எனப்படுகின்றது.

# 8. **விசாரம்** (பகுத்தறிவு)

## விசாரம் என்றால் என்ன?

ஆத்மாவை விசாரிப்பது யார்? இந்த விசாரம் யாருக்கு? ஆத்மாவுக்கா? என்றால், ஆத்மா யாதொரு விசாரத்திற்கும் அவசியமற்ற சுத்த, நித்திய, முக்த, ஆனந்த பூரணமாகையால் இவ்விசாரணையை ஆத்மா என்றுமே செய்யாது. சரி! அப்படியானால் யார் இந்த விசாரத்தை செய்கின்றார்கள் என்றால், நம்முடைய மனம் அறிவுப் பரிமாணத்தின் உயர் நிலைப் பரிமாணங்களில் படிப்படியாக முன்னேறி, மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்ற நிலையில், அந்த அஹங்காரமாகிய **'நான்'** எனும் அகந்தைதான் இவ்விசாரத்தைச் செய்ய வேண்டியதாகிறது.

அப்படியானால், மனதின் உயர்பரிமாண இவ்வகந்தை அல்லது அஹங்காரம் அந்த ஆத்மாவை அறிய முடியுமா? என்றால், உண்மையில் இவ்வகந்தையோ இருப்பற்ற ஓர் பொய்த் தோற்றம். இது தூக்கத்தில் இலயித்து உருவிழக்கும் ஓர் அற்பவுணர்வு மட்டுமே. அதனால், இதன் அறிவிற்கு ஆத்மா அறியப்படும் பொருளாகுமா? என்றால், உண்மையில் இந்த அகந்தையால் ஆத்மாவை அறிய முடியாது என்பதே உண்மை.

தூய அறிவாகிய ஆத்மாவுக்கோ விசாரம் அனாவசியம். ஆனால், அகந்தைக்கோ ஆத்ம அறிவு அசாத்தியம் என்பதினால், இவ்வாத்ம விசாரம் என்ற சாதனையின் செய்முறைதான் என்ன?

ஆத்ம விசாரம் என்ற சொற்றொடர் சாஸ்திரங்களில் காணப்படுவதன் நோக்கம்தான் என்ன? என்பதுப் பற்றி சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் இருக்கும் நமக்கு எப்படி அது சாத்தியம் என்பதைப் பார்ப்போம்.

மனதின் விசாரணை என்பது, மகத்தான மனிதன் அதே மனதைக் கொண்டு, தன் சுயத்தை தானறியும் மிக உயரிய விசாரத்தை **'ஆத்ம விசாரம்'** என்பதாகப் பார்க்கின்றோம். அதாவது, விசாரம் என்றாலே, ஆத்மாவை விசாரிப்பது என்றும், ஆத்மாவைப் பற்றிய விசாரணை என்றும் பொருள் கொள்வதுண்டு. தன்னை விசாரித்தறிதல் என்பதும் அதுவே.

ஆனாலும், அதை எப்படிச் செய்வது? ஆத்மாவை யார் விசாரிப்பது? அல்லது விசாரணை என்றால் என்ன? என்ற கேள்விகளுக்கு எல்லாம் ஒரே பதிலாக, நம் மூலத்தை நாம் உணர்வது என்று பொருள் கொள்ளலாம்.

சாதாரணமாக ஆத்ம விசாரம், பிரம்ம விசாரம் என்ற பதங்களைக் கேட்கும்போது நம்மவர் பலரும், தம் தேகத்தினுள் ஏதோ ஜோதி மயமாகவோ, அல்லது வடிமற்ற ஏதோ ஓர் சக்தி மயமாகவோ ஒரு பொருள் இருப்பதாகவும், அது எது?, எங்கே?, எப்படியிருக்கிறது? என்பதை அவர்கள் அறியப் போவதாகவும், அதற்காகத்தான் அவர்கள் முயற்சிக்கப் போவதாகவும் ஓர் கருத்தை மேற்கொள்கிறார்கள். இது சரியான கருத்தல்ல.

ஏனெனில், அப்படி அறியப்போகும் நமக்கு அறியப்படும் பொருளாக, நம்முடைய புலன்களால் பார்த்து, கேட்டு, விசாரித்து அறியக்கூடிய ஒன்றாக நிச்சயமாக ஆத்மா இருக்க முடியாது. உண்மையில், அவ்வாறு அறிய முற்படுவோன் எவனோ? அவன்தான் அந்த தூய உணர்வாகிய ஆத்மாவாகவே இருக்கின்றான் என்பதை அறிவதே, இங்கு **ஆத்மஞானம்** என்பதாகவும் பார்க்கப்படுகின்றது.

பொதுவாக, விசாரம் என்பது, உண்மையைத் தேடிச்செல்ல ஆசைப்படுகின்ற உண்மையான ஆத்ம தாகம் கொண்ட முமுக்ஷுவுக்கு அவனையே அவனுக்குக் காட்டிக் கொடுக்கின்ற அவனது மேம்பட்ட மனதின் விழித்துக்கொண்ட விவேகத்தினால் உண்டான தூய அறிவு நிலையில் அடையப்படுகின்ற மனதின் **விடுதலை** என்பதாகும்.

அத்தகைய விடுதலைக்கு எல்லையில்லை. எல்லைகளை நாமே வகுக்கின்றோம். நமது சிந்தனைகளும், செயல்களும் மட்டுமே விடுதலையை முடிவு செய்கின்றன அதாவது, நம் ஒவ்வொருவரின் புரிதலுக்கேற்றவாறு, விடுதலை என்பதையும் குறுக்கியும், விரித்தும் பார்க்கின்றோம். அதாவது, அவரவர்கள் ஏற்றி வைத்துக்கொண்ட எண்ணங்களையும் பிற உலக நிகழ்ச்சிகளையும் கவனிப்பது (observing) என்பது, மனம் தனக்கு வேறாக உள்ள புலன்களைக் கொண்டு, புற விசய, சுகங்களில் நாட்டம் கொண்டு, எப்போதும் எதையாவது வெளியே பார்த்துக் கொண்டிருக்கவே விரும்புகின்றது.

ஆக, கணக்கற்ற எண்ணங்களின் ஒரு தொகுதிக்கே '**மனம்**' என்ற பெயர். அதாவது, மாறிக்கொண்டிருப்பதும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாததுமான இந்த ஒட்டுமொத்த எண்ணக்கூட்டங்கள் எல்லாவற்றிலும் ஊடுருவியும், ஆதாரமாயும் இருந்துவரும் ஓர் எண்ணம் எதுவென நாம் ஆராய்ந்தால், அது '**நான்**' என்ற எண்ணம் மட்டுமே என்பது நமக்கு நன்கு தெரியவரும்.

இந்த '**நான்**' என்ற எண்ணமே எல்லா எண்ணங்கட்கும் முதல் எண்ணமாகும். மற்ற எல்லா எண்ணங்களும் இந்த '**நான்**' என்னும் எண்ணத்தையே சார்ந்து நிற்கின்றன. அதாவது, மற்ற எல்லா எண்ணங்களுக்கும் மூல முதல் எண்ணமாகிய '**நான்**' என்னும் ஒரு எண்ணத்தைக் கொண்டு, எல்லாவற்றையும் அறியப்படும் எண்ணங்களாக மற்றவைகள் இருப்பதால், இந்த ஒன்றேயாகிய '**நான்**' என்னும் அஹங்காரம் கொண்ட எண்ணத்தையன்றி, மற்ற எண்ணங்கள் எதுவும் தாமாகவே உண்டாகாது. எனவே, '**நான்**' என்னும் எண்ணம் ஒன்றே '**மனம்**' என்பதன் மூலப்பொருளாகும்.

ஆகையால் மனத்தின் உருவை – உண்மையை – விசாரித்தறிய விரும்பினால், நாம் இந்த மூல எண்ணமாகிய '**நான்**' என்பதை மட்டும் ஆராய வேண்டுமே தவிர, அதன் அறியப்படும் பொருள்களாகிய மற்ற எண்ணங்களை எல்லாம் கவனிக்கக் கூடாது. ஆகவே, இந்த '**நான்**' என்னும் அகந்தையாகிய முதல் எண்ணத்தை நாடினால் மட்டுமே, இதன் வாயிலாக வெளிப்பட்ட மற்ற எண்ணங்களைக் கவனிக்கும் **விசார விருத்தியால்** அந்த எண்ணங்கள் எல்லாம் தானாகத் தகர்ந்து போக வைக்க முடியும்.

அதாவது மனதினிடம் தன்னைப் பற்றிய அகநாட்டம் ஆரம்பித்ததும், அதன் நாமரூபம் (மனம் என்ற பெயரும் அதன் எண்ண அலையான வடிவமும்) அழிந்து விடுவதால், அதன்பிறகு விசாரத்தை மனம் செய்கிறது என்று எண்ணக் கூடாது. செய்வது மனமல்ல. மனமல்லாத சித் ரூபத்தின் சுபாவ தற்கவனம் என்பதினால், அதை **ஓர் கர்மம்** என்று கூறுவதும் முறையல்ல.

## தத்தாத்ரேயர் பாரம்பரியத்திற்குள் விசாரம்

விசாரம் என்ற சொல்லை நமது சாஸ்திரங்கள் உபயோகிக்கும் முறைக்கும், சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வந்த சாதுக்களின் சரியான புரிதலுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. சாஸ்திரங்களில் 'இவ்வுடல் நானல்ல, பிராணன்–மனம்–புத்தி–அஞ்ஞானவிருள் '**நானல்ல, நானல்ல**' என்று தள்ளும்படிக் கூறப்படுகிறது.

தள்ளுகிறவன் யார்? தள்ளுவதெப்படி? இம்மனமே (அல்லது புத்தியே) தள்ளுகிறவனாயிருந்தால், தன்னால் அறியப்படும் பொருளாகிய (திருசியமாகிய) ஜடமயமான ஐந்துகோஷங்களில் (அன்னமய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞானமய கோஷம், பிராணமய கோஷம் மற்றும் ஆனந்தமய கோஷம்) உண்மையில் அன்னமய கோஷமாகிய **உடல்** மற்றும் பிராணமய கோஷமாகிய **பிராணன்** ஆகிய இவையிரண்டை மட்டுமே ஒரு வேளை தள்ள முடியும்.

அதற்குமேல் தன் வடிவான மனத்தை (புத்தியை) மனமே எப்படித் தள்ளுவது? மேலும், அதற்கு மேற்பட்ட விஞ்ஞானமயம் (புத்தி) ஆனந்தமயம் (காரண சரீரம்) போன்ற கோசங்களையும் அந்த மனம் எப்படித் தள்ளமுடியும்?

ஆகையால், '**தேகம் நானல்ல, பிராணன் நானல்ல**' என்று விசாரக் காலத்தில் அவைகளைப் பற்றி நினைவால் கூறிக் கொண்டிருக்குமே தவிர, உண்மையான '**நான்**' என மிஞ்சுவதற்கு, அது வேறு எதைச் செய்யும்?

அதனால் '**விசாரம்**' என்ற இச்சொல்லின் செய்முறை, ஒன்றை மற்றொன்று விசாரிப்பது போன்ற காரியமல்ல என்பதை நாம் நன்கு உணர வேண்டும். இக்காரணத்தால்தான் '**நான் யார்?**' விசாரமானது தற்கவனம், தன் நாட்டம் என்று கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும்.

பொதுவாக, நம் மனத்தின் இயல்பு என்னவென்றால், தன்னைத் தவிர மற்றொன்றை எப்போதும் நாடிக் கொண்டிருப்பதே ஆகும். அதாவது, தனக்கு வேறாக இருக்கின்ற எல்லாவற்றையும் புலன்களின் வாயிலாக அறிந்து '**இது, இது இன்னது**' என்பதை எப்போதும், எதையாவது அறிந்துக் கொள்வதில் ஆர்வம் காட்டும் தன்மைக் கொண்டது மனம்.

மனதின் அத்தகைய நாட்டமே **பற்று.**

உடல் மற்றும் பிராணன் போன்றவைகளை '**இது நானல்ல, இது நானல்ல**' என்று தீர்மானிக்கும் நிலையிலே, அந்த மனம் இன்னும் வலுவாக அவைகளைப் பற்றிக் கொள்ளுமே தவிர, அவைகளை அவ்வளவு எளிதில் விட்டுவிடாது.

உண்மை இவ்வாறாயிருந்தும், சாஸ்திரங்களைப் படித்து பாண்டித்தியம் பெற்ற பலரும் ஆத்மாவை சாக்ஷியாகக் கூறப்பட்டிருப்பதைப் படித்துவிட்டு சாதகர்களைத் தத்தம் மனத்தில் அலைப்பாயும் எண்ணங்களையோ, அல்லது நம்மைச் சுற்றி இந்த உலகில் நடக்கும் விஷய, சுகங்களையோ வெறும் சாக்ஷியாகக் கவனித்துக் கொண்டே போகும்படி சொல்கிறார்கள்.

இவ்வாறு எழுகின்ற எண்ணங்களையும் – நம்முடைய நிகழ்வில் நடக்கின்ற நடைமுறை நடப்புக்களையும் வெறும் சாக்ஷியாகக் (observe) கவனித்துக் கொண்டிருப்பது ஞான மார்க்கத்தில் ஒரு சாதனை என்கின்றனர்.

அதாவது, அவர்கள் படித்த நூல்களிலிருந்து பெற்ற பாண்டித்தியத்தினால், அவ்வாறு, '**ஆத்மா சகல எண்ணங்களுக்கும், நிகழ்வுகளுக்கும் சாக்ஷியாக இருக்கிறது**' என்ற தவறான

கருத்தைக் கொண்டிருப்பதால்தான், 'ஒருவன் மேற்கூறிய எல்லாவற்றையும் சாக்ஷியாகக் கவனித்துக்கொண்டிருக்க முயற்சிக்கும்போது, அவன் தன்னுடைய ஆத்ம சொருப்பத்தில் திளைக்கின்றான் என்று கருதுகின்றனர்.

பிறகு ஏன்? சாஸ்திரங்களில் சில சமயம் ஆத்மாவை **சாக்ஷி** என்று கூறப்பட்டுள்ளது?

ஆத்மா சகல எண்ணங்களையும், உலகக் காரியங்களையும் சாக்ஷியாக அறிந்து கொண்டிருக்கிறது என்பதுதான் சாஸ்திரங்களின் மெய்யான கருத்தா? என்றால் உண்மை அப்படியல்ல.

உண்மையில் ஆத்மா எந்த அன்னியத்தையும் பார்ப்பதோ? அல்லது அறிவதோ? இல்லை. அது தன்னினும் இரண்டாவதாக ஏதுமின்றி, அத்துவிதமான பூரண மெய்ப்பொருள் என்பதினால், அதற்கு அன்னியப் பொருள்களுக்கு **சாக்ஷி வகிக்கும்** வேலையும் அதற்குக் கிடையாது.

இதிலிருந்து, தனக்கு வேறாக எதையும் பார்ப்பதோ? அறிவதோ? ஆகிய அனைத்தும் மனதின் அகந்தையே. அதாவது, மனமே தவிர, அது ஆத்மாவல்ல.

அதாவது, தனக்கு அன்னியமான திருசியம் யாதொன்றுமில்லாததால் ஆத்மா ஒரு திருக்கும் (சாக்ஷியும்) அல்ல என்பதினால், அது **திருக்கு, திருசியம்** ஆகிய இரண்டையும் கடந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அப்படியானால், ஆத்மா எப்படி எல்லாவற்றையும் அறிகின்றது அல்லது உணர்கிறது என்றால், நாம் நம்முடைய நடைமுறையில் தினசரி காரியங்களில் சூரியன் வந்தவுடன் பறவைகள் இறை தேடி செல்வதும், தாமரை மலர் மலர்வதும், விவசாயிகள் விவசாய வேலைகளில் ஈடுபடுவதும் என எல்லாக் காரியங்கள் நடந்தாலும், அத்தனைக் காரியங்களிலும் சூரியன் சம்பந்தப்படாமல், இந்த உலகில் நடைப்பெறுகின்ற அத்தனை செயல்களுக்கும் **சாக்ஷி** என்பதாகக் கூறுகின்றோமோ? அதுப்போல, சிலசமயங்களில் ஆத்மாவையும் ஓர் சாக்ஷிப் பொருளாக சுட்டிக் காட்டப்பட்டது.

அதாவது, கதிரவனது சந்நிதியில் அவனது சந்நிதி மஹிமையால் இந்த உலகக் காரியங்கள் நடைபெறுவதைப் போலவே, ஆத்மாவின் வெறும் சந்நிதி மாத்திரத்தில், இந்த மனமும், மனதினால் படைக்கப்பட்ட உலகத் தோற்றமும் எழுந்து, இயங்கி, ஓய்கின்றன.

ஆகவே, தூய அறிவு ஒளியாகிய ஆத்மன் எனும் பரமன் எல்லாவற்றிற்கும் சாக்ஷி என்பது, **காண்பான், காட்சி, காணப்படும் பொருள்** ஆகிய முப்புடிகளை விளக்கும் அறிவொளி

மாத்திரமே என்றும், ஆன்மாவை '**சாக்ஷி**'யென்பதால், அது தனக்கு அன்னியமாக எதையும் அறிகிறது என்று தவறாகப் பொருள் கொள்ளக்கூடாது என்றும் புரிந்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, இந்த உலகக் காரியங்களில் சூரியன் சம்பந்தப்படுவதோ? அல்லது அவற்றை அறிவதோ? இல்லாமல், அது தன்னில் தானாய் தனித்துவமாய் எதிலும் சம்பந்தப்படாமல் இருப்பதுப் போலவே, ஆத்மா உலக–மனத் தோற்றங்களையும் அவற்றின் இருப்பையும், மறைவையும் அறிவதுமில்லை, அதில் சம்பந்தப்படுவதும் இல்லை. எனவே, ஆத்மா தனக்கு வேறாக எதையும் அறிகின்ற ஒரு சாக்ஷியல்ல.

இரண்டாவதாக, உலகத் தோற்றத்தை அறிந்து அதனால் அதற்குச் சாக்ஷியாகவுள்ள அகந்தை (மனம்) எழுவதற்கு ஆதாரமாகவும், அதே மனத்திற்கு மெய்ப்பொருளாகவும் அந்த தூய அறிவாகிய பரமனே உள்ளதால், அவரை சிலசமயம் சாக்ஷியாகக் கூறப்படுகிறது.

அதாவது, சாஸ்திரங்கள் சிலசமயம் ஆத்மாவை **சாக்ஷி** என்று கூறுவதன் நோக்கம், உடனே நாம் நம் கவனத்தை (நாட்டத்தை) **உலகம் – மனம்** என இவைகளுக்கு சாக்ஷியாக இருந்து அறிகின்ற அகந்தையின் அறியாமையை சுட்டிக்காட்டத்தான் என்பதைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

அதன்படி '**எல்லாவற்றையும் அறியும் இந்த நான் யார்?**' என்று நம் கவனம் **(மனம்)** தன்னிடமே திருப்பப்படும்போது, அந்த மனதின் அஹங்காரம் அழிந்து, தன்னுடைய மூலத்திற்கு திரும்புகின்றது. அதாவது, தூய அறிவாகிய ஆத்மாவாக அறிகின்றது.

ஆகவே, சாதகன் விசாரம் மேற்கொள்ளும் இதுப்போன்ற சாதனைக் காலத்தில் '**சாக்ஷி பாவம்**' என்றொரு நிலை அடையப்படுவதுண்டு. இந்நிலையில் மனத்தின் விருத்திகளையும், மற்ற அன்னியப் பொருட்களையும் அதே மனம் உணர்ந்தாலும், நாம் அவற்றால் பாதிக்கப்படாமல் சாக்ஷி சொரூபமாகவே அவைகளை எல்லாம் உணரக்கூடிய தூய அறிவாகிய ஆத்மாவாகவே இருக்கின்றோம் என்றாலும், இந்நிலையில் எண்ணங்களை கவனிப்பதாலோ? அல்லது '**நான் எண்ணங்களால் பாதிக்கப்படாத சாக்ஷி**' என்று பாவிப்பதாலோ? அந்த ஆத்மாவாக நாம் ஆகிவிடுவதில்லை. காரணம், நாம் நமக்கு வேறாக புலன்கள், மனம், புத்தி என எதன் மூலமாகவும் நம்மை நாம் அடையமுடியாது.

ஆகவே, **சாக்ஷி பாவமென்னும்** இந்நிலையும் ஓர் அப்பியாச நிலைதான்.

ஏனெனில், இந்நிலையில் நமது கவனசக்தி எண்ணங்களிலிருந்து முழுமையாகத் தன் சுயத்தை நோக்கி முழுமையாகத் திரும்புமாயின், அந்த மனதில் எழுகின்ற எண்ணங்களையும், அதனால் படைக்கப்பட்ட இதரப் பொருட்களின் தோற்றத்தையும்

உண்டாக்கும், நம்மிடம் அடிப்படை அம்சங்களாக இருக்கும் மனதின் அஞ்ஞான இருள் மீண்டும் எழாதபடி, அவைகள் ஆத்மஞானப் பேரொளியால் விழுங்கப்படும்.

மனத்தை அது போகும் போக்கில் விட்டுப் பார்த்தால், அது ஐம்புலன்களின் வழியே அலைய அலைய, அதன் வெளிப்புற நாட்டமே அதிகமாகும். ஆதலால், அதே மனதின் உயர்பரிமாண நிலையில் வெளிப்படும் அஹங்கார உணர்வாகிய '**நான்**' எனும் உணர்வை அக முகமாகத் திருப்பி அனைத்திற்கும் சாக்ஷியாக இருக்கும் தன்னிருப்பை தான் உணரக்கூடிய மிக உயரிய நிலையில் மட்டுமே, மனம் தனக்கு வேறாக இரண்டாவதாக எதையும் சாக்ஷியாகப் பார்க்கப்போகாமல், அவ்வாறு சாக்ஷியாகப் பார்ப்பவனை (தன்னை) '**நான்**' என்பதாக தன்னிருப்பை உணரும். இதுவே உண்மையான் **"நான்"**, இதுவே **அஹம் அஸ்மி**.

இது தன்னாட்டம் கொண்ட '**நான் இருக்கின்றேன்**' என்ற நம்முடைய ஸ்புரணம் மற்றும் எதார்த்தம். இதுவே நம்முடைய இயல்பு.

இதிலிருந்து, '**நான் இருக்கிறேன்**' என்ற அறிவு எல்லோருக்கும் அனுபவமாகும். இதில் '**இருக்கிறேன்**' என்ற உணர்வே அறிவாகும். இது அன்னியத்தைப் பற்றிய அறிவல்ல. தன்னைப் பற்றிய அறிவு. இதுவே **சித்**.

அதாவது '**நான் இருக்கிறேன்**' என்பதில் '**நான்**' என்பது **சத்**.
'**இருக்கிறேன்**' என்பது **சித்**.

நமது **சத்–சித்** சொரூபமான ஆத்மா '**நான் இருக்கிறேன்**' என்ற சத்–சித் சொரூப மாத்திரமாய் விளங்காமல், 'நான் மனிதனாக இருக்கிறேன். நான் பிராமணனாக – இன்னாராக – இது – அதுவாக இருக்கிறேன்' என்றவாறு ஓர் உணர்வு இடையில் கலந்து விடுமாயின், அக் கலப்புணர்வே மனதின் அஹங்காரமாகும்.

இக் கலப்புணர்வு ஒரு நாம ரூபத்தைப் பற்றிக்கொண்டுதான் எழும். 'நான் மனிதனாக இருக்கிறேன், நான் பிராமணனாக இருக்கிறேன், நான் உட்கார்ந்து இருக்கிறேன், நான் படுத்துக்கொண்டு இருக்கிறேன்' என்றவாறு கலப்பு உணர்வாகும் போது, இந்த உடலையே '**நான்**' எனக் கருதிக்கொண்டு, அதன் நாம, ரூப விசேஷங்களுக்கேற்ப, '**நான்** இவ்வாறு – அவ்வாறு – **இருக்கிறேன்**' என்ற உணர்வு காணப்படுவதைக் கொண்டு, '**நான் இருக்கிறேன்**' என்ற சுத்த அறிவுடன் (சத்–சித்துடன்) '**இவ்வாறு அவ்வாறு**' என்று கலக்கப்பெற்ற உணர்வுதான் **நினைவு** எனப்படும். இதுவே, '**நான்**' எனும் **முதல் எண்ணம்** எனப்படும்.

அதாவது, '**நான் இருக்கிறேன்**' என்ற சுத்த **சத்–சித்துணர்வு** ஒரு எண்ணம் அல்ல. அது நமது நினைப்பல்ல. அவ்வறிவு நம் சொரூபம்.

அதுப்போல, '**நான் மனிதனாக இருக்கிறேன்**' என்பது நம் சுத்த அறிவல்ல. அது நம் எண்ணம் அல்லது நினைப்பு.

இந்த இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்கு உணர வேண்டும்.

இவ்விதம் நம் உண்மை இருப்புக்கும், மனதின் எழுச்சிக்கும் (இருப்புக்கும், நினைப்புக்கும்) வித்தியாசம் காண்பது, '**நான் யார்?**' என்ற விசாரத்தை மேற்கொள்ள ஒரு அடித்தளம் ஆகும்.

இவ்விசாரத்தை '**நான் யார்?**' என்றும், '**நான் எங்கிருந்து?**' என்றும் இரு விதமாகச் செய்யலாம்.

'**ஆத்ம**', '**அஹம்**' என்ற வடமொழிச் சொற்களுக்கு '**நான்**' என்று பொருள். '**ஆத்ம விசாரம்**' என்றால் '**நான் யார்?**' என்று கவனிக்கும் நாட்டமே ஆகும். இதை 'அக நாட்டம், ஆத்ம கவனம், தன்னாட்டம், தானாயிருத்தல்' என்னும் சொற்றொடர்களால் குறிக்கலாம். இவ்வாறு குறிக்கப்படும் '**நான்**' என்ற உணர்வு சுயமுணர்தல் ஆகும்.

ஆனால் முன்பே கூறியுள்ளபடி, 'நான் இதுவாயிருக்கிறேன்; நான் அதுவாயிருக்கிறேன்' என்ற எண்ணங்கள் மூலம், அந்த எண்ணங்கள் எல்லாம் வடிவங்களில் வந்துவிட்டால், அது உபாதியுடன் கூடிய கலப்புணர்வு என்பதினால், அதை மனதின் **அஹங்காரம்** என்கின்றோம்.

உண்மையில், நான் இருக்கின்றேன் என்ற தன்னுணர்வில் உள்ள நான் எனும் 'அகந்தை – அகங்காரம் – ஜீவபோதம்' என்பது உடலற்ற நிலையில் உணர்வில் மட்டும் நிற்கும்போது, அத்தகைய '**நான் நான்**' எனும் சுயமுணர்தல் **ஆத்மா – ப்ரஹ்மம் –சிவம்** எனக் கொள்ளலாம்.

ஆனால், மனிதர்கள் அறியாமையின் காரணமாக தன்னுடைய இந்த உடலையே '**நான்**' என்று கருதுகிறபடியால், இந்த அஹங்காரத்தை மனம் மற்றும் பிராணனுடன் கூடிய **ஜீவன்** என்பதாகவே இங்கு நாம் அறிய வேண்டும்.

ஆக இதிலிருந்து நாம் அறிய வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், ஆத்மாவே மெய்யான தன்மையுணர்வு. அதைவிடுத்து, இந்த உடலை நான் எனக்கருதும்

அகந்தை உணர்வானது அதன் நிழலாகிய போலித் தன்மையுணர்வே. இவ்வகந்தை எது அல்லது யார்? என்று விசாரித்தால், அது உண்மையில் மனதின் கற்பிதம் என்பதினால், அது தோன்றி மறையக்கூடிய மாயை எனப்புரிந்தால், அவ்வாறு விசாரிப்பவன் யாரோ அவனே அந்த தூய அறிவாகிய ஆத்மன் அல்லது பரமன் என்றுணர்வான்.

இந்நிலையில் நம் உண்மை இருப்பை மாத்திரமே நாம் கவனிக்க பேரன்பு கொண்டிருப்பதால், மனதின் அசைவுகளையும், நம்மைச் சுற்றி நடப்பவற்றையும் நாம் நன்றாக உணர்ந்திருந்தும், அவற்றின்மேல் உதாசீனமாயிருப்பதால் மட்டுமே, அவைகளால் நாம் பாதிக்கப்படாமலிருக்கிறோம்.

# 9. **சுயமுணர்தல்** (ப்ரக்ஞை)

## சுயமுணர்தல் என்றால் என்ன?

ஒருவன் தனக்குள் தன்னை பற்றி என்ன நினைக்கிறானோ? அதுவே அவனது சுயம். அவன் எந்தவொரு நினைவுக்கு சக்தி கொடுக்கிறானோ? அந்த நினைவே அவனது சுயம். பொதுவில், பிறப்பால் நாம் நமது தாய் தந்தையரின் நினைவைத்தான் நமது சுயமாக கொண்டிருக்கிறோம். நாம் வளர, வளர இந்த சமுதாயம் சொல்லும் கருத்துக்களையும், மற்ற நபர்களின் சிந்தனைகளையும், அடையாளங்களையும் நாம் நமக்குள் சுமந்து கொண்டே இருப்பதனால், அவைகளைப் பொறுத்தே நம் சுயம் ஒரு அடையாளமாக மாறி அமைகிறது.

நாம் இப்படித்தான் இருக்க வேண்டும் என நமக்குள் ஒரு எண்ணத்தை ஏற்றி வைத்துக் கொண்டிருப்போம். அதற்கு தொடர்சியாக சக்தி அளித்துக் கொண்டே இருப்போம். இருப்பினும், இந்த சமுதாயத்திற்காக அல்லது ஏதோவொரு காரணத்திற்காக நாம் இந்த உலகில் இப்படியாக நடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகின்றது. ஒரு கட்டத்தில் அவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல், நம்முடைய எதார்த்தம் அல்லது நம் சுயம் வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்படும்போது, அது நல்ல விளைவுகளையும் கொடுக்கலாம், கெட்ட விளைவுகளையும் கொடுக்கலாம். அது நீங்கள் சுமக்கும் நினைவை பொறுத்தே அது அமையும்.

அடிப்படையில் மனிதனின் சுயம் என்பது **மனித நேயம்** என்னும் அவனது நினைவு தான். நமக்குள் நாம் மட்டும் வாழ்வதுதான் நம் சுயம். நமக்குள் நாம் மட்டும் வாழ்வது எப்படி? மற்றவர்களின் கருத்துக்களையும், அடையாளங்களையும் நீங்கள் உங்களுக்குள் சுமக்காமல் வாழ்வது தான் **"நமக்குள் நாம் மட்டும் வாழ்வது"** என்று பொருள்.

நம்மில் எத்தனை பேர் இவ்வாறு நம் சுயத்தில் நிலைபெற்று வாழ்கிறோம்? மிகவும் சொற்பமானவர்களே உண்மையாகவே சுயத்தில் நிலை பெறுகிறார்கள். மீதமுள்ளவர்கள் அடுத்தவர்களின் கருத்துக்களையும், அடுத்தவர்களின் அடையாளங்களையும் சுமந்து கொண்டே வாழ்ந்து பழகிவிட்டனர்.

இந்த பூமியில் உள்ள எல்லா உயிர்களுக்கும் அவைகள் வாழ்வதற்கான அத்தியாவசியத் தேவையான உணவு, உறைவிடம் என எல்லாமே இயற்கையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், மனிதன் மட்டுமே அவனது சுயம் அறியாத காரணத்தினால், எல்லா செயல்களையும் தனக்காக மட்டுமே செய்து கொண்டிருக்கிறான். அதன்காரணமாக, மற்றவர்களுக்காக நடித்து, தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறான்.

சுயநலத்தில்தான் பொதுநலம் அடங்கி இருக்கிறது என்பதை முதலில் நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். அப்போது மட்டுமே நம் சுயம் என்பது எல்லோருக்குமானது என்பதும் புரியவரும். நாம் நலமாக இருந்தால்தான் நம்மால் மற்றவர்களுக்கு உதவ முடியும். அவர்களிடம் அன்பு செலுத்த முடியும். சுயநலத்தை முழுமையாக புரிந்தவர்களின் செயல் மிக புனிதமான ஒன்றாகதான் இருக்கும். நாம் நமது சுயநலத்தை அறிய வேண்டுமானால், நம்மை நாமே ஆராய வேண்டும். நம்மை நாமே ஆராய்ந்து பெறும் விசாரணையின் தெளிவுதான் ஞானமாகும்.

ஆக, நமது சுயநலமே நமக்கு தெரியவில்லை எனில் நம்மால் எப்படி பொதுநலம் பேண இயலும்? ஆகையால் முதலில் நமது சுயத்தை நாம் அறிந்து கொள்வோம்.

சுயமுணர்தல் என்பது, தன்னைப் பற்றி நாம் உணர்ந்துக் கொள்வதாகும். இது, ஒருவர் தன்னைப்பற்றிய உண்மை அறிவைப் பெறுவதாகும். சனாதன தர்மத்டின் வழி வந்த இந்து மதத்தில், சுயமுணர்தல் என்பது, நிரந்தரமான தன்னிருப்பாகிய ஆத்மாவைப் பற்றிய உண்மை உணர்தலாகும்.

ஆனால், நாம் வாழும் வாழ்க்கையில் நம்முடைய நடைமுறையில் நம்மைப் பற்றிப் பார்க்கலாம். நீங்கள், 'என் தலை,' 'என் உடல்,' 'என் பாதங்கள்,' 'என் கண்கள்,' 'என் காதுகள்' என்று சொல்கிறீர்கள். 'நான் தலை', 'நான் உடல்' என்று நீங்கள் கூறவில்லை. இதன் பொருள் உங்கள் உடல் உறுப்புகள் அனைத்தும் 'என்' என்பதன் கீழ் வருகின்றன. அதுப்போல, 'என் கைக்கடிகாரம்,' 'எனது கண்கண்ணாடி,' 'என் வீடு,' 'என் கார்' என்றுதான் கூறுகின்றீர்களே தவிர அதைப்போய், 'நான் வாட்ச்', 'நான் கண்கண்ணாடி' என்று கூறமாட்டீர்கள். ஆக என்னுடையது என்று வருகின்ற எல்லாவற்றிற்கும் உரிமையாளர் நீங்களே. அந்த வகையில், உங்கள் உடமைகளுக்கும், உங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நன்கு அறிகின்றீர்கள். அப்படியானால், நீங்கள் ஏன் சில நேரங்களிம் உங்கள் உடலை என்னுடைய உடல் என்று உரிமைக் கொண்டாடுகின்றீர்கள்? **நீங்கள் இந்த உடலா?** அல்லது **அது உங்கள் உடலா?** என்பதுதான் இங்கு நாம் அறிய வேண்டிய ஆழமான உண்மை.

நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் அனுதினமும் நம்மை நாம் கண்ணாடியில் பார்த்து நம் உடலை இரசிக்கின்றோம். கண்ணாடியில் தினந்தோறும் நம் முகத்தையும், உடலையும் கவனிக்கத்தான் செய்கின்றோம்.

ஏனென்றால், நாம் பார்ப்பதற்கு அழகாக இருக்க வேண்டும். நம் முகம் மற்றவர்கள் முன்னால் வசீகரமாக இருக்க வேண்டும் என்பதினால், நம்முடைய வெளிப்புறத் தோற்றத்தின் மீது அதிக அக்கரைக் கொள்கின்றோமோ? அதுப்போல, நமக்கான நம்முடைய அகத்தோற்றம் ஒன்று உள்ளது.

அதன் வாயிலாக, நம்முடைய அத்தனை புறக்கவர்ச்சிக்கும் காரணமான உடல் மற்றும் புலன்கள், மனம் என, நம் உள்ளுறையும் ஆத்மாவின் தெய்வீகத்திலிருந்து நாம் இவ்வாறு பிரகாசிக்கின்றோம் என்பதை அறிவதே **சுயமுணர்தல்** ஆகும்.

அதாவது, நீங்கள் யார்? நீங்கள் இந்த உடலா? அல்லது உங்கள் மனமா? அல்லது உங்கள் படிப்பினால் பெறப்பட்ட பட்டமா? உங்கள் உத்தியோகத்தால் பெறப்பட்ட பதவியா? அல்லது பிறப்பால் உண்டாக்கிக் கொண்ட ஜாதியா? அல்லது மதங்களால் பிரித்தாலப்பட்ட இனமா? நீங்கள் ஏதாவது உயர்ந்தவரா? நீங்கள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அல்லது உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறீர்களா? அது உண்மையில் முக்கியமா? என்றால், ஆம்! அதை அறிவது ஒன்று மட்டுமே, நம்முடைய மனிதப் பிறவியின் மகத்துவம் ஆகும்.

## தத்தாத்ரேயர் பாரம்பரையில் சுயமுணர்தல்

உண்மையில், இயல்பான நம்முடைய சுயம் எனும் ப்ரக்ஞை நம் யாருக்கும் சொந்தமானது இல்லை. அது எல்லையும் வடிவுமற்ற ஒரு உணர்வுவெளி. அகண்டாகாரமானது. பிரபஞ்ச ரீதியானது. உடலைக் கொண்டு வாழும் ஒவ்வொரு உயிரினத்தின் உணர்விலும் (ப்ரக்ஞை) அது பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு ஜீவனும் தன் அறியாமையினால், அந்த உயர் ப்ரக்ஞையின் பிரதிபலிப்பைத் தனியான ஒரு '**நான்**' என்று ஏற்றுக் கொள்கிறது.

இந்நிலையில், ஒரு ஜீவனின் மரணத்தின்போது மனம் என்னும் அறிவு மண்டலம் செயலற்றுப் போய்விடுகிறது. அதனால் அதில் பிரபஞ்ச ரீதியான '**நான்**' பிரதிபலிப்பதில்லை. அந்த உடலிலும், மனத்திலும் இயங்கிய சுய உணர்வு மறுபடியும் பிரபஞ்ச உணர்வு மண்டலத்தில் போய்க் கலந்துவிடுகிறது.

இந்தக் காரணத்தால் நம் அனைவரின் பின்னாலும் இருந்து இயங்கும் '**நான்**' ஒரே '**நான்**' மட்டும்தான். பிரபஞ்சம் முழுவதிலும் ஒரே ஒரு '**நான்**'தான் இருந்து இயங்குகிறது.

சரி, இதற்கும் இந்த பிரபஞ்சம் (விஸ்வம்) என்பதற்கும் என்ன தொடர்பு? என்று கேட்டால், நம் உடலிலும், மனத்திலும் இயங்கும் பிரபஞ்சப் பிரக்ஞை நம்மை நமக்கு **'நான்'** என்று அடையாளம் காட்டுவதுப் போல, இந்த ஒட்டுமொத்தப் பிரபஞ்சப் பிரக்ஞையான **'நான்'** தன்னை என்னவாகக் காண்கிறது? என்றால், அதுவும் இந்த மாபெரும் பிரபஞ்சத்தை, விஸ்வத்தை, தன் உடலாகத்தான் காண முடியும், என்பதினால், நம் ஒவ்வொருவரின் உள்ளும் உள்ளுணர்வாக இருந்துக்கொண்டு இயங்கும் அந்த அகண்டாகாரமான **'நான்'**தான் உண்மையில் நம் ஒவ்வொருவரின் உடல்–மனம் வழியாகத் தன்னை **"நான்"** என்பதாகவே அறிந்துக்கொள்கிறது.

இந்த நிலையை நாம் **அத்யாத்ம யோகம்** என்ற ஆன்மவியகல் கல்வி மூலமாக உணர்ந்துக்கொண்டு, நம்முடைய அறியாமைகள் அகலும்போது, நம்மையே நாம் விஸ்வரூபமாகக் காணமுடியும். அதன் காரணமாக நம்முடைய தனித்த அடையாளங்கள் கொண்ட இந்த உடலை விடுத்து, தனக்குள் இருந்து இயங்கும் உள்ளுணர்வாகிய ப்ரக்ஞை இந்த ஒட்டுமொத்த **பிரபஞ்சப் ப்ரக்ஞை** என்பது அனுபவமாகப் புரியும்.

இது வெறும் மனதின் சிந்தனை ஓட்டத்தினால் மட்டும் எழும் எண்ணமல்ல. சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** பரம்பரையில் வருகின்ற நாம் ஒவ்வொருவரும் தன் சுயத்தையும் அதன் பரந்த அமைதியையும், நித்திய ஆனந்தத்தையும் உணர்ந்து, இந்த ஒட்டுமொத்த முழு பிரபஞ்சத்தையும் தன்னுள் ஒன்றாக உணர்ந்து, எல்லாவற்றையும் தன்னைக் காணுகின்ற பிரபஞ்ச உணர்வை நாம் ஒவ்வொருவரும் நேரடியாக அனுபவம் கொள்ளக்கூடிய ஆழமான உண்மை ஆகும்.

இவ்வாறுதான் இந்த ஒட்டுமொத்த பிரபஞ்சமாகவும், ஈஸ்வரனாகவும் இருக்கின்ற சத்குரு பகவான் **ஸ்ரீ தத்தாத்ரேயர்** நம் அனைவரின் வழியாகவும், படிப்படியாகத் தன்னைத் தானே உணர்ந்துக்கொள்கிறார். தன்னையே எல்லாவற்றிலும் காண்கின்றார். அவரது படைப்பின் பரிணாமத்தின் அர்த்தமும் இதுதான். நம் வாழ்க்கை என்னும் அனுபவத்தின் அடிப்படைப் பயனே நாம் இந்தப் பிரபஞ்சம்தான் என்னும் உண்மையை உணரும்போது, நாம் அந்த ஈஸ்வரனுக்கு வேறாக இல்லை என்ற நம்முடைய சுயத்தை நாம் நேரடியாக உணர்ந்துக் கொள்வதாகும்.

## 10.நிர்வாணம் (அவதூதர்)

நிர்வாணம் என்றால், உடைகள் ஏதுமில்லாமல் அம்மணமாக இருப்பது என்று பலரும் நினைத்துக் கொள்கின்றார்கள். ஆன்மீகத் தத்துவத்தில், மோட்சம், முக்தி மற்றும் நிர்வாணத்தின் கருத்துக்கள் பெரும்பாலும் ஆன்மீக விடுதலையை நோக்கிய மனிதனின் தனித்துவமான பாதைகளாக வெளிப்படுகின்றன. மோக்ஷம் என்பது, இந்து தத்துவத்தில் ஆழமாக வேரூன்றிய ஒரு சொல், பிறப்பு மற்றும் மறுபிறப்பு (சம்சாரம்) சுழற்சியில் இருந்து விடுபடுவதைக் குறிக்கிறது. இது உலகாயத பந்தங்களிலிருந்து, கட்டுப்பாடுகளிலிருந்து இந்த உடலும், மனமும் விடுதலை அடைவதைக் குறிக்கின்றது.

நிர்வாணம் என்பது நம் சுயத்தில் இருக்கும் ஒரு உயரிய அனுபவம். அந்த நிலையில் மனதின் இருமைகளாக இருக்கின்ற அனைத்து அசுத்தங்கள், தவறான பார்வைகள், பேராசை, கோபம் மற்றும் மாயை ஆகியவற்றிலிருந்து விடுபட்ட உயர் அறிவு நிலை. நிர்வாணம் என்பது, துக்கம், துன்பம், வலி, வேதனை, நோய், இறப்பு இல்லாத பரம அமைதியின் பேரின்ப நிலையைக் குறிக்கிறது.

மேலும் தனிப்பட்ட உயிராகிய ஜீவன் அந்த தூய உணர்வுடன் தனது எல்லையற்ற மற்றும் அழியாத தன்மையின் இருப்பை மீட்டெடுக்கும்போது, அதன் அத்தனை அடிமைத்தனங்களிலிருந்து விடுபடும். அதை அடையும் வரை எதுவும் நம்மை திருப்திப் படுத்த முடியாது. நம்மிடம் செல்வம், சொத்து, பதவி, பெயர், புகழ், வாழ்க்கை வசதிகள் என எது இருந்தாலும், மனதிற்கு தன் சுயத்தை உணராமல் திருப்தி என்பதே ஏற்படாது. மனம் முழுமையான அந்த தூய அறிவுடன் தனது ஒருமைப்பாட்டை உணரும் போது, அது அதன் ஐக்கியத்தை உணர்ந்து கொள்கிறது.

நிர்வாணம் என்பது உங்களைப் பற்றிய முழுமையான மற்றும் மாறாத அறிதல். உடலையும், மனதையும் தாண்டிய நிலையில், நாம் பார்க்கும் அனைத்தும் நம்முடைய மனதின் கண்ணோட்டத்தில் மட்டும்தான். இந்த மனம் உலகை நமக்காக புலன்களின் வாயிலாக விளக்குகிறது. இதனால் நமக்கு உலகம் வெளிப்படுகிறது. உண்மையில் ஒவ்வொருவருக்கும் அவரவர்கள் மனம் சார்ந்த தனித்த உலகம் உள்ளது.

இதை நாம் நம்முள் உண்மையாக உணரும்போது, மனம் கடந்த அந்த தூய அறிவு நிலையில் எல்லாவற்றையும் என்னுடைய இருப்பினால் மட்டுமே இருக்கின்றது என்பதைக் கண்டு, மனதின் அத்தனை ஆசைகளும் விடுபட்டுப்போவது. இதுவே மனதிற்கான முழுமையான விடுதலை. இந்த நிலையில் மனதினிடம் எதுவுமே அறிய முடியாத,

எதன்மீதும் ஆர்வமற்ற வெறுமை நிலையில், தன் இருப்பை தான் அறியும் உண்மை நிலை உண்டாகும்போது, அதை **நிர்வாணம்** எனப்படுகின்றது.

சுருங்கச் சொன்னால், படைப்பாகிய மனிதன் என்ற உயிரானது படைத்தவனான பரமனாக ஆவதற்கே விழைகின்றது. பொருளாதாரம் சார்ந்த பிழைப்பில், இது மேன்மேலும் எதையாவது அடைவது என்ற முயற்சிக்கான பல எண்ணங்கள் மற்றும் செயல்களாக வெளிப்படுகின்றது. அத்தகைய வயிற்றுப் பிழைப்பைக் கடந்து பிரபஞ்ச நிகழ்வான வாழ்வைப் பற்றி அறியும் ஆர்வம் வந்த நிலையில், இதுவே உயிர்மெய் அறியும் உயரிய நிலைக்கு முன்னேறி, ஞானோதயம் அடையும் அல்லது நிர்வாணம் எய்தும் நோக்கம் அதன் இலக்காக மாறுகின்றது.

பொதுவாக, பிழைப்பு என்ற நிலையில், மனிதன் எதையும் தன் ஐம்புலன்களால் உணர்ந்து, காரண அறிவால் பகுத்தறிந்து புரிந்துகொள்வது இயல்பு. இத்தகைய புரிதல்மூலம் நிகழும் செயல்கள் அவ்வப்போது பெறக்கூடிய வெற்றிகள் மற்றும் பயன்களின் மூலம் மகிழ்ச்சியைத் தரும். மகிழ்ச்சி என்ற நிலை தற்காலிகமான ஒன்றே என்பதால், அது கடந்து சென்றபின், மீண்டும் மீண்டும் மகிழ்ச்சி அடைவதற்கான முயற்சிகள் தொடரும். இது ஒரு சுழல். இதுபோன்ற தற்காலிகமானவற்றைத் தேடியலைவதன் காரணமாக இருப்பது மாயை. அதாவது நிரந்தரத் தன்மையற்ற ஒன்றை நிரந்தரம் என்று நம்புதல் தவறு என்ற புரிதல் மேலோங்கும்.

மேலும், இதே பிழைப்புத் தளத்தில், பிறப்பு முதல் இறப்பு வரை, மனிதனாகிய உயிரானது இடைவிடாது ஏதோ செயல்களைப் புரிகின்றது. எண்ணங்களாகத் தோன்றிச் செயல்களாக வெளிப்படும் நிகழ்வுகளுக்கு உண்டான செயல் விளைவானது நிச்சயம் உண்டு. அத்தகைய தன்னுடைய செயல் விளைவுகளின் பயனை, செயல்புரியும் உயிரானது அனுபவித்தாக வேண்டும் – இப்பிறவியிலேயோ அல்லது மற்றொன்றிலோ அதை அவசியம் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்.. இதைக் **கன்மம்** அல்லது **கர்மவினை** என்பர்.

பெயர், மொழி, இனம், மதம், சாதி, கல்வித் தகுதி, பதவி, செல்வ வளம், செல்வாக்கு போன்ற பல்வேறு சமூக அடையாளங்களால் ஒரு உயிரானது **'நான் இன்னார்'** என்று தனக்கு ஒரு தனிப்பட்ட அடையாளத்தைப் பெற்று, இத்தகைய புற அடையாளங்களே தான் என்று நம்புகின்றது. அறியாமையால் விளையும் தனித்த இந்த அடையாளமே ஆணவம் எனப்படுவது. அந்த வகையிலே, **ஆணவம், கன்மம், மாயை** ஆகிய மூன்றையும் மும்மலங்கள் என்று குறிப்பிடுவதுண்டு. மலங்களாகிய இந்த அசுத்தங்களால் அகத்தே உள்ள உண்மையான உயிரானது மாசுபட்டதைப் போன்ற தோற்றம் ஏற்படுகின்றது. ஆனால், அசுத்தம் மற்றும் மாசுபடுதல் ஆகியவை புறத்தன்மை சார்ந்தவையே.

எனவே, இதுவரைக் கண்ட மிக உயரிய ஆன்மீக சாதனைகள் (பயிற்சிகள்) மூலம் இவற்றைக் களையும்பொழுது, மனிதன் என்ற உயிரானது, தன்னுடைய உண்மையான தன்மையை நேரடி அனுபவமாக, தரிசனமாக, அநுபூதியாக அறிந்துணரகின்றது. படைப்பாகிய உயிரானது உயிர்மெய் அறியும், தளைகளற்ற இப்பேரானந்த நிலையே **ஞானோதயம்** அல்லது **நிர்வாணம்** அல்லது **சமாதி** என்றும் அழைக்கப்படுகின்றது.

**பிரம்மவித் ப்ரஹ்மைவ பவதி** என்ற வாக்கியத்திலிருந்து, தனித்து விடப்பட்ட ஜீவன் அதன் முழு இருப்பையும் தன்னுள் உணரும்போது, அந்த தூய அறிவாகிய ப்ரஹ்மத்தில் கலக்கின்றது. அதாவது, ப்ரஹ்மத்தை உணர்ந்தவன் அந்த ப்ரஹ்மமாகவே ஆகின்றான். இந்த நிலையை **நிர்வாணம்** என்று அழைக்கப்படுகிறது.

## தத்தாத்ரேயர் பாரம்பரையில் நிர்வாணம்

நிர்வாணம் என்பதற்கு நேர் அர்த்தம், '**தீபத்தை ஊதி அணைப்பது**'. ஒரே சூடாக தகித்துக்கொண்டு, ப்ரகாசித்துக் கொண்டிருந்த சுடர் அடியோடு இல்லாமலே போய்விடுவது தான் நிர்வாணம். இப்படி அக்னியை ஒரு க்ஷணத்தில் அடியோடு இல்லாமல் செய்துவிடுவதுப் போன்று, வேறு எதையும் இவ்வாறு செய்ய முடியாது.

அவ்வாறே, நீரைக் காய்ச்சி, வற்றடித்து நீராவியாக மாற்றி இல்லாமல் செய்யலாம். அப்படியே மற்ற பூதங்களையும் இல்லாமல் செய்யலாம் என்றாலும், உண்மையில் அவைகள் அழிவதில்லை. வேறு ஒரு பரிமாணத்திற்கு போகின்றன என்பதே உண்மை.

அதாவது, அவையெல்லாம் அணுக்களினால் ஆனதால், நாம் அழிந்துவிட்டதாக நினைத்தபிறகும், நம் கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் வேறு ரூபத்தில் அவைகள் இருந்து கொண்டுதானிருக்கும்.

பொருள் (Matter) என்பதை என்றுமே அழிக்க முடியாது. ஆனால், நெருப்பு எனும் அக்னி அணுகளாலானது அல்ல. (நெருப்பு எரிவதற்குத்தான் ஆக்ஸிஜன் வேண்டுமே தவிர, அந்த நெருப்பை ஆக்ஸிஜன் அணுக்கள்தான் என்று தவறாக நினைத்து விடக்கூடாது). அணுக்களால் உண்டாகாததால் அக்னியைத்தான் அடியோடு ரூபமே இல்லாமல் செய்து நம்மால் அழிக்க முடிகிறது. அதுப்போன்று அடையாளமே இல்லாமல் அழிந்து போவதுதான் நிர்வாணம் என்கின்றோம். பஞ்சபூதங்களிலேயே மிகவும் வீர்யமானது நெருப்பு. நெருப்பிம் சிறிய பொறி நம்மீது பட்டால்கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்த சிறியப் பொறியே பெரிய ஜ்வாலையாகி ஊரையெல்லாம் கொளுத்திவிட முடியும்.

காற்று, நீர் முதலான மற்ற எந்த பூதத்துக்கும் இத்தனை வீர்யம் இல்லை. ஆனாலும், அதிகம் வீர்யம் கொண்ட நெருப்பை மட்டுமே நம்மால் அழிக்க முடிகிறது. அதுவே, காற்றை அழிக்க முடியுமா? முடியாது.

பொதுவாக, நம்மிடம் காணப்படுகின்ற **ஜீவாத்ம பாவம்** என்ற ஒன்று கண், காது, மூக்கு முதலான அநேக அவயவங்களைக் கொண்ட இந்த உடலின் பல்வேறு கரணங்கள் பல்வேறு அநுபவங்களைப் பெற்றுக்கொண்டு மிகவும் திடமாக நம்மிடம் இருக்கின்றது.

மனம், சித்தம், புத்தி, அஹங்காரம் என்ற இந்த நான்கைக் கொண்ட அந்தக்கரணம் நம் ஒவ்வொருவருக்கும் உடல் அடிப்படையில் தனித்தனியாக இருப்பதினால்தான் ஜீவன் என்ற பாவம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. நம்மால் இந்த அந்தக்கரணங்களை கட்டுப்பாட்டில் வைக்க முடியவில்லை. அத்தகைய அந்த அந்தக்கரணத்தின் ஆசைகளை நம்முடைய உடல் புலன்களின் வாயிலாக அனுபவித்துக் கொண்டே இருக்கிறது. அதனால் இந்த '**உடலே நான்**' என்று நம்மை நினைக்க வைத்து, நமக்கான ஜீவாத்ம பாவம் ஆணிவேர் போன்று ஆழமாக பிடித்துக் கொண்டது.

மிகுந்த வீர்யத்துடன் இருக்கின்ற நெருப்பைப் போன்று, அந்த ஜீவ பாவனையை அடியோடு அழித்துவிடுவதும், அந்த நெருப்பைப் போன்று அணைப்பதுதான் என்பதாலேயே இதற்கும் '**நிர்வாணம்**' என்று பேர் கொடுத்தார்கள். மற்றபடி உடலில் துணி இல்லாமல் இருக்கும் நிர்வாணம் பற்றிக் கூறவில்லை.

'**நிர்வாணம்**' என்று புத்தர்தான் முதலில் கூறினார் என்று ஒரு வாதம் இருக்கின்றது. அவருக்கு முன்பாகவே கீதையில் பகவான், ஸ்தித ப்ரஜ்ஞனை (ஞான நிலையிலேயே ஊன்றியவனை) பற்றி கூறும்போது, **"ப்ரஹ்ம–நிர்வாணம்–ருச்சதி"** (ப்ரம்ம நிர்வாணத்தை அடைகிறான்) என்றே கூறியிருக்கின்றார்.

மேலும், 'தனக்குள்ளேயே அடங்கி சுகமாக களித்துக் கொண்டு உள்ளோளியிலேயே முழுகிப்போன உத்தம யோகி, உயிர் வாழும்போதே ப்ரம்மமாயிருந்து ப்ரம்ம நிர்வாணம் அடைகிறான்' என்று 'ஸந்நியாஸ யோகம்' என்ற அத்யாயத்தில் சொல்கிறார்:

யோ (அ)ந்த: ஸுகோ (அ)ந்தராராம–ஸ்ததாந்தர்–ஜ்யோதிரேவ ய: |
ஸ யோகீ ப்ரஹ்ம–நிர்வாணம் பரஹ்மபூதோ (அ)திகச்சதி ||

இதில் வித்யாசம் என்னவெனில், புத்தர் '**நிர்வாணம்**' என்று மட்டும் கூறியிருக்க, ஸ்ரீ கிருஷ்ணரோ 'ப்ரஹ்ம **நிர்வாணம்**' என்கிறார். அதாவது, புத்தர் '**நிர்வாணம்**' என்று மட்டுமே

கூறுவதால், அவரிடம் ஜீவாத்ம பாவம் அடிபட்டு, அழிவுபட்டு, ஒரே சூன்யமாய் நின்று விடுவதை மட்டுமே குறிப்பிடுகிறார். அதற்குமேல் ஒரு நிலை இல்லை என்பது அவரது கூற்று.

ஆனால், சனாதன தர்மத்தின் வழி வந்த ஸ்ரீ கிருஷ்ணர் ஜீவாத்மா அழிந்துபோய் ஒரே சூன்யமாகிவிடாமல், ஜீவாத்ம பாவம் அழிந்தாலும், அங்கு அந்த பரமாத்மாவான தூய அறிவு ப்ரம்மமாகவே இருக்கின்றது என்ற இருப்பை விட்டுவிடாமல் விளக்குகின்றார். இந்த பரப்பிரஹ்ம பரிபூர்ண நிலையைக் குறிக்கத்தான் ஸ்ரீ கிருஷ்ணர் 'ப்ரஹ்ம **நிர்வாணம்**' என்று கூறுகின்றார்.

இத்தகைய **நிர்வாணம்** எனும் மெய்ஞானம் அறிந்த நிலையில், படைத்தவன் வேறு, படைப்பாகிய தான்வேறு என்ற, காரண அறிவின் அறியாமையால் விளையும் இருமை நிலை அகன்றுவிடும். தன்னுள்ளே ஒளிரும் உயிரே, படைப்பின் மூலாதாரமாக எவ்வுயிரினுள்ளும் ஒளிர்வதையும், அந்த ஒரே உயிர் சக்தியே பிரபஞ்சமெங்கும் வியாபித்து இருப்பதையும் அனுபவப்பூர்வமாக அறிகையில், அறியாமை இருள் விலகி, மெய்ஞானம் எனும் சுத்தஞானம் சுடர் விட்டு பிரகாசிக்கும்.

**'நான் உடல் அல்ல, நான் மனமும் அல்ல,'** என்ற தெளிவு ஏற்பட்டு, உடல் மற்றும் மனத்தின் காரணமாக ஏற்படும் அனுபவங்களான இன்பம், துன்பம், ஏமாற்றம், அச்சம், பிணி, கர்வம், விருப்பு, வெறுப்பு, ஏக்கம், பாரபட்சம் போன்ற அனைத்தும் நீங்க, எதையுமே ஒரேமாதிரியாக ஏற்கும், வாழ்வை **'உள்ளது உள்ளபடி'** காணும் / அனுபவிக்கும் சமநிலை கைவரப்பெறும். இத்தகைய இருமையற்ற சமநிலையில் ஒருவர் நிலைத்திருப்பதே **நிர்வாணம்** எனும் **சஹஜ சமாதி** ஆகிய பேரானந்த நிலை.

இத்தகைய நிலையை உடலானது உயிருடன் இருக்கும் நிலையிலேயே அடைந்துள்ள மெய்ஞானியரை ஜீவன்முக்தர்கள் என்று போற்றி வழிபடுவது, மற்றும் தானும் அந்நிலையை அடைய அவர்களது வழிகாட்டுதலை வேண்டுவது (ஞானோதயம் அடைந்த பின்னர் பிறருக்கு வழிகாட்டுவோரே 'சத்குரு' ஆவர்) என்பது தொன்மையான இந்த பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர் பரம்பரையில் எக்காலத்திலும் இயல்பான வழக்கமாக இருந்துள்ளது. இன்றும் உள்ளது. நிர்வாணம் எனும் ஞானோதயம் என்ற உன்னத நிலையை அடைவது மனிதராகப் பிறவியெடுத்த அனைத்து உயிர்களுக்கும் சாத்தியமே.

**ஓம் தத் ஸத்!**

# ஸ்ரீ தத்தாத்ரேயர் தசாங்கம்

## (சாதனா முறைகள்)



ॐ अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

அஞ்ஞான இருளால் பார்வை இல்லாமல் பயணிக்கின்றவர்களுக்கு,
ஞானம் எனும் அறிவு ஒளிப்பிரகாசத்தினால், அவனது கண்களைத் திறந்து,
சரியான பாதையைக் காட்டிக் கொடுக்கும் சத்குருவுக்கு பணிவான வணக்கங்கள்.

ப்ரக்ஞன்